பக்கங்கள் : இருபத்தெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 16 ஞாயிற்றுக்கிழமை (29.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :63

# சமாதானத்தைப் பாதிக்கின்ற செயல்களுக்கு இடமளியாதீர்!

## முப்படைத் தளபதிகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த உத்தரவு

கொழும்பு,ஜனவரி29

**சமாதான முயற்சிகளை அர்த்தமுள்ள வகையிலும், பயனுள்ள வழியிலும் முன்னெடுத்துச் செல்வதைத் தடுக்கக்கூடிய எந்தவகையான செயற்பாடுகளுக்கும் இடமளிக்கவேண்டாம்.**

**- நாட்டின் முப்படைத் தளபதிகளுக்கும் பொலீஸ்மா அதிபருக்கும் இப்படி உத்தரவு பிறப்பித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

படைத்தளபதிகளுக்கான இந்தப் பணிப்புரையை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் விடுத்தார் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஜெனீவாவில் ஆரம்பிப்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்ட பின்னரும் -

அரச படைகளுக்கு எதிரான சகல வன்செயல்களையும் நிறுத்துவதாக விடுதலைப் புலிகள் உறுதி அளித்த பிறகு -

அமைதியைப் பாதிக்கும் செயற்பாடுகளில் அரசுப் படைகள் ஈடுபட்டன என்று அரச உயர்மட்டத்துக்குத் தகவல் எட்டியதையடுத்தே ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்திருக்கின்றார் எனத் தெரியவருகிறது.

கிளிநொச்சியில் கடந்த புதனன்று நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய பின்னர் புலிகள் தரப்பின் நிலைப்பாடு குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்திருந்தார்.

இருதரப்புகளும் வன்செயல்களை நிறுத்துவதாக இணக்கம் கண்டிருப்பது குறித்தும், அரச படைகளுக்கு எதிரான எல்லா வன்செயல்

(18ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம் தம்பதியர் லண்டன் புறப்பட்டனர்

கிளிநொச்சி, ஜன.29

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் நேற்று கிளிநொச்சியில் இருந்து லண்டன் புறப்பட்டனர்.

இலங்கை விமானப் படையினரின் விசேட ஹெலிகொப்டர் ஒன்றில் இருவரும் காலை 9.30 மணியளவில் பயணமாகினர்.

இருவரையும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கேணல் தீபன், கேணல் ஜெயம், கேணல் சூசை, கேணல் யாழினி, கேணல் துர்க்கா உட்பட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் வழியனுப்பிவைத்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு அன்ரன் பாலசிங்கமும் அடேல் பாலசிங்கமும் லண்டனை நோக்கிப் பயணித்தனர்.

நோர்வேயின் விசேட தூதர் எரிக்சொல்ஹெய்முக்கும் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையில் கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொள்வதற்காக அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் கடந்த திங்களன்று கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்தனர்.

(ஐ-12-190)



பாலசிங்கம் தம்பதியர் நேற்று கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டபோது...

## திருமண வீட்டில் கிரனேட் வீச்சு வவுனியாவில் நால்வர் காயம்!

வவுனியா,ஜன.29

வவுனியா, கதிரேசன் வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றிரவு 8.30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததில் 3 குழந்தைகளும் பெண் ஒருவரும் காயமடைந்தனர்.

வர்த்தகர் ஒருவரின் வீட்டில் திருமண நிகழ்விற்காக உறவினர்கள் குழுமியிருந்த சமயம் அவ்விடத்தை நோக்கி கிரனேட் வீசப்பட்டது என்று கூறப்படுகிறது.

சைக்கிளில் வந்த நபர் ஒருவர் வர்த்தகரின் வீட்டின் மீது கிரனேட்டை வீசினார் என்றும்-

அது பாரிய சத்தத்துடன் வெடித்தது எனவும் வவுனியா பொலீஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நால்வரும் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஐ-12)

## துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பதவிகளுக்கான வாக்களிப்பில் மூவர் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த வாக்களிப்பு நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் கே.கந்தசாமி, பேராசிரியர் இ.குமாரவடிவேல், பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூல் ஆகியோரே துணைவேந்தர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

இப்பதவிக்கு ஆறுபேர் போட்டியிட்டனர். தற்போதைய துணைவேந்தர் உட்பட 24 பேரவை உறுப்பினர்கள் இந்த வாக்களிப்பில் கலந்துகொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட மூவரின் பெயர் விவரங்களும் துணைவேந்தரினால் நேற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. மானியங்கள் ஆணைக்குழு கல்வியமைச்சு ஊடாக அதனை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கும். புதிய துணைவேந்தரை ஜனாதிபதியே அறிவிப்பார்.

தற்போது பதவியில் உள்ள துணைவேந்தரது பதவிக் காலம் எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி முடிவடைவதால் புதிய துணைவேந்தர் மார்ச் மாதம் முதல் வாரத்தில் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-8)

## அமெரிக்கத் தூதரின் கருத்துக்கு எதிராகத் தமிழகத்தில் கோஷங்கள்!

### பல நகரங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்கள்

சென்னை,ஜன.29

தமிழீழ விடுதலைப் புலிகளை எச்சரிக்கும் தொனியில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அண்மையில் வெளியிட்ட கருத்துக்களைக் கண்டித்து தமிழ்நாட்டில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் சென்னை, மதுரை, தஞ்சை, கோவை ஆகிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தலைமை வகித்தார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகத் துணைத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை க.இராசேந்திரன், விடுதலைச் சிறுத்தைகள் இயக்கப் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன், மார்க்சிய பெரியார் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் வே.ஆனைமுத்து, தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, மக்கள் கவிஞர் இன்குலாப், புரட்சிகர இளைஞர் முன்னணியின் நிர்வாகி தமிழ்மணி,

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவா பேச்சில் முஸ்லிம் தரப்புக்கும் இடமளிக்கவேண்டும் என்கிறது மு.கா.

கொழும்பு,ஜன.29

ஜெனீவாவில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறித்து தெளிவான உறுதிமொழியை வழங்குவதற்கு அரசும் புலிகளும் நடவடி[illegible]

- இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் ஆரம்பமாகவுள்ள உத்தேசப் பேச்சுக்களில் முதற்கட்டமாகப் போர்நிறுத்த ஒப்பந்தம் குறித் [illegible] அதிலும் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்களின் போது யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக அதனை

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



உடுவில், மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட புற்றுநோய் காப்பகம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. காப்பகத்தின் முன்புறத் தோற்றத்தையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# வீட்டைச் சோதனையிடப் போவதாகக் கூறிய கொள்ளையர்களால் தங்க நகைகள் சூறை!

## கல்வியங்காடுப் பகுதியில் நேற்று அதிகாலை பெரும் கொள்ளை

வலி.கிழக்கு,ஜன.29

வாள், கத்தி, பொல்லுகள் என்பனவற்றுடன் வீடு ஒன்றினுள் நுழைந்த கும்பல் ஒன்று வீட்டைச் சோதனையிடப்போவதா கக் கூறி பெருந்தொகை தங்க நகைகளைக் கொள்ளையிட்டிருக்கின்றது.

கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியில் உள்ள ஒரு வீட்டிலேயே நேற்று அதிகாலைவேளை இந்தத் துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

கட்டைக் காற்சட்டை அணிந்த சுமார் பத்துப் பேர் முகத்தின் ஒரு பகுதியை கறுப்புச் சீலையால் மறைத்துக் கட்டியவாறு வீட்டினுள் நுழைந்தனர் என்று கூறப்படுகிறது.

முன்னதாக வெளியே நின்றவாறு வீட்டில் இருந்தோரைக் குரல் கொடுத்து அழைத்த கொள்ளையர்கள் அவர்கள் விழித்துக் கொண்டதும் ஒளிர்ந்துகொண்டிருந்த மின் குமிழ்களை அடித்து நொறுக்கிவிட்டு ஜன்னல் கம்பிகளைப் பெயர்த்துக்கொண்டு வீட்டின் உள்பகுதிக்குள் புகுந்தனர் என்று கூறப்படுகிறது.

'புலிகள் குண்டு வைத்திருக்கிறார்கள். சோதனையிடவேண்டும்' என்று கூறி வீட்டில் இருந்தோரை மிரட்டிய கொள்ளையர்கள் அறையினுள் நுழைந்து சோதனையிட்டுள்ளனர். அப்போது அங்கிருந்த அலுமாரியினுள் சிறிய 'சூட்கேஸ்' ஒன்றிலுள் வைக்கப்பட்டிருந்த சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்திருக்கின்றனர்.

வீட்டில் இருந்தோர் பீதியால் குரல் எழுப்பி உதவிகோரியபோதும் அயலவர்கள் எவரும் உதவிக்கு வரவில்லை என்று கூறப்படுகிறது.

வீட்டில் இருந்த கையடக்கத் தொலைபேசி, மணிக்கூடுகள் என்பனவும் கொள்ளையர்களால் அபகரிக்கப்பட்டிருக்கின்றன.

பின்னர் கொள்ளையர்கள் துணிகரமாக வீதி வழியே தப்பிச் சென்றிருக்கின்றனர்.

இந்தக் கொள்ளைச் சம்வம் தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (ஐ-180)

# பல்கலைக்கழக செயற்பாடு தொடர்பான முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.29

கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கும் யாழ்.பல்கலைக்கழக உயரதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக கற்பித்தல், கற்றல், நிதி, நிர்வாகம் போன்ற விடயங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் துணைவேந்தர், பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர் மற்றும் சில பேரவை உறுப்பினர்கள், மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்

(ஐ-8)

# சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் மூல விக்கிரகத்தை பெயர்த்து திருட்டு!

வலி.கிழக்கு,ஜன.29

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் மூல விக்கிரகம் உட்பட விக்கிரகங்கள் பெயர்க்கப்பட்டு தங்கத் தகடுகள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. ஒலிபெருக்கி சாதனம் உட்பட வேறு பல பொருள்களும் திருடப்பட்டிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஆலயத்தின் முன்பக்கக் கதவினை இரும்புச் சட்டங்களின் உதவியுடன் தகர்த்து உள்நுழைந்த திருடர்கள் இந்தத் திருட்டினை மேற்கொண்டிருக்கின்றனர்.



பெயர்க்கப்பட்டுள்ள மூல விக்கிரகம்

மூல விக்கிரகமான விநாயகர் சிலை இருப்பிடத்தில் இருந்து கிளப்பப்பட்டு அதன் அடியில் வைக்கப்பட்டிருந்த தங்கத் தகடுகள் உட்பட ஐந்து பவுண் தங்கம் அபகரிக்கப்பட்டிருக்கின்றது. ஆலயத்தின் பைரவர் விக்கிரகத்தையும் திருடர்கள் பெயர்த்திருக்கின்றனர். அத்துடன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம், ஒலி பெருக்கி சாதனங்கள் என்பனவும் திருடப்பட்டிருக்கின்றன.

திருடர்கள் ஆலயத்தில் நீண்டநேரம் தங்கி நின்று திருட்டில் ஈடுபட்டிருப்பது தெரியவந்துள்ளது. இந்தத் திருட்டுத் தொடர்பாக ஆலய பரிபாலன சபையினர் கோப்பாய் பொலீஸாரிடம் முறையிட்டிருக்கின்றனர். (ஐ-180)

# பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடற்படையினரால் கைதாகி விடுதலை

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் ஊர்காவற்றுறைப் பகுதியில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரும் கலைப் பீடத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரும் நேற்று ஊர்காவற்றுறையில் உள்ள தமது நண்பர் ஒருவரின் வீட்டிற்கு சென்றனர் என்றும் -

இவர்கள் இருவரும் ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியில் வைத்து கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் கடற்படையினர் இரண்டு மணிநேரம் தடுத்து வைத்து தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்திற்கும் முறையிட்டார்.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட இருவரும் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க மேலும் அவகாசம்

கொழும்பு,ஜன.29

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாமல்போன - இரண்டாம், மூன்றாம் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலைப் பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆகியோர் எதிர்வரும் பெப்ரவரிமாதம் 15ஆம் திகதிவரை தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான விண்ணப்பங்களை அண்மையில் உள்ள வலயக்கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் - என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கடந்த 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி வெளியான பத்திரிகை அறிவுறுத்தலுக்கு அமைவாக விண்ணப்பிக்கவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

சகல பரீட்சார்த்திகளும் பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவை அருகில் உள்ள பிரதேச செயலகங்களில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பிவைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12)

# மோட்டார் சைக்கிள் திருடியோர் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ். நகரப்பகுதியில் மோட்டார் சைக்கிளை திருடிய இருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் நகரப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றினை சுமார் 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட வயது மதிக்கத்தக்க இருவர் களவாக எடுத்துச் சென்றனர்.

இதனை அவதானித்த மக்கள் குறிப்பிட்ட இருவரையும் யாழ். கஸ்தூரியார் வீதியில் வைத்து மடக்கிப் பிடித்து நையப் புடைத்தனர். குறிப்பிட்ட இரண்டுபேரும் உடுவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களிடம் பல மோட்டார் சைக்கிள்களின் சாவிகள் காணப்பட்டன எனவும் கூறப்படுகிறது.

நேற்று மாலை இருவரையும் யாழ். பொலீஸ் நிலையத்தில் பொதுமக்கள் ஒப்படைத்தனர். (ஐ-7)



மட்டக்களப்பு - பொலநறுவை எல்லைப் பகுதியில் கடந்த வியாழனன்று படையினரும் ஒட்டுக்குழுவினரும் இணைந்து நடத்திய தாக்குதலில் உயிரிழந்த மேஜர் கபிலனின் வித்துடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. மேஜர் கபிலனின் வீரவணக்க நிகழ்வும் அங்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு, தளபதி நாகேஸ், விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளர் கீர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் உள்ளிட்ட தளபதிகளும் போராளிகளும் பங்கேற்றனர்.

திகிளிவெட்டையிலிருந்து மேஜர் கபிலனின் வித்துடல் ஊர்வலமாக [illegible] தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது. மேஜர் கபிலன் ஒரு குழந்தையின் தந்தையாவார். இறுதி நிகழ்வு காட்சிகளைப் படங்களில் காணலாம். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# வறட்டுப் பிடிவாதத்தை தெற்கு விரைவில் கைவிட வேண்டி நேரும்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் விடயத்தில் இடைஞ்சலாக இருக்கும் விவகாரம் என்ன தெரியுமா?

இந்தப் பிரச்சினைக்கு அடிப்படையான மூலங்களை - யதார்த்த நிலைமைகளை - புரிந்துகொள்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்குத் தென்னிலங்கைச் சிங்களம் தயாரில்லை என்பதுதான்.

மொழியாலும், கலாசாரத்தாலும், வாழ்வியல் பண்புகளாலும், வாழிடப் பிரதேசத்தாலும் தனித்துவம் கொண்ட ஒரினமாக தமிழ்மக்கள் இலங்கைத் தீவில் வாழ்கின்றார்கள்.

சிங்களவர்களுக்கு இந்த இலங்கைத் தீவில் வாழ்வதற்குள்ள சுயநிர்ணய உரிமை போன்ற அடிப்படை உரிமை தமிழினத்திற்கும் இந்தத் தீவில் உள்ளது என்ற வரலாற்று உண்மையை - கள யதார்த்தத்தை - மெய்மை நிலையை - தென்னிலங்கைச் சிங்களம் ஏற்க மறுப்பதும் அங்கீகரிக்கப் பின்னிற்பதுமே, இப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண இடமளிக்காமல் முட்டுக்கட்டையாக இருக்கின்றன்.

தமிழர் தரப்போடு பேசி இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காணுவதற்கு இடைஞ்சலாக, வறட்டுப் பிடிவாதத்துடன் தான் போட்ட நிபந்தனைகள் ஒவ்வொன்றாக உடைந்து வருவதை - தகர்ந்து போவதை - தென்னிலங்கைப் பேரினவாதம் இன்று மலைப்புடன் பார்த்து நிற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

* நாட்டின் சட்டரீதியான அரசாங்கத்தின் கடப்பாடுகளையும் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் பாதிக்கும் - பறிக்கும் - விதத்தில் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதால் முதலில் அதை மாற்றுவது குறித்துத்தான் பேச்சு.

* அனுசரணைப் பணி வழங்கும் நோர்வேத் தரப்பினர் வெள்ளைப் புலிகள். அவர்களை அப்பணியிலிருந்து துரத்துவோம்.

* இந்தியா போன்ற நேச மற்றும் அயல் நாடுகளின் அனுசரணை உதவி, சமாதான முயற்சிகளில் அதிகம் நாடப்படும்.

* எந்த அமைதிப் பேச்சும் ஆசிய நாடு ஒன்றில்தான்.

* பயங்கரவாதப் புலிகளின் பிரதிநிதியான அன்ரன் பாலசிங்கம், வன்னி செல்வதற்கு ஹெலிகொப்டர் வசதி செய்து கொடுக்கக்கூடாது.

- இவை எல்லாம் அண்மைக் காலத்தில் யதார்த்தம் புரியாமல் தென்னிலங்கைப் பேரினவாதம் - இலங்கை அரசுடன் கூட்டுச் சேர்ந்து நிற்கும் பௌத்த, சிங்கள மேலாண்மைவாத சக்திகள் - விடுத்த அறிவிப்புகளும், கடைப்பிடித்த கொள்கைகளுமாகும்.

இந்த நிலைப்பாடுகள் இப்போது என்னவாயின? அடியோடு தூக்கி குப்பைக் கூடைக்குள் வீசிவிட வேண்டிய நிலைக்குச் சென்றுவிட்டன.

* தற்போதுள்ள புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பாடுகளை செம்மையாக - முழுஅளவில் - நடைமுறைப்படுத்துவது குறித்துத்தான் பேச்சு. அந்த உடன்பாட்டு ஏற்பாடுகளை மாற்றியமைப்பது குறித்தோ, திருத்துவது குறித்தோ பேசுவதற்கே இடமில்லை என்று ஜெனீவாவில் நடைபெறும் முதல் சுற்று சந்திப்புக் குறித்து திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர் புலிகள். அதற்கு அரசும் இணங்கியுள்ளது.

* அனுசரணைப் பணியைத் தொடரும்படி நோர்வேயை, இலங்கை ஜனாதிபதியும் அவரது அரசினரும் இன்று இறைஞ்சுகின்றனர்.

* இலங்கை அமைதி முயற்சிகளில் நேரடியாகப் பங்களிக்க முடியாது என்று இந்தியத் தரப்பு இலங்கை ஜனாதிபதிக்கு நேரில் தெளிவாகக் கூறிவிட்டது.

* ஆசிய நாடு ஒன்றில் தான் பேச்சு என்ற நிபந்தனை 'அம்போ' ஆகிவிட்டது. ஐரோப்பிய நாடுகளின் மைய நிலமான சுவிற்ஸர்லாந்தில் பேச வேண்டிய கட்டாயத்துக்கு இணங்கவேண்டியதாயிற்று, இலங்கை அரசுக்கு.

* புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், கட்டுநாயக்காவிலிருந்து வன்னி செல்லவும், வன்னியிலிருந்து கட்டுநாயக்கா மீளவும் அதியுயர் பாதுகாப்பு ஏற்பாடுகளோடு ஹெலிகொப்டர் வசதியும் அரசினால் வழங்க வேண்டி நேர்ந்தது.

- இவை, அண்மைக் காலத்தில் யதார்த்தம் புரியாமல் தென்னிலங்கை விடுத்த அறிவிப்புகளும், களநிலையையும் மெய்மை நிலையையும் அது உணர்ந்து கொண்ட பின்னர் நிஜத்தில் நிகழ்ந்தவையும் ஆகும்.

இனப்பிரச்சினையின் மூல விவகாரங்களில் கூட இலங்கை அரசும் தென்னிலங்கைப் பேரினவாதமும் இதே போன்றுதான் யதார்த்தங்களை உணராமல் புறந்தள்ளி உதாசீனம் செய்து தொடர்ந்தும் அடக்குமுறை நிலைப்பாட்டை எடுக்கின்றன.

இப்போது - அண்மைக்காலத்துக்குள் - ஒரு குறுகிய இடைவெளிக்குள் - அமைதி முயற்சிகள் தொடர்பான பல்வேறு விடயங்களில் களநிலைமையும் யதார்த்தமும் புரியாமல் அறிவிப்புகளை விடுத்து கடைசியாக அந்த அறிவித்த விடயங்களில் உறுதியாக நின்று - ஸ்திரமாக அதைப் பற்றி நின்று - தாக்குப்பிடிக்க முடியாமல் விட்டுக்கொடுத்து அரசியல் ரீதியாக வாங்கிக்கட்டிக் கொண்டது போல -

இனப்பிரச்சினைக்கான பல அடிப்படை விடயங்களிலும் மெய்மை நிலைமை புரியாமல் தான் கொண்டிருக்கும் வறட்டுப்பிடிவாதத்தை வாங்கிக்கட்டிக்கொண்டு விரைவில் ஒரேயடியாகக் கைவிடும் நிலைக்கு தென்னிலங்கை தள்ளப்படப் போகின்றது என்பது உறுதியாகத் தென்படுகிறது; அதற்கான சூழ்நிலை கருக்கொண்டு வருவதை உணரமுடிகின்றது.

# யாழ்.புற்றுநோய் சிகிச்சை நிலையம் நிதி ஒதுக்கீட்டில் அடியோடு புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

இலங்கையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையங்களுக்கென ஸ்பெயின் அரசு வழங்கிய நிதியை ஒதுக்கீடு செய்வதில் யாழ்ப்பாணம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

25 மில்லியன் யூரோக்களை ஸ்பெயின் அரசு இலங்கைக்கு வழங்கியிருந்தது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையங்களுக்கு விலை உயர்ந்த மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்த நிதி வழங்கப்பட்டது.

இந்த நிதியை ஒதுக்கீடு செய்வது தொடர்பான கூட்டம் கடந்த 25 ஆம் திகதி கொழும்பில் உள்ள சுகாதார அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. ஆனால், இக் கூட்டத்திற்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. இக்கூட்டத்தில் காலி, மஹரகம, கண்டி மற்றும் பதுளை ஆகிய இடங்களில் செயற்படும். புற்றுநோய் சிகிச்சை நிலையங்களுக்கு மட்டும் நிதியைப்பிரித்து ஒதுச்கீடு செய்யப்பட்டதாக மருத்துவசேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசமான யாழ்ப்பாணத்தைப் புறக்கணித்துவிட்டு, ஆழிப்பேரலை தாக்காத கொழும்பு மஹரகம, கண்டி, பதுளை போன்ற இடங்களில் உள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையங்களுக்கு ஆழிப்பேரலை பாதித்த இடங்களுக்கென வழங்கப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளமை மருத்துவ வட்டாரங்களில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு பலவித சிரமங்களின் மத்தியில் சமீப காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. நாட்டில் மேம்படுத்தப்படவேண்டிய சிகிச்சை நிலையமாக இது உள்ளது. இந்த நிலையில் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணத்திற்கான புற்றுநோய் சிகிச்சை நிலையம் அடியோடு புறக்கணிக்கப்பட்டுள்ளமை மருத்துவ வட்டாரங்களில் மட்டுமல்லாது பொது மக்களிடமும் அதிர்ச்சியையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இதனையடுத்து சுகாதார அமைச்சு மற்றும் ஸ்பெயின் அரசு ஆகியவற்றிடம் தொடர்புகொண்டு இந்த விடயம் குறித்து பேசவுள்ளார் என்று மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவித்தார்.

(ஓ-6-15)

# நாகர்கோவில் மகாவித்தியாலயம் மூடப்படவில்லை என்கிறார் அதிகாரி

கரவெட்டி,ஜன.29

நாகர்கோவில் மகாவித்தியாலயம் மூடப்பட்டதாகக் கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்று வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார்.

இந்த வித்தியாலயம் மூடப்பட்டதாக கடந்த சில நாள்களாக வடமராட்சிப் பகுதியில் பரவிய வதந்தி குறித்துக் கேட்டபோதே பணிப்பாளர் அதில் எவ்வித உண்மையும் இல்லை என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த பல வடருங்களுக்கு முன்பு விமானக் குண்டு வீச்சில் நாகர்கோவில் மகாவித்தியாலய மாணவர்கள் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்தனர். அவர்களுடன் பாடசாலையும் இடம் பெயர்ந்தது. பின்னர் பல இடங்களில் மேற்படி பாடசாலை நடத்தப்பட்டு தற்போது பருத்தித்துறை புலோலியிலுள்ள மெதடிஸ்த தேவாலய மண்டபத்தில் இயங்கிவருகிறது.

நாகர்கோவில் மக்கள் தற்போது கற்கோவளம் புனித நகர்ப் பகுதியில் குடியமர்ந்துள்ளனர். அங்கிருந்து இப்பாடசாலை மூன்று மைல் தூரமாகும்.

இதன் காரணமாக ஒழுங்கான வரவின்மையால் மாணவர் எண்ணிக்கை குறைந்துள்ளது எனினும் பாடசாலை இயங்கிவந்தது.

தற்போது போர் மூளும் அச்சம் காரணமாக அப்பகுதி மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்ததால் மாணவர் வரவில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆசிரியர்கள், அதிபர் போன்றோரையும் மாணவர்களையும் அண்மையில் உள்ள பாடசாலைகளுக்குத் தற்காலிகமாக இடம்மாற்றியுள்ளோம். ஆனால், பாடசாலை மூடப்படவில்லை. தற்போது மாணவர்களும் பெற்றோரும் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குவரத் தொடங்கியுள்ளனர்.

எனவே, மேற்படி பாடசாலை எதிர் வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் புலோலியில் இயங்கவுள்ளது.

மேலும் மேற்படி மாணவர்களின் வசதி கருதி நிரந்தரமாக [illegible]ர்களது நிரந்தர தற்போதைய வதிவிடமா[illegible] கற்கோவளம் புனித நகரில் இயங்கு வதற்கும் விசேட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று கூறினார் பணிப்பாளர். (ஓ-70)

# புற்றுநோயாளர் காப்பகம் உடுவிலில் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன 29

உடுவில், மருதனார்மடம் சபாபதிப் பிள்ளை வீதியில் 'கேன்' தொண்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட புற்று நோயாளர் காப்பகம் நேற்றுக் காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

காப்பகத்தின் அலுவலகத்தினை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

காப்பக அலுவலகத்திற்கான அங்குரார்ப்பணக் கல்லினை யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி திரை நீக்கம் செய்தார்.

உரும்பிராய், கரந்தனைச் சேர்ந்தவர்களும் லண்டனில் வசிப்பவர்களுமான கே.தர்மகுலசிங்கம் தம்பதியினர் தமது பெற்றோர் நினைவாகத் தாம் அமைத்துக் கொடுத்த புற்றுநோய்க் காப்பகத்தின் இரண்டு விடுதிகளையும் திறந்து வைத்ததுடன் அங்குரார்ப்பண கல்வினையும் திரைநீக்கம் செய்தனர்.

காப்பகம் அமைந்துள்ள நிலத்தினை அன்பளிப்பாக வழங்கிய அமரர் கணபதி ஐயர் ஸ்ரீராகவன் ஐயர் அவர்களுடைய நினைவுக் கல்லினை செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளுக்கு செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமை வகித்தார்.

இதில் ஆசியுரையினை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் வாழ்த்துரைகளை மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் , யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி கே. சிவபாலன் உட்பட பலரும் நிகழ்த்தினர்.

வரவேற்புரையை 'கேன்' யாழ். குழுத் தலைவர் டாக்டர் செல்வி நவமலர் கனகரத்தினமும், பிரதம விருந்தினர் உரையினை யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் உடுவில் அரச அதிபர் திருவாகரன், காப்பக நிர்வாகி ரி.ஸ்ரீகணேசராஜா மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஓ-7-86)

## உதயவாக்கு

அச்சம் இருக்கும் வரையில் நீ அறிவாளியாக மாட்டாய்!

- ஓர் அறிஞர்

## நாளை

தை 17
திங்கட்கிழமை
30.01.2006
திதி: பிரதமை
முன்னிரவு: 06.51 வரை
நட்சத்திரம் : திருவோணம்
முற்பகல் : 10.06 வரை
சுபநேரம் : 12.36-02.06
ராகுகாலம் : 08.06 - 09.36
(யாழ்ப்பாண வலய நேரப்படி)

# இயல்புநிலை பாதிப்பு; இ.போ.சவிற்கு வருமானக் குறைவு

வடமராட்சி,ஜன.29

யாழ்.குடாநாட்டில் கடந்த ஒருமாத காலத்துக்கும் மேலாக இயல்பு நிலை பாதிக்கப்பட்டதால் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபகுதிச் சாலைகளின் வருமானம் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் சாலைகளினால் நடத்தப்பட்டு வந்த பஸ்சேவைகளில் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்ததால் சில சேவைகள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன மற்றும் சில சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

குடாநாட்டிலுள்ள இந்த மூன்று சாலைகளினதும் வருமானம் இயல்பு நிலை பாதிக்கப்பட்டதால் சராசரி 60 வீதமளவில் வீழ்ச்சியடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-173)

# எஸ்.பி. மீதான ஊழல் வழக்கு தள்ளுபடியானது நியாயமே!

## மேன்முறையீட்டு நீதிமன்று தீர்ப்பு

கொழும்பு, ஜன.29

முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி.திஸநாயக்கவை லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலைசெய்து மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து லஞ்ச, ஊழல்களை விசாரிக்கும் ஆணைக்குழு தாக்கல் செய்திருந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்தது.

1994ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் அமைச்சராக பதவி வகித்த எஸ்.பி.திஸாநாயக்க 2 கோடியே 90 லட்ச ரூபா பெறுமதியான சொத்துக்களை முறைகேடாக சேர்த்துவைத்திருந்தார் எனத் தெரிவித்து லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னதாக மேல்நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கில் எஸ்.பி.திஸநாயக்கா நிரபராதியென தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது. இந்த மனுவின் விசாரணைகள் நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான ஜகத் பாலபட்ட பெந்தி, சிசிர டி ஆப்ரூ ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றன.

எஸ்.பி.திஸாநாயக்க மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கான சாட்சிகளோ, ஆவணங்களோ இல்லாததால் மனு தள்ளுபடி செய்யப்படுவதாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் அறிவித்தனர்.

(ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF CAMBRIDGE ENGLISH EXAMINATIONS

திருநெல்வேலி BRITISH COLLEGE OF ENGLISH கல்லூரியில் Cambridge, பல்கலைக் கழகத்தின் ஆங்கிலப் பாடநெறிகளைப் பின்பற்றி 28.11.2005 இல் University of Colombo இல் நடைபெற்ற University of Cambridge இன் PRILIMINARY ENGLISH TEST இல் சித்தியடைந்த சாதனையாளர்கள் வருமாறு


R.THAYANITY KARAVEDDY


R.SALINI JAFFNA


V.S.PIRASANNA JAFFNA


P.SUTHAGINI JAFFNA


N.SIYAMALAN JAFFNA(NF)


M.MAYOORAH JAFFNA(NF)


K.GUNAALAN KARAVEDDY(NF)


12th January இல் British Council Colombo இல் நடைபெற்ற IELTS பரீட்சையில் எமது கல்லூரியில் பயின்ற Mas.S.Nimalan, Thirunelvely, Band - 7 எடுத்துச் சித்தியடைந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2006ஆம் ஆண்டு June 10 திகதியில் நடைபெற இருக்கும் University of Cambridge இன் ஆங்கிலப் பரீட்சைகளான பரீட்சைக்கான PRILIMINARY ENGLISH TEST (PET) FIRST CERTIFICATE IN ENGLISH (FCE) வகுப்புக்கள் இப்போது நடைபெறுகின்றன. இன்றே ஒரு வகுப்பில் சேர்ந்து உங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக்கொள்வதோடு ஒரு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழையும் பெற்றுக் கொள்ளுங்கள். IELTS வகுப்பில் எப்போது வேண்டுமானாலும் சேர்ந்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

**BRITISH COLLEGE OF ENGLISH**

இல.14, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுக்குமிடையே), தொ.பே. 077 9179476,
CAMBRIDGE ESOL WEBSITE : www.cambridge.esol.org

(அ/47568)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றும் திரு. சிற்றம்பலம் சபாரத்தினம் கச்சாய் வீதி, கொடிகாமம் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சிற்றம்பலம் சீதேவி**

(வரணி வடக்கு, வரணி)

அவர்கள் கடந்த 15.01.2006 ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்த செய்தி கேள்வியுற்று அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு அலுவலகம்,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (46087)(11-32)

கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கும்:
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள்,
ஏனைய கூட்டுறவு அலுவலக உத்தியோகத்தர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



கெயார் சர்வதேச சுனாமிக்கு பின்னான முல்லைத்தீவு அபிவிருத்தியும் மீள்கட்டுமானத் திட்டத்துக்குமான திட்டப் பணிப்பாளர்

**கந்தையா கணேசலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.
(46079)(32-11)

கெயார் சர்வதேசம்.

## கலந்துரையாட ஏற்பாடு

வரணி,ஜன.29

பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்குதல் மற்றும் கிராம அலுவலர் பிரிவு எல்லைகளை மறுசீரமைத்தல் பற்றி சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் விரைவில் கலந்துரையாடல் நடத்தப்பட உள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். இக்கலந்துரையாடலுக்கு பிரதேச மட்ட கிராமிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு ஆலோசனை கோரப்பட்டு ஆவண செய்ய உள்ளதாகக் கூறப்பட்டது. கொடிகாமம் புதிய பஸ் நிலைய கட்டடத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அரச அதிபர் இத்தகவலை வெளியிட்டார். (ஓ-170)

## குப்பை போடுவோரை தவிர்க்கக் கோரிக்கை

குருநகர்,ஜன.29

யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் ஆரம்ப பிரிவு வகுப்புக் கட்டடம் உள்ள குருநகர் 6ஆம் குறுக்கு வீதியில் குப்பை கூழங்களைப் போடுவதைத் தவிர்க்குமாறு மேற்படி பாடசாலை நிர்வாகத்தினர் பொது மக்களை கோரியுள்ளனர். பாடசாலை மாணவர்கள் சார்பில் இது குறித்த அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ளது. (ஓ-51)

## முன்பள்ளி திறப்பு விழா

சில்லாலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் சனசமூக நிலையம், முன்பள்ளி ஆகியவற்றின் திறப்பு விழா நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம அதிதியாக வலி.தென் மேற்கு பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் கலந்துகொள்வார். (ஓ-135)

# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

## Diploma in Video Mixing

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 30/01/2006 :- 08.30

UNICEF

# VACANCY NOTICE

UNICEF Sri Lanka invites applications from qualified nationals of the Republic of Sri Lanka for the following posts:

**1. OPERATIONS ASSISTANT - GENERAL SERVICE, LEVEL 5**

**DUTY STATION:** Killinochchi

**MAJOR DUTIES:**

Under the supervision of the Head of Zone Office, performs a variety of financial, administrative and clerical duties essential for the efficient operation and management of the Zone Office. Serves as custodian/cashier for office petty cash or special cash account in accordance with financial rules & regulations. Creates monthly accounting records and requests for replenishments for payment by Colombo as often as needed. Reviews office bills and liaises with Colombo office for prompt payment. Manages all arrangements related to travel and informs staff and missions accordingly. Organizes allocation of vechicles and keeps track of all travel plans. Works with Area security Coordinator and Deputy ASC to alert of movements of staff and seek approval prior to initiation of any trip.

**WORK EXPERIENCE:**

- 5 years of general administrative work experience which should include a good knowledge of standard clerical practices and procedures. UN or NGO experience preferred.

**EDUCATIONAL QUALIFICATIONS:**

G.C.E. A' Level with pass in English/Mathematics preferably supplemented by technical or university courses in the field of finance.

**2. SR.PROJECT ASSISTANT MONITORING AND EVALUATION, GENERAL SERVICE, GS7**

**DUTY STATION:** Killinochchi

**MAJOR DUTIES:**

Under the supervision of the Head of Zone office , undertake field visits to assess and monitor 39 tsunami transit camps and conflict related activities. Preparation of minutes of field missions and liaison with sectoral staff. Collect and assemble data and background information. Prepare tables, graphs and other statistical data for technical review/monitoring. Create and maintain a database of all information. Preparation of draft situation report on a monthly basis. Preparation of situation report for Killinochchi and Mullaitivu and maintenance of same. Communicate with counterparts including local authorities and INGO/NGOs. Attend meetings to minute the meetings and provide information to respective sectors at the Killinochchi office.

**WORK EXPERIENCE:**

Seven (07) years of progressively responsible clerical or administrative work, of which at least one year was closely related to developing and maintaining databases, monitoring and evaluating activities is support of programme implementation. Experience in the use of Access software (with SQL and VBA codes).

**EDUCATIONAL QUALIFICATIONS:**

G.C.E. A' Level with a pass in English/Mathematics, preferably supplemented by technical or university courses in the field related to the work of the organization.

**FOR ALL POSTS**

**LANGUAGES**

Excellent knowledge of English, the working language of the duty station both oral and written, to enable to interpret the written instructions made available to carry out tasks assigned and interact with other staff members. Knowledge of local languages Sinhala/Tamil preferred in order to communicate with contracted staff, Government and outside contacts.

**SPECIALISED TRAINING/OTHER SKILLS**

computer literacy. Ability to work in an international and multicultural environment. Respect for diversity. A positive and pleasant disposition towards work responsibility. Ability to work with confidential information. Signature of Code of conduct.

Those who possess the required qualifications and wish to apply for the above posts should submit their applications to the Human Resources Officer, UNICEF, 5, Githanjali Place, Colombo 03, or to the Project Officer, UNICEF Zone Office, 3 Kumaraswamy Road, Ganesapuram, Killinochchi, under **CONFIDENTIAL COVER** by 13 February 2006. Separate applications should be submitted if applying for more than one position. **Please indicate of the top left corner of the envelope the position applied for including duty station.**

**Applications canvassing in any form will be a disqualification.**

**'UNICEF is a non-smoking working environment.'**

**"Applications from qualified female candidates are encouraged."**

**Interviews will be granted only to short-listed condidates.**

(C/17564)(21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுப் பற்றி ஆராய்வதல்ல; இயல்பு நிலையை ஏற்படுத்துவதுதான் இன்றைய முதல் தேவை!

ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கை இன்னும் ஒரு மாதத்தில் நான்காவது ஆண்டை கடந்துவிடும்.

ஆரம்பத்தில் சுமுகமாக நடைமுறையில் இருந்த அந்த உடன்பாடு, காலம் போகப் போக நெருக்கடிக்குள் சிக்கித்திணறித் தவித்து இப்போது விழிபிதுங்கி நிற்கின்றது.

அந்த உடன்பாட்டின் சரத்துக்களில் கூறப்பட்ட நடைமுறைகளை முறைப்படி ஸ்ரீலங்கா அரசு அமுலாக்கம் செய்யாத காரணத்தால் இன்று அந்த உடன்பாடு செயலிழந்துபோகும் சூழல் எழுந்துள்ளது. இந்த உடன்பாடு மூலம் நிம்மதியான இயல்பு வாழ்க்கை கிட்டும் என நம்பியிருந்த மக்கள், எதுவும் நடக்காத நிலையில் - விரக்தியின் விளிம்பில் நின்று- கொந்தளித்த தன் எதிரொலியாக வன்செயல்கள் வெடித்தன.



பிரபாகரன் சந்திப்பு இடம் பெற்றது.

**இராணுவ நெருக்குவாரங்கள்**

வன்செயல்களை அடக்குவதற்கு எனக் கூறிக்கொண்டு படைகளின் பிரசன்னம் எங்கும் விரிவுபடுத்தப்பட்டு இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரிக்கப்பட்டன.

மக்களின் கொந்தளிப்பு ஆரம்பத்தில் சாத்வீகமான வழியில் முன்னெடுக்கப்பட்டது. பின்னர் அது வன்செயல்களாக வெடித்தது. இதன் உச்சகட்டமாக மக்கள் எழுச்சிக்குத் தலைமை தாங்குபவர்களைத் தேடியழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பாதுகாப்பு என்ற போர்வையில் மீன்பிடி, விவசாய நடவடிக்கைகளுக்குத் தடைகள் போடப்பட்டன.

இவற்றால் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகரவேண்டிய நிலை ஏற்பட்டது. பலநூறு குடும்பங்கள் இடம்பெயர்ந்தன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்த இதற்கு முன்னர் இருந்த தெற்குத் தலைமைகள் உரிய நடவடிக்கை எடுக்காததன் விளைவை இன்று

## சந்தர்ப்பத்தை மஹிந்த தவறவிட்டால் தனியரசுப் போராட்டம் தவிர்க்க முடியாதது

ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்நோக்க வேண்டியவராக இருக்கின்றார். பேரினவாதக் கூச்சலுடன் அவர் ஆட்சிக்கு வந்த விதம் குறித்து சந்தேகம் கொண்ட தமிழ்மக்கள் இவரால் எதுவும் செய்யமுடியாது என்று கருதி தமது எதிர்ப்புச் செயற்பாடுகளை அதிகரித்தனர்.

**நோர்வேயின் காலில் வீழ்ந்தார் மஹிந்த**

மக்களின் கொந்தளிப்பால் எழுந்த வன்செயல்களுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில், தமது பங்காளிகளான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய கட்சிகளைப் புறம் தள்ளிவிட்டு, நோர்வேயின் காலில் விழவேண்டியவராக மஹிந்த மாறினார்.

இந்தியா மற்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் அழுத்தம் காரணமாகவும் நோர்வேயை அனுசரணையாளர்களாக அவர் ஏற்க வேண்டி வந்தது.

மஹிந்த ஆட்சிக்கட்டு ஏறிய பின் முதல் தடவையாக நோர்வே அனுசரணையாளர் குழுவின் தலைவரும், அமைச்சருமான

**வாராந்த அரசியல் அலசல்**
**குகா**

எரிக் சொல்ஹெய்ம் கடந்த திங்கட்கிழமை இலங்கை வந்தார்.

அரசுத் தரப்பு, எதிர்க்கட்சித்தரப்பு, முஸ்லிம் தரப்பு எனப் பல்வேறுபட்ட தரப்பினர்களுடன் சொல்ஹெய்ம் முதலில் கலந்துரையாடினார். அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

நோர்வேயை ஏற்கமுடியாது. ஆசிய நாடு ஒன்றிலேயே பேச்சு நடத்தவேண்டும் என்று ஆட்சி ஏறிய நாள்முதல் உத்தியோக பூர்வமாக அறிவித்துவந்த மஹிந்த ராஜபக்ஷ, இறங்கி வந்து சுவிட்சர்லாந்தில் பேச்சை வைக்கலாம் என்ற யோசனையை அப்போது முன்வைத்தார். அந்த யோசனையுடன் கிளிநொச்சி வந்த சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சுக்களை நடத்தினார்.

எந்த நேரத்திலும் நாலாம் கட்டப் போர் வெடிக்கும் என்ற ஏதுநிலை ஏற்பட்டிருந்த நேரத்தில், அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என சர்வதேசம் எதிர்பார்த்திருந்த நேரத்தில், கடந்த புதன்கிழமை சொல்ஹெய்ம் - பிரபாகரன் சந்திப்பு இடம் பெற்றது.

**ஜெனிவாவில் பேச புலிகள் இணக்கம்**

இந்தச் சந்திப்பின் முடிவை சர்வதேசம் மட்டுமல்ல தெற்கும், தமிழ் மக்களும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தனர்.

இச்சந்திப்பின் பின் வெளியான முடிவு சகல தரப்புக்களுக்கும் ஆறுதல் அளிப்பதாக அமைந்தது. ஜெனிவாவில் பேச இரு தரப்புக்களும் இணங்கியமை குறித்து சகல மட்டங்களிலும் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கா முதல் ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா உட்பட பல் வேறு நாடுகளும், சமாதானத்தில் நாட்டம் கொண்ட சர்வதேச மற்றும் உள்ளூர் அமைப்புக்களும் முண்டியடித்துக் கொண்டு தமது வரவேற்பை வெளிப்படுத்தின.

"விடுதலைப் புலிகளின் முடிவு மகிழ்ச்சியைத் தருகின்றது. அது வரவேற்கத் தக்கது. ஜனாதிபதியின் தீவிர முயற்சிக்கு கிடைத்த வெற்றி இது" - என அரசின் ஊடகப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வாகூடக் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் முடிவு வெளியான கையோடு ஜனாதிபதி செயலகத்தில் அவர் விசேட ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தி இந்தக் கருத்தை வெளியிட் டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் முடிவு வந்த கையோடு பேச்சுக் குறித்துச் சமாதானச் செயலகத்தின் ஆலோசனையைப்பெற ஜனாதிபதி தொடங்கிவிட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

**இப்போது பிரச்சினை அதுவல்ல**

சமாதானச் செயலகத்துடன் ஆராய்ந்து பேச்சில் கலந்துகொள்பவர்களைத் தெரிவு செய்வதிலும் திகதியை நிர்ணயிப்பதிலும் ஆர்வம் காட்டுவதற்கு முன்னர் ஜனாதிபதி செய்யவேண்டிய முக்கிய பணி ஒன்று உள்ளது. பேச்சை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கையை முதலில் அரசு கவனத்தில் எடுக்கவேண்டும்.

எரிக்சொல்ஹெய்ம் - பிரபாகரன் சந்திப்பையடுத்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேச்சை ஆரம்பிக்க முன் அரசு என்ன செய்யவேண்டும் என்பதை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் விளக்கியிருந்தார்.

**பேச்சுக்கான புறச்சூழல் ஏற்படுத்தப்படுவது அவசியம்**

"சுவிற்சர்லாந்தில் இந்தப் பேச்சை நடத்த நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

"ஆனால், அதற்கு முன்னதாக இங்கு இயல்பு நிலை ஏற்படுத்தப்படவேண்டும். மக்கள் இராணுவ பயங்கரவாதத்துக்குப் பயந்து தமிழர் தேசத்தில் இருந்து அகதிகளாக விலகிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நிம்மதியான - அமைதியான - வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் பேச்சுக்கள் ஒழுங்காக நடக்கமுடியும்.

"சமாதானச் சூழ்நிலைக்கு ஏதுவான புறநிலையை உருவாக்குவது அரசின் கடமை. அரசு நினைத்தால் - ஜனாதிபதி நினைத்தால் - அரசபடைகளுக்குக் கடும் உத்தரவைப் போட்டு ஒட்டுப்படைகளின், கூலிப்படைகளின் அட்டூழியங்களை நிறுத்தி, கொலைகளை நிறுத்தி அமைதியான சூழ்நிலையை உருவாக்க முடியும்.

"உடனடியாக வன்முறைகள் அதாவது அப்பாவித் தமிழ் மக்கள்மீது ஏவி விடப்படுகின்ற அரச பயங்கரவாத வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும். அவை நிறுத்தப்பட்டு சுமுகமான - நல்லெண்ண - புறநிலை உருவாக்கப்படவேண்டும் என அனுசரணையாளர்களிடம் தலைவர் திருப்பித்திருப்பி வலியுறுத்தினார்".

பாலசிங்கம் சொன்னதை அரசு புரிந்து கொண்டிருந்தால், ஜனாதிபதி விளங்கிக் கொண்டிருந்தால், செய்தி கிடைத்ததும் முப்படைத் தளபதி என்ற வகையில் உடனடியாகப் பாதுகாப்புக் கவுன்ஸிலைக் கூட்டித் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கான புறநிலையை ஏற்படுத்தத் தடையாகவுள்ள விவகாரங்களை ஆராய்ந்து இருக்க வேண்டும். அது தொடர்பாக முடிவுகளை எடுத்து உடனடியாகத் தனது படைகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியிருக்கவேண்டும். அதைவிடுத்து சமாதான செயலகத்துடன் ஆராய்ந்து பெரிய அளவில் பயன் கிட்டப் போவதில்லை.

2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தவுடன், படையினர் முகாம்களுக்குள் அனுப்பப்பட்டனர். காவலரண்களில் மட்டும் படையினர் இருந்து செயற்பட்டனர்.

அப்போது ஜனாதிபதியாக - கூட்டுப் படைகளின் தளபதியாக - சந்திரிகா குமாரதுங்க இருந்தபோதும், யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கீழ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த உத்தரவுகளைப் படைத் தலைமைகள் செம்மையாகச் செயற்படுத்தின.



விடுதலைப்புலிகளின் முடிவும் செய்தியும் வந்தவுடன் உண்மையில் சமாதானத்தைச் செயற்படுத்தும் மஹிந்த அக்கறையுடையவராக இருப்பாரானால், தனது படைகளைக் கட்டுப்படுத் தும் நடவடிக்கைகளை முனைப்புடன் முன்னெடுத்து இருக்க வேண்டும்.

சமாதானச் செயலகத்துடன் ஆலோசனைகளை நடத்துவதற்கு முன் வன்முறைகளை நிறுத்த வசதியாக படைகளுக்கு உடனடி உத்தரவுகளை விடுத்திருக்கவேண்டும்.

அப்படி உத்தரவு ஏதும் விடப்பட்டதற்கான அறிகுறிகளைக் களத்தில் காணமுடியவில்லை. படையினரின் பிரசன்னம், சோதனைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

**புலிகள் மீது மீண்டும் தாக்குதல்**

விடுதலைப் புலிகளின் அறிவிப்பு வந்து 24 மணி நேரத்துக்குள் மட்டக்களப்பில் ஒட்டுக்குழுக்களும் புலனாய்வுப்பிரிவும் இணைந்து ஊடுருவல் தாக்குதலை நடத்தியுள்ளன.

இந்தச் சம்பவத்தால் சீற்றமடைந்துள்ள விடுதலைப் புலிகள் உடனடியாக யுத்தநிறுத்

## 50 வருடம் பொறுமை காத்த தமிழரை இன்னும் காக்கக் கேட்பது நியாயமா?

தக் கண்காணிப்புக்குழு, நோர்வேத் தரப்பு ஆகியவற்றுக்கு அறிவித்துள்ளனர்.

அரசுத் தரப்பும் ஜனாதிபதியும் விடுதலைப் புலிகளின் முடிவால் மகிழ்ச்சி கொண்டாடுவதைவிடுத்து, படையினரின் வன்செயல்களை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விரைந்து அத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்து இயல்பு நிலையை அரசு தோற்றுவிக்காவிட்டால், பேச்சு நடக்காது. இதுதான் இன்றைய யதார்த்த நிலையாகும்.

வன்செயல்களை நிறுத்தும் அறிவிப்பு ஒருதலைபட்சமாக அறிவிக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமே நோர்வேக்கு அந்த உறுதிமொழியைக் கொடுத்திருந்தன.

விடுதலைப் புலிகள் தரப்பில் அந்த அறிவிப்பு பேணப்படும் நிலையில், அரச தரப்பில் இருந்து நல்ல சமிக்ஞை எதுவும் வெளியாகவில்லை.

நேரடிப்பேச்சுக்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதில் அரசுக்கு உண்மையில் கரிசனை இருக்குமானால் அதனை நடைமுறையில் காட்ட வேண்டும்.

டிசெம்பர் மாதத்துக்கு முன்பு இருந்த நிலைகளுக்குப் படைகள் திரும்பவேண்டும். தேடுதல்கள், சுற்றிவளைப்புக்கள், சோதனைகள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

இதற்கான உத்தரவுகளை ஜனாதிபதி விரைவாக விடுப்பதன் மூலமே இயல்பு நிலை தோற்றுவிக்கப்படமுடியும். அரசு - விடுதலைப் புலிகள் சுமுகமான சூழ்நிலையில் ஜெனிவாவில் பேச்சுக்களை நடத்த வாய்ப்பு உருவாகும். இல்லாவிட்டால் விளைவுகள் வேறு விதமாக அமையும்.

**மஹிந்தவுக்கான கடைசிச் சந்தர்ப்பம்**

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நோர்வே அனுசரணையாளர்களுடன் பேசும்போது, மஹிந்தவுக்குக் கடைசிச் சந்தர்ப்பம் இது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தை மஹிந்த பற்றுறுதியுடன் சிக்கெனப்பிடித்து தமது காய் நகர்த்தல்களை மேற்கொள்ளாவிட்டால், விளைவை அவரே அனுபவிக்கவேண்டிய சூழல் ஏற்படும்.

இதை அவர் புரிந்து செயற்படப்போகின்றாரா? அல்லது பங்காளிக் கட்சிகளான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்றவற்றின் வலைக்குள் சிக்கி நட்டாற்றில் நிற்கப் போகின்றாரா? அல்லது படைத் தலைமைகளின் விட்டேந்தியான போக்குக்கு இடமளித்து, கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை இழக்கப்போகின்றாரா? என்பவற்றுக்கு அடுத்து வரும் நாள்கள் பதில் சொல்லும்.

இந்நிலையில், நோர்வேயின் அனுசரணைக்குழுவின் தலைவரும் அந்நாட்டு அமைச்சருமான எரிக்சொல்ஹெய்ம் இலங்கை விவகாரத்தில் பட்டறிந்த அனுபவத்தில் கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார்.

"சமாதான முயற்சி தொடங்கி 8 வருடங்களாகின்றன. ஆனால், சாதித்தவையோ மிகச் சொற்பமே. சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றியளிக்கவேண்டுமானால் அளவுக்கு அதிகமான பொறுமை தேவை" என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

**இன்னும் பொறுமை காக்க கோருவது சர்வதேச நியாயமா?**

கடந்த 50 வருடங்களாகத் தமிழர் தரப்பை ஏமாற்றி வரும் சிங்களத் தலைமைகளின் போக்கால், தமிழர்கள் பொறுமை இழந்து ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்ற வரலாறு சொல்ஹெய்முக்குத் தெரியாததல்ல. நோர்வேயின் பங்களிப்பு ஆரம்பமாகி 8 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் - பயன் ஏதும் கிட்டாத நிலையில் - இன்னமும் தமிழர் தரப்பு பொறுமை காக்கவேண்டும் என்று அவர் கூறுவதை தமிழர் தரப்பு ஏற்பது எவ்வளவு தூரம் சாத்தியமானது?

50 வருடகால நீண்டநெடிய தேசிய விடுதலைப் போராட்டம் கடந்த 8 வருடங்களாக சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் கடந்த 4 வருடங்கள் - சமாதான காலத்தில் - சிங்களத் தலைமைகளின் ஏமாற்றுப் போக்கை சர்வதேசம் உணர்ந்துகொள்ள வாய்ப்பும் கிட்டியது.

மாறிமாறி ஆட்சிக்கு வந்த ரணிலும் சரி, சந்திரிகாவும் சரி தமிழ் மக்களுக்கு எதையும் வழங்கவில்லை. மாறாக இழப்புக்களையும் அவலங்களையும்தான் தந்துள்ளனர்.

இக்காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின்

(13ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

6kw, 5kw, 1.5kw டீசல் ஜெனரேற்றர், றொபின் 15 நீரிறைக்கும் இயந்திரமு விற்பனைக்குண்டு. தொடர்பு: மூர்த்தி, சவன் வீதி, பரவைக்குளம், திருநெல்வேலி.(45991)

Yamaha PSR- 175 நல்ல நிலையிலுள்ள (புதிய) ஓகன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 43 ,பீற்றர் வீடியோ சென்ரர், கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.No. 0776138250.(46108)

பல்சர், சில்வர்,NPMA இலக்கமுடைய 180CC (அலோவீல்) ஒறிஜினல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 521, நாவலர் வீதி, நாவலர் மண்டபம் முன்பாக யாழ்ப்பாணம் (8-6 மணிவரை). (46114)

JO XXXX... எனும் தொடர் இலக்கமுடைய Splender + எனும் மோட்டார் வாகனம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 126, Chapel St., Jaffna T.P 021 222 6047. (46077)

முட்டை இட்டு ஓய்ந்த கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு 1kg 140/= 72A, றக்கா வீதி யாழ்ப்பாணம். T.P 021 222 2597. (46086)

12 அடி நீளமும் 8 அடி அகலமும், 10 அடி நீளமும் 8 அடி அகலமும் உடைய 2 கோழிக் கூடுகளும் ஒரு புதிய லுமாலா மவுண்டன் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு:T.P. No. 222 5179 (46112)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு, ஆடியபாதம் வீதியில் இருந்து முருகன் வீதிக்கு (வெள்ளை வாய்க்கால் வீதி) செல்லும் பாதையில் 2¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6680317, 0776279805. (46109)

மாகியப்பிட்டி சந்திக்கு அண்மையில் வான் பயிர்களுடன் கூடிய தோட்டக்காணி 13 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு வி.தில்லையம்பலம், விஸ்வா மில் அருகில், மாகியப்பிட்டி - சண்டிலிப்பாய். (46101)

## வீடு விற்பனைக்கு

பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் கொக்குவில், பிரம்படி ஒழுங்கையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:T.P.No. 021- 222 6345 (57093)

கொழும்பு, நாரஹேன்பிட்டி அன்டர்சன் தொடர்மாடியில் மேலதிக நிலத்துடன் முற்றிலும் ரைல்ஸ் பதிக்கப்பட்ட கீழ் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0112 508082. (57085)

கொக்குவில் கிழக்கில் மூன்றே முக்கால் பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு, தனிக்கிணறு மற்றும் பிரயோசனங்களுடன் விற்பனைக்கு உண்டு. பாவித்த வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு.தொடர்பு: 0777 079746, 021-222 2638 (57073)

## தவறிவிட்டது

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த, விக்கினேஸ்வரன் உசாயினி என்பருடைய வி. அ. அ. 16.01.2006ஆம் திகதி திங்கட்கிழமை சித்தன்கேணிக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைக்கவும். T.P.No. 021 222 5477. (46174)

Dr.M.A இராஜரட்ணம் என்பவருடைய வி.அ.அ. 090403781 சங்கானையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் டார்சன் கிளினிக், சங்கானை என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.(45964)

## மணமகள் தேவை

இந்து உயர்குடும்பத்தைச் சேர்ந்த, 1969 ஆம் ஆண்டு, பூரட்டாதி நட்சத்திரம், கிரக பாவம் குறைந்த, U.K. இல் நிரந்தர வதியுரிமை கொண்ட மணமகனிற்கும்,1973ஆம் ஆண்டு அச்சுவினி 3ஆம் பாதம் கிரகபாவம் குறைந்த U.K. மணமகனிற்கும் O/L, A/L படித்த சிவந்த அழகிய மெல்லிய பெண் தேவை. தொடர்பிற்கு: 0776248679. (46064)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, உத்தராட நட்சத்திரம் - 33 வயது 8இல் செவ்வாயும் கிரகபாவம் அதிகமுடைய கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில்புரியும் மாதாந்தம் ரூபா 10, 000 வேதனமுடைய பெண்ணுக்கு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ அரச சேவையிலோ அல்லது தனியார் நிறுவனத்திலோ பணிபுரியும் மணமகனை எதிர்பார்க்கின் றோம். கொழும்பில் இருப்பதற்கு வீடு வசதியுண்டு. சீதனம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தொடர்பு: நா.நாகரத்தினம் 383/26, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (46067)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1974 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தில் அரச வேலை புரியும் 5'6'' உயரமான B.B.A பட்டதாரி மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பிற்கு: விளம்பர இல. 2792, மே/பா உதயன், யாழ்ப்பாணம். அல்லது 0777-303813 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.(45986)

## காணவில்லை

N.R என்ற குறியுடைய சிவப்பு வெள்ளை பூச்சி பசுவைக் 24.01.2006 முதல் காணவில்லை. கண்டவர்கள் தொடர்புகொள்ளவும். S.நவரட்ணம், உதயன் முன்னாள் பணிமனை லேன், கைலாசபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P.No. 021 - 4590102. (46070)

கறுப்பில் வெள்ளைப்புள்ளி உடையதும் தொடையில் S.K. என குறி உடையதும் இள வயதான பெரிய பால் மாட்டினை 20.01.2006முதல் காணவில்லை. கண்டவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ச.செல்வராணி, இல.5, கந்தர்மடம் பிள்ளையார் கோயிலடி, பழம் வீதி, யாழ்ப்பாணம். T.P.No. 222 6565 (46106)

## திருமண சேவை

தங்கள் சளைக்காத தேடல் ஆங்கிலம் பேசும் மணமக்களா ?... கவலையே வேண்டாம் ! சுயதெரிவுமுறை முன்னோடி திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயவேல் அமுதனிடம் Australia, Canada, Newzealand, U.K., U.S.A முதலிய நாட்டுக் கடிதக் கோப்புகள் எக்கச்சக்கம்! கடிதக் கோப்புகள் பால், வயது ரீதியாக வகுக்கப்பட்டுள்ளன. இன்னும் பார்த்தகணமே பொருந்தக்கூடியனவா என்பதையும் தெரிந்தும் கொள்ளலாம்! மேலதிக விவரங்களுக்கு கிழமை நாள்களில் மாலை 4.30மணிக்கு மேல் தொடர்பு கொள்க. தொலைபேசி : 2360468, 4514396. (சி-47574)

## VACANCY

| Post | Qualification | Experience | Salary |
|---|---|---|---|
| Computer Instructor | Pass in A/L<br>M.S Office<br>D.T.P<br>Web Designing | 01 Year | Negotiable |
| Computer Typist | Pass in A/L<br>M.S Office<br>D.T.P | 01 Year | Negotiable |
| Computer Hardware Technician | Pass in A/L<br>Diploma in Hardware | 02 Years | Negotiable |
| Computer Trainee | Interesting Students | — | Trainee Salary |

Note :-
Present with your Bio - Data Directly before 5th of February 2006 at 3.00 p.m to 7.00 p.m.

**C.B Computer Academy**
T.P No. 021 -4590291 Station Road, Kondavil.

**Jaffna College Institute of Technology**
Vaddukoddai.

Apply for the following Courses immediately.

**Diploma Course**
Computer Programming & Data Processing
Duration: 1Year *(full time)*

**Technician Certificate**
Electronics Duration: 1Year *(full time)*
(Covers City & Guilds Syllabus)

**Computer Certificate Courses**
**MS OFFICE (Evening Batch 1.00 PM)**
- MS Word
- MS Excel
- MS Access &
- Power Point

*Duration: 4 months*
*Fees : Rs 2500/=*

Printing Technology
- Page Maker
- Photo Shop
- Corel Draw

*Duration: 4 months*
*Fees : Rs 3000/=*

Computer Hardware
*Duration: 3 months*
*Fees : Rs 2000/=*

FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT :-

Director
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.
T.Phone :- 0602213139 E.mail :- jcit@sltnet.lk (C-47574)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-47498)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 06.02.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம்-வட்டுக்கோட்டை, கரன்-ஆலடி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-47561)

## தேவை

*ஜெயா மிக்ஷர் நிறுவனத்திற்கு பணி புரிய பணிப்பெண்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.*

*உரிமையாளர்:-*
**பொ.சண்முகராசா,**
*முகவரி:-*
**295, செம்மணி வீதி,**
**நாயன்மார்கட்டு,**
**யாழ்ப்பாணம்.**
T.P.: **0777 110166.**
(46103)(32-11)

## பாடசாலை சேவை

கொக்குவில், கோண்டாவில், இணுவில், தாவடி ஆகிய இடங்களில் இருந்து யாழ். நகர பாடசாலைகளுக்கு பாடசாலை சேவை (வான்)செய்து கொடுக்கப்படும். தொடர்பு: ச.யோகநாதன், செம்பியன் சந்தி, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். T.P.No. 0776660572. (சி-4756)

## வீடு வாடகைக்கு

யாழ்/கந்தர்மடத்தில் பல்கலைக்கழகத்திற்கு மிகவும் அண்மையில் மாடி வீட்டில் நான்கு அறைகள் கொண்ட சகல வசதிகளும் உடைய (Attached Bath Room) கீழ் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு:T.P.No. 071 30566757. பி.ப 3 மணிக்கு பின் (46100)

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் சகல நவீன வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு : T.P 021 - 222 5283. (46089)

பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: S.S. மரியதாஸ், 32/16,அச்சக வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 6266, 0777575701 (அரச சார்பற்ற நிறுவனங்களுக்குப் பொருத்தமானது). (46111)

## மணமகன் தேவை

யாழ்.இந்து ஜேர்மனி, லண்டன் குடியுரிமையுள்ள 1975ஆம் ஆண்டு அத்தம் 2ஆம் கால் M.L.T., BIO-Chemistry படித்து ஜேர்மனி பல்கலைக்கழகத்தில் Tutor ஆக கடமையாற்றும் P.hD செய்யும் மணமகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கணக்காளர், பொறியியலாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற தொழில் புரிபவர்களும், பட்டதாரிகளும் மணமகனாக எதிர்பார்க்கப்படுகிறது. மணமகள் விரைவில் இலங்கை வரவுள்ளார்.
தொடர்பு: விள.இலக்கம் -2796
உதயன், யாழ்ப்பாணம்.
(46105)(24-11-32)

## கண்ணீர்ப் பூக்கள்



*அப்பா என்று பிள்ளைகள் மட்டும் அல்ல, எங்களாலும் அன்பாக அழைக்கப்பட்ட முன்னாள் யாழ்.கொட்டடி மரக்காலை உரிமையாளரும், சிற்றி காட்வெயர் அன் ஸ்ரோர்ஸ் இல.55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், சிற்றி ஸ்ரீல் இல.135, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், சிற்றி ரான்ஸ்போட்ஸ் சேவிஸ், D 1/1, சென்றல் றோட், கொழும்பு - 12, உரிமையாளருமாகிய*

**அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்** அவர்கள்

*வேட்டி தலைப்பாகையுடன் கம்பீரமான நடை எங்கே?*
*புன்சிரிப்புடன் இனிமையாக பேசும் பாங்கு எங்கே?*
*அனைவரையும் வரவேற்று உபசரிக்கும் பண்பு எங்கே?*
*கனிவான பேச்சும் கள்ளமில்லா சிரிப்பும்*
*அமைதியான பேச்சும் தளராத நெஞ்சுறுதியும் தானெங்கே?*

*அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*இல.55, 57 ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(46079)(32-11-21)

பிரிவால் துயருற்றிருக்கும்:
**பணியாளர்கள்,**
**சிற்றி காட்வெயர்ஸ் அன் ஸ்ரோர்ஸ்,**
**சிற்றி ஸ்ரீல்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
20 ✱ 06 ✱ 1941

ஆண்டவன் அடியில்
31 ✱ 12 ✱ 2005



**திருமதி செந்தில்நாதன் அன்னலட்சுமி**
**(இளைப்பாறிய ஆசிரியை)**

கடந்த 31.12.2005 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் திடீர் மறைவுச் செய்தியறிந்து ஓடோடிவந்து உதவிகள் பலபுரிந்தும் ஆறுதல் கூறியும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சுற்றத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (30.01.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குமுழங்குழி, (சி-47572)
காரைநகர். (21.11.30)

கணவர்
**அருளம்பலம் செந்தில்நாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-பாக். இறுதி டெஸ்ட் இன்று கராச்சியில் ஆரம்பம்

இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே இடம்பெற்றுவரும் போட்டித் தொடரின் இறுதிடெஸ்ட் இன்று கராச்சியில் ஆரம்பமாகிறது.

இதில் பங்குபற்றும் பாகிஸ்தான் அணியின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. முதுகு வலியால் அவதிப்பட்டு ஓய்வில் இருந்து வரும் இன்சமாம் உல்-ஹக் இப்போட்டியில் பங்குபற்ற மாட்டார் எனக் கூறப்பட்டது. ஆனால் அவர் இப்போட்டிக்குரிய அணியின் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

அதேவேளை, தந்தையாரின் மறைவால் மாலிக்கும், அசிம் கமலின் தந்தையார் சுகவீனமடைந்துள்ளதால் அவரும் இப்போட்டிக்கான அணியில் இடம்பெறவில்லை. அவர்களுக்குப் பதிலாக உமர் குல், பைசல் இக்பால் ஆகிய இருவரும் இணைக்கப்பட் டுள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் விவரம் வருமாறு- இன்சமாம் உல்-ஹக் (தலைவர்), யூனுஸ்கான் (துணைத்தலைவர்), சல்மான் பட், இம்சாம்பிக்னற், முகமது யூசுப், பைசால், இக்பால், அயிட் அவ்ரிடி, கமரன் அக்மல், அப்துல்ரசாக், சொகைப் அக்தர், முகமது சமி, ராணா, முகமது ஆசிப் உமர்குல், கனேரியா, அந்ஷத்ஹான் ஆகியோர்.

இதேவேளை, மூன்றாவது தொடரில் பங்குபற்றுவதற்கான இந்திய அணியில் பாரிய மாற்றம் எதுவும் செய்யப்படமாட்டாது என்று கூறப்படுகிறது.

இருந்தாலும் சௌரவ் ஹங்குலிக்கு சந்தர்ப்பம் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு சந்தர்ப்பம் வழங்கப்படுமாக இருந்தால் யாரை அணியில் இருந்து நீக்குவது என்பதில் இந்திய கிரிக்கெட் தலைவருக்கும், பயிற்சியாளருக்கும் பெரும் நெருக்கடியாக இருக்கும்.

கராச்சி மைதானம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானது என்று கூறப்படுவதால் கங்குலியை அணியில் சேர்க்கும் சந்தர்ப்பத்தில் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஒருவரை இடைநிறுத்த வாய்ப்பு உள்ளது. இதுவரை நடந்து முடிந்துள்ள இருபோட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. இதனால் மூன்றாவது போட்டி இவ்விரு அணிகளுக்கும் மிகவும் முக்கியமானதாகும்.

# 11 மாதத்தில் நீச்சல் சாதனை





மூன்று மாதத்தில் குழந்தைகளுக்குத் தலை நிற்கின்றதா? ஐந்து மாதங்களில் தவழ்கின்றதா? எட்டு மாதங்களில் எழுந்து உட்கார்கின்றதா? ஒரு வயதுக்குள் நடக்கின்றதா? - பிறந்த குழந்தையின் செயல்களில் சராசரிப் பெற்றோரின் கவலைகள் இவை களாகத்தான் இருக்கும்.

ஆனால் ஆர்ஜன் பிறந்ததும் அவனது பெற்றோரின் கவலையெல்லாம் அவன் எப்போது நீச்சலடிப்பான் என்பதாகவே இருந்தது. அவனது அம்மா ஆயிஷாவும், அப்பா அக்பரும் நீச்சல் பழக்குபவர்கள் அவர்களுக்குத் தமது பிள்ளை நீச்சல் வீரனாக வரவேண்டும் என்ற விரும்பமிருக்காத என்ன?

ஆர்ஜனுக்கு நான்கு மாதங்கள் ஆனதும் தண்ணீரில் இறக்கிப் பார்த்திருக்கிறார்கள். குழந்தை குஷியாக, கை, கால்களை அடித்திருக்கிறான். இப்போது அந்தச் சுட்டிப் பயலுக்கு வயது 11 மாதங்கள்! நீச்சல் அத்துப்படி. இதில் அவன் பெற்றோருக்கு பெருமிதம். தண்ணீருக்கு அடியில் போகும் போது வாயை மூடவும், மூச்சைக்கட்டுப் படுத்தவும் அவனுக்கு இப்போதே தெரிகிறது எனப் பூரிக்கிறார் ஆர்ஜனின் அம்மா ஆயிஷா.

"வெளிநாடுகளில் தண்ணிருக்குள் பிரசவம். பிறந்த சில மாதங்களில் நீச்சல் கற்றுக்கொடுப்பது என்று குழந்தை தண்ணீர் பற்றிய பயத்தைப் போக்கிவிடுகிறார்கள். அது குழந்தைகளுக்கு ஒருவிதமான தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் கொடுக்கிறது. எங்களது மகனை உலகத்தின் மிக இளவயது நீச்சல் வீரன் என்று பெயர் எடுக்க வைக்க வேண்டும் என்கிறார் ஆர்ஜனின் அப்பா அக்பர். தமிழ்த்திரைப் படமொன்றில் குழந்தை ஒன்று நீந்துவது மாதிரியான காட்சியாம். முதலில் கணனியை வைத்து சமா ளித்துவிட நினைத்த படக் குழுவினர் ஆர்ஜனின் நீச்சல் சாகசத்தைக் கண்டு அவனையே நீச்சல் காட்சியில் நடிக்க வைத்து விட்டார்களாம்.

# உறக்கத்தை மறக்கப்போகும் உதைபந்தாட்ட ரசிகர்கள்




உதைப்பந்தாட்ட ரசிகர்கள் ஜூன் மாதம் முதல் உறக்கத்தைத் தொலைக்கப்போகிறார்கள். காரணம் உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டி ஆரம்பமாகப்போகிறது.

விளையாட்டு உலகில் பெரும் எண்ணிக்கையில் ரசிகர் கூட்டத்தைக் கொண்டது உதைப்பந்தாட்டம். உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு இவ்வருட நடுப் பகுதி பெரும் கொண்டாட்டம்தான். உலகக் கிண்ண உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர் வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 9ஆம் திகதிவரை அதாவது ஒருமாதகாலம் ஜேர்மனியில் இடம்பெற்றவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் சர்வதேச உதைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் கண்காணிப்பில் ஜேர்மனிய உதைப்பந்தாட்ட சங்கத்தால் பிரமாண்டமாக இடம்பெற்றுவருகிறன.

உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றும் அணிகளைத் தெரிவு செய்வதற்கான சுற்றுப் போட்டிகள் அந்தந்தக் கண்டங்கள் மட்டத்தில் இடம்பெற்று, இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டன. அந்த ஆட்டங்களில் பங்குபற்றி உச்சத் திறமைகளை வெளிக்காட்டிய 32 நாடுகளின் அணிகள் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கத் தகுதிபெற்றுள்ளன.

நடப்பாண்டுச் சம்பியனான பிறேஸிலுடன் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி எனப் பல பலம் பொருத்திய நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த உலகக்கிண்ணப் போட்டியில் இறுதியாட்டத்தில் பிறேஸிலுடன் மோதிய ஜேர்மனியில் இவ்வருடம் போட்டி இடம்பெறவுள்ளது. ஜேர்மனிய வீரர்களைப் பொறுத்தவரை தமது மண்ணில் நடைபெறும் போட்டியில் கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற உத்வேகத்துடன் உள்ளனர்.



உலகக் கிண்ணச்சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுவதற்கு தகுதி பெற்றுள்ள 32 அணிகளும் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் தலா நான்கு அணிகள் இடம்பெற்றுள்ளன.

குழு 'ஏ' யில் ஜேர்மனி, கொஸ்ராறிக்கா, போலந்து, ஈர்க்குவடோர் ஆகிய அணிகளுக்கும்-

'பி'பிரிவில் இங்கிலாந்து, பராகுவே, சுவீடன், ரினிடாட் அன்ட் தொபாகோ ஆகிய அணிகளும்-

'சி' பிரிவில் ஆஜென்ரீனா, ஐவரிகோஸ்ட், சேர்பியா, கொலன்ட் ஆகிய அணிகளும்-

பிரிவு 'டி' யில் மெக்ஸிக்கோ, ஈரான் அங்கோலா மற்றும் போர்த்துக்கல் ஆகிய அணிகளும்-

பிரிவு 'ஈ' இல் இத்தாலி, கானா, அமெரிக்கா, செக்குடியரசு ஆகிய அணிகளும்.

பிரிவு 'எவ்' பிரிவில் பிறேஸில், இக்ரோசியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகியனவும் -

பிரிவு 'ஜி' இல் பிரான்ஸ், சுவிற்ஸலார்ந்து, தென்கொரி மற்றும் ரோகோ ஆகிய அணிகளும்-

பிரிவு 'எச்' இல் ஸ்பெயின், உக்ரைன், துனிசியா, சவூதி ஆகிய அணிகளும் -

இடம்பெற்றுள்ளன

முதல் சுற்று ஆட்டத்தில் ஒவ்வொருபிரிவிலும் அதிக புள்ளிகள் பெறும் முதலிரு அணிகள் இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெறும்.

# 500 விக்கெட்டுக்கள் இலக்கை நோக்கி கும்ளே



இந்தியக் கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச்சாளரான அனில் கும்ளேயின் டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட்டுக்கள் என்ற நீண்டநாள் கனவு நனவாகும் காலம் கிட்டியுள்ளது.

தற்போது கும்ளே 485 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இன்னும் 15 விக்கெட்டுக்களைக் கைப்பற்றும் சந்தர்ப்பத்தில் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 500 விக்கெட்டுக் களை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெறுவார். அத்துடன் சர்வ தேச மட்டத்தில் 5ஆவது வீரர் என்ற பெருமையையும் பெற்றுக்கொள்ளமுடியும். இதற்குரிய வாய்ப்பு பாகிஸ்தான் - இந்திய அணிகளுக்கு இடையில் இடம்பெற்றுவரும் டெஸட் தொடரில் பிரகாசமாகவுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆஸ்திரேலியாவில் ஷேன்வோர்ன் 659 விக்கெட்டுகளையும், இலங்கையின் முத்தையா முரளிதரன் 584 விக்கெட்டுகளையும், ஆஸ்திரேலிய வீரர் கிளன் மக்ராத் 582 விக்கெட்டுகளையும், மேற்கிந்தியத் தீவு வீரர் கொட்னி வோல்ஷ் 519 விக்கெட்டுகளையும் வீழ்த்தி சாதனை படைத்துள்ளனர். இந்தப் பட்டியலில் இணையும் பெருமை கும்ளேக்கு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கைக்கெட்டியும் வாய்க்கெட்டவில்லை




பாகிஸ்தான் முன்னணி வீரரான யுனூஸ் கான் தன்னைத்தானே நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியிருக்காது. ஓர் ஓட்டத்தா லும், 6ஓட்டங்களாலும் இரட்டைச் சதம் பெறும் சந்தர்ப்பத்தைக் கோட்டை விடும் கிரிக்கெட் வீரருக்கு வேறு வழி என்னதான் இருக்கமுடியும்.

இந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் 199 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்ற யூனுஸ் கானால் மேல திகமாக ஓர் ஓட்டத்தைப் பெற முடியாமல் போனது. இதனால், இரட்டைச் சதத்தைத் தவற விட்டார். முதல் டெஸ்ட்டில்தான் இப்படி என்றால் பைசாலாபத்தில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்டிலும் வெறும் 6 ஓட்டங்களால் இரட்டைச் சதத்தைத் தவற விட்டார்.

இவ்வாறு இவர் அடுத்தடுத்து இரட்டைச் சதம் அடிக்கும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டாலும் 190 ஓட்டங்கள் முதல் -199 ஓட்டங்கள் வரை எடுத்து இரட்டைச் சதத்தை இரண்டாவது தடவையாகத் தவற விட்ட வீரர்களின் பட்டியலில் 10ஆவது இடத் தைப் பிடித்துள்ளார் யூனூஸ்கான்.

இவ்வாறு இரண்டு தடவைகளாக இரட்டைச் சதங்களைத் கைநழுவ விட்டவர்களின் விவரம் வருமாறு,

அசாருதீன் (இந்தியா 199 ஓட்டங்கள், 192 ஓட்டங்கள்), இயன்சேப்பல் (196,192 ஓட்டங்கள்), ஹேக இப்ஸ் (தெ.ஆபிரிக்கா 196, 192 ஓட்டங்கள்) பிறைன்லாரா (மேற்கிந்தியா 191, 196 ஓட்டங்கள்) சச்சின் டென்டுல்கார் (இந்தியா 193, 194 ஓட்டங்கள்), டிரெஸ்கோதிக் (இங்கிலாந்து 194, 193 ஓட்டங்கள்), மைக்கல் வோர்கன் (இங்கி லாந்து 197, 195 ஓட்டங்கள்), வீக்ஸ் (194, 197 ஓட்டங்கள்), வோறெர் (191,197 ஓட் டங்கள்), யூனூஸ்கான் பாகிஸ்தான் (199, 194 ஓட்டங்கள்).




# கலக்குகிறார் டோனி



ஒருநாள் போட்டிகளில் மட்டுமன்றி டெஸ்ட் கிரிக்கெட்டிலும் தன்னால் சாதிக்கமுடியும் என்பதனை ரசிகர்களுக்கு நிரூபித்துக் காட்டியுள்ளார் இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் மகேந்திர சிங் டோனி. ஒரு நாள் போட்டி ஒன்றில் 183 ஓட்டங்களைப் பெற்று அதிக ஓட் டங்களைப்பெற்ற விக்கெட் காப்பாளர் என்ற உலக சாதனையைப் படைத்த அவர் டெஸ்ட்டிலும் கலக்கி வருகிறார்.

பாகிஸ்தான் - இந்திய அணிகள் பங்குபற்றும் மூன்று தொடர்களைக் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட்போட்டி பாகிஸ்தானில் இடம் பெற்றுவருகிறது. இதில் பைசலாபத்தில் இடம்பெற்ற 2 ஆவது டெஸ்ட்டில் டோனி, 34 பந்துகளில் அரைச்சதத்தை எட்டினால் இதன் மூலம் குறைந்த பந்துகளில் அரைச்சதம் பெற்ற இந்திய வீரர்களின் பட்டியலில் இவர் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். 1982 - 1983இல் கராச்சியில் இடம் பெற்ற போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரா கபில்தேவ் 30 பந்துகளில் அரைச் சதத்தை அடித்து முதல் நிலையில் உள்ளர்.

இப்போட்டியில் 93 பந்துகளில் தோனி 146 ஓட்டங்களைப் பெற்றார்.



*அதிகம் பங்கேற் கும் வான் பறப்பு நிகழ்வு என்ற உலக சானையை ஏற்படுத் தும் முயற்சியில் தாய் லாந்து விமானப் படை யின் 'பரசூட்' வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். கம் பாங்சான் விமானத் தளத்தி அவர்கள் பயிற்சியில் ஈடு டு கின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் பாதிப்பும் சமாதானத்தின் தேவையும்



போர் காரணமாக இலங்கையின் வடக்குப்பகுதி மக்களின் வாழ்க்கை மிக மோசமாக பாதிக்கப்பட்டதோடு. படைத்தரப்புகளின் களமாகத் திகழ்ந்த இப்பகுதிகள் மோசமாக சிதைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இலட்சக்கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்திருந்தனர். பாதைகள் மூடப்பட்டு இயல்பு வாழ்க்கை குலைக்கப் பட்டிருந்தது. வடக்கிலிருந்து ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்களும் வெளியேற்றப்பட்டிருந்தனர்.
இலங்கையின் கிழக்கு பகுதிகளும் யுத்தத்திலிருந்து விடுபட முடியவில்லை. யுத்த நடவடிக்கைகளும், தாக்குதல் நடவடிக்கைகளும் தொடர்ந்து இடம் பெற்றன. அரச, தனியார் சொத்துகள் சிதைக்கப்பட்டன. கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையேயான கலவரங்கள் இடம்பெற்றன.
நாட்டின் ஏனைய பகுதிகளில் குண்டு வெடிப்புகள், தாக்குதல் சம்பவங்கள், படுகொலைகள் இடம் பெற்றன. பொருளாதார இலக்குகள் தகர்க்கப்பட்டன. அன்றாட செயற்பாடுகள் குலைக்கப்பட்டன. வெளிநாட்டு முதலீடுகள் விலகிச்சென்றன. இலங்கை ஆபத்தான நாடாக இனங்காணப்பட்டது. இந்த இருபது வருடங்களுக்கும் மேலான போரின் காரணமாக: -

- 70,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.
- 12 இலட்சம் மக்கள் இடம்பெயர நேரிட்டது.
- 17,900 இற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர்.
- அரச தகவலின்படி 14,800 இற்கும் அதிகமான அரசபடையினர் கொல்லப்பட்டனர்.
- 60,000இற்கும் மேற்பட்ட படையினர் படையைவிட்டு தப்பியோடினர்.
- ஆயிரக்கணக்கான மக்களும் படையினரும் காணாமல் போயினர்.
- 7இலட்சத்திற்கும் அதிகமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன.
- 2,451பில்லியன்ரூபாய்கள் அரசாங்கத்தினதும் விடுதலைப்புலிகளினதும் யுத்த செலவாக அமைந்தது.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சி -7 வீதமாக வீழ்ந்தது.

இந்த நிலையில் தான் 2002ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதி போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு நாட்டிற்கு பெரும் ஆறுதலைக் கொடுத்தது. இதன் மூலம் ஏற்பட்ட நன்மைகள் காரணமாக நாட்டின் சகல பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களது வாழ்விலும் மாற்றம் ஏற்பட்டது. இயல்பு வாழ்வு மெல்ல மலரத் தொடங்கியது.
எனினும் அண்மைய நாட்களாக நிலமைகள் மாறத்தொடங்கியுள்ளன. வன்முறைகள் அதிகரித்துள்ளன. பேச்சுவார்த்தை இறுக்கமான நிலையில் உள்ளது. மக்களை மீண்டும் யுத்தம் மூளுமோ என்ற பயம் ஆட்டிப்படைக்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமாக இருந்தால் நாட்டின் அனைத்து மக்களும் பாதிக்கப்படுவது உறுதியானது. அதேபோல நாடு 4 வருடங்களுக்கு முன்பிருந்த அவலமான நிலைக்கு பின் நோக்கிச் செல்லும் என்பதும் வெளிப்படையானது. எனவே இந்த நாடு அத்தகைய பாரதூரமான சூழலுக்குள் வீழ்வதை மக்கள் தலைவர்கள் அனுமதிக்கக்கூடாது. அத்தோடு சமாதானத்தை உறுதி செய்வது அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் கடமையாகும்.

- ஜீ. யோகப்பிரியா

## பிண குவியல்களுக்குள்ளே

தெருவோர நாய்களை
அடித்து கொல்வது போல்
அரசியல் ராஜாங்கம்
அரங்கேறிக் கொள்கிறது

கிழித்து எறியப்படும்
மனிதத் துண்டங்கள்
பிணங்கள் என்ற பரிமாணத்தில்
பத்திரிகைகளில்
பிரசவிக்கப்படுகின்றன

வாழ்க்கை சிதைக்கப்பட்டு
வதைப்பின் உச்சத்தில்
மனிதர்கள் பிணங்களாகும் போது
அடையாளப் படுத்தப்படுவது
அடையாளந் தெரியாதோரைத்தான்

விடுதலை
சுதந்திரம்
மனிதாபிமானம்
எல்லாவற்றையும்
சமுதாயம்
பிணக்குவியல்களுக்குள்ளே
தேடிக் கொண்டிருக்கிறது.

- சூரியநிலா
உசன் - மிருசுவில்

# மலையக மக்களும் பாதுகாப்பு நெருக்கடிகளும்



இலங்கையின் பொருளாதாரத்திற்கு தேயிலை உற்பத்தியின் மூலம் மிக நீண்ட காலமாக மலையக தொழிலாளர்கள் மிகப்பெரிய பங்களிப்பை வழங்குகின்றனர். எனினும், அம்மக்களது வாழ்க்கை நிலையோ காலங்காலமாக மிகவும் கீழ் நிலையிலேயே இருந்துவருகிறது.
செல்லமுத்து, மூக்காயி தம்பதியினர் 35 வருடங்களாக பன்விலையில் வசிக்கின்றனர். இப்பிரதேசத்தவர்களின் வாழ்வு எந்தவொரு அபிவிருத்தியும் இல்லாமல் இருக்கின்றது. இம்மலையக மக்களது இரட்சகர்களாக காட்டிக் கொள்கின்ற மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகளது பொறுப்பற்ற தன்மையை இம்மக்களது மோசமான வாழ்க்கை நிலை எடுத்துகாட்டுவதாக அமைகின்றது.
இத்தகைய வறுமையான வாழ்வுக்கிடையே இனப்பிரச்சினையின் தாக்கமும் இம்மக்களை விட்டு வைக்கவில்லை. குறிப்பாக இன முரண்பாடுகளின் விளைவுகள் வடக்கு கிழக்கு மக்களை மட்டுமே பாதித்துள்ளது என்ற கருத்து பரவலாக நிலவி வந்தாலும் மலையக பிரதேசமும் இதற்கு விதிவிலக்கல்ல என்றே இம்மக்கள் கூறுகின்றனர். தற்போது நாட்டில் எழுந்துள்ள நெருக்கடியானது செல்லமுத்துவின் குடும்பத்தினரையும் பாதித்துள்ளது.
செல்லமுத்து தம்பதிகளைப்போலவே மலையகத்தில் வாழுகின்ற ஆயிரக்கணக்கான தமிழ்க்குடும்பங்கள் தற்போதுள்ள நெருக்கடி நிலையினால் பாதிப்புக்குள்ளாவதாக செய்திகள் வெளியாகின்றன. புலிகள் மலையகத்தில் ஊடுருவி இருப்பதாக சில கட்சிகள் செய்துவரும் பிரச்சாரத்திற்கு மத்தியில் மலையகத்தில் தொடர்ந்தும் சுற்றி வளைப்புகளும் கைதுகளும், துன்புறுத்தல்களும் இடம் பெறுவதாக இந்த செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. அத்தோடு தற்போது வடகிழக்கில் இடம் பெறுகின்ற படையினருக்கு எதிரான தாக்குதல்கள் காரணமாக சில இனவாத குழுக்களும் இம்மலையக தமிழ் மக்களை துன்புறுத்தி வருவதாக செய்திகள் வெளிவருகின்றன.

- அஹமத் யுஸ்ரி / எஸ். ரொமேஷ்

இதேவேளை போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் நிம்மதியாக வாழ்ந்த இம்மக்கள் தற்போதைய ஸ்திரமற்ற சூழல்காரணமாக மீண்டும் கடந்த காலங்களைப்போலவே பாதிப்புக்குள்ளாக வேண்டி வருமோ என்ற பீதியில் உள்ளனர். யுத்த சூழலினால் வடக்கு கிழக்கு மக்கள் நேரடியாக பாதிக்கப்பட்டாலும் இங்குள்ள மக்கள் தாமும் மறைமுகமாக பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும் யுத்தத்தால் நேரடியாக பாதிக்கப்படும் வட கிழக்கு தமிழ் மக்களைப் போலவே இம்மலையகத்தமிழரும் மீண்டுமொரு போரை விரும்பவில்லை என்பதுடன் மிக அவசரமான சமாதான முயற்சிகளையே எதிர் பார்க்கின்றனர்.

# கருத்தாடல் களம்

## ஆட்சியில் ஒட்டியுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு சமர்ப்பணம்

சமாதான பேச்சில் முஸ்லிம்களை தனித்தரப்பாக சேர்க்க முடியாதென ஜனாதிபதி தெரிவித்துள்ளமை மிகவும் பாரதூரமான விடயமாகும். இதற்கு ஆட்சியில் ஒட்டிக் கொண்டுள்ள அதாவுல்லா, பேரியல், அமீர் அலி, ரிஷாட், சேகு இசுதீன் போன்றவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? வெட்கமில்லாமல் பதவியில் ஒட்டியிருக்கப் போகிறார்களா? இல்லை, முஸ்லிம்களை தனித்தரப்பாக சேர்க்கும்படி வலியுறுத்தி பதவிகளை இராஜினாமா செய்து தமது எதிர்ப்பை காட்டப் போகிறார்களா? எவ்வாறெனினும் இவர்கள் ஒரு போதும் தமது பதவிகளை இராஜினாமா செய்யமாட்டார்கள் என்பது எமக்கு தெரியும். தமது பதவி சுகத்துக்கு முன்னால் மக்கள் பிரச்சினை இவர்களுக்கு ஒரு பொருட்டாக இருக்க போவதில்லை.

இஸ்மாயில் மஹ்ரூப்
ஓட்டமாவடி

## மஹிந்தவுக்கு வாய்ப்பை வழங்கியுள்ளனர்

மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியதன் மூலம் அவருக்கு தமிழர்கள் மத்தியில் நற்பெயரை எடுக்கும் வாய்ப்பினை தமிழர்கள் வழங்கியுள்ளார்கள். அத்துடன் வரலாற்றிலே அழியாது இடம் பிடிக்கத்தக்க சந்தர்ப்பத்தையும் வழங்கியுள்ளார்கள். புரியவில்லையா? பல்லாயிரக்கணக்கான தமிழ், சிங்கள உறவுகளின் உயிர்களை பலி கொள்ளும் போரை நிறுத்தி நீடித்து கொண்டிருக்கும் போலி சமாதானத்தின் முகத்திரையை கிழித்தெறிந்து விட்டு 'தமிழர் தாயகம் இனி தமிழருக்கே' என்று வார்த்தைகளால் மட்டுமன்றி எழுத்துருவிலும் எழுதி கையொப்பமிட்டு தமிழரின் தலைவரிடம் கையளித்தால், சிங்கள மக்கள் மட்டுமல்ல தமிழ் உறவுகளும் உங்களை தலையில் தூக்கி வைத்து நேசிக்க ஆரம்பித்து விடும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நல் உள்ளத்தோடு சிந்தித்தால் அந்த இனிய நாள் வெகு தூரமில்லை.

எஸ். சிவா
பருத்தித்துறை

## இவ்வார விழிப்பில்...

- வன்னியில் புலிகள் - சொல்ஹெய்ம் சந்திப்பு
- சர்வகட்சி மாநாடும் சமாதான முன்னெடுப்புக்களும்
- வன்முறைகளை எதிர்க்கும் மக்கள் அமைப்புகள்
- பன்விலை தமிழர்களின் தற்போதைய நிலை
- கொழும்பில் யாழ் ஓவியரின் கண்காட்சி

## வாசகர் கவனத்திற்கு...

**கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.**
அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.
எழுதி அனுப்ப வேண்டிய முகவரி


விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

# அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை - 15

1. ஒரு தேசிய இனத்தவராக இருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
2. எவரதும் தேசிய இனத்துவமும் வன்போக்கான வகையில் பறிக்கப்படுதலோ தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)




விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி - விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

# மனிதப் பேரவலத்தை உருவாக்கும் சுனாமி




**யுத்தத்தின் வெடி ஓசைகளும் குண்டுத்தாக்குதல்களும் மனிதனையும் உலகளாவிய ரீதியில் பயத்தில் ஆழ்த்திய காலம் மெல்ல மெல்ல மாறிவருகிறது எனலாம். எனினும் இயற்கையும், இயற்கையின் கோரத் தாண்டவங்களும் இன்று உலகை ஆட்டிவைக்கின்றன. மனிதனால் மனிதன் கொல்லப்பட்ட காலம் மாறி இயற்கையே தன் குழந்தைகளை பலியெடுக்கும் நிலைமை தலைதூக்கியுள்ளது.**

**இத்தகைய இயற்கையின் மூர்க்கத்தினால் உறங்கியுள்ள எரிமலைகளும் உயிர்ப்புப் பெறுகின்றன. இதன் காரணமாக எரிமலைகள் மீளுயிர்ப்பு பெற்று வெடிக்கின்றன; பலியெடுக்கின்றன. அவ்வேளைகளில் எல்லாம் மனிதன் மரணவலி உணர்கின்றான்.**

**இதுவரை வெளிவந்த எட்டுக் கட்டுரைகளில் புவியதிர்வு, எரிமலைக் குமுறல்கள், உலக வெப்பநிலையேற்றத்தின் விளைவாக ஏற்படக்கூடிய பனிக்கட்டி உருகல் கடல்மட்ட உயர்வு, வெள்ளம், வரட்சி போன்ற பல்வேறு இயற்கை அனர்த்தங்களைப் பற்றி அறிந்து கொண்டோம்.**

**இன்று ஒன்பதாவது பாகம் பிரசுரமாகிறது.**

இந்தக் கட்டுரைத் இத்தொடரின் இரண்டாவது பகுதியில் (உதயன் 20.11.2005) அலைகளின் வடிவம், அலைநீளம் (wavelength), அலை உயரம் (wave height), அலை வேகம் (wave velocity) என்பன போன்ற அலைகள் பற்றிய பொதுவான சில விடயங்களைப் பற்றியும் சமுத திரத்தில் அலைகள் எவ்வாறு உருவாகின்றன என்பது பற்றியும் எடுத்துக் கூறப்பட்ட விடயங்களை ஞாபகப்படுத்திக் கொள்வது சமுத்திர அலைகளால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைப புரிந்துகொள்ள உதவியாயிருக்கும். அங்கு நாம் குறிப்பிட்ட முக்கிய விடயங்களுளொன்று சமுத திர நீர் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு அலைகளால் காவிச் செல்லப்படுவதில்லை என்பதாகும். பதிலாக நீர் மூலக்கூறுகளை வட்டப் பாதையில் இயங்கச் செய்வது மூலம் அலை சக்தியை நீரினூடு முன்தள்ளும் சக்தித் துடிப்புகள் (Energy pulses) ஆகச் செயற்படுகின்றன.

பெரும்பாலான அலைகள் நீர் மேற்பரப்பில் வீசுகின்ற காற்றினால் உருவாக்கப்படுபவை எனவும் முன்னர் கூறியிருந்தோம். காற்றின் வேகம், காற்று வீசும் கால அளவு, காற்று நகருகின்ற நீர்ப்பரப்பின்



பேராசிரியர் இ.குமாரவடிவேல்
*விஞ்ஞான பீடாதிபதி*
*(யாழ்.பல்கலைக்கழகம்)*


நீளம், காற்று வீசும் திசையின் சீரான தன்மை ஆகியவற்றிலே அலையொன்றின் உயரம் தங்கியிருக்கும்.

கடலோரம் என்பது நிலம், சமுத்திரம், வளிமண்டலம் மூன்றும் சந்திக்கும் புவியிலுள்ள ஒரு தனித்துவமான எல்லை. கடலோர வலயங்களே சமுத்திர அலைகளின் முழு ஆவேசத்தையும் தாங்கிக்கொள்கின்றன. சமுத்திர அலைகள் ஆழம் குறைந்த கடலோரத்தை அண்மிக்கும் போது (நீரின் ஆழம் ஏறத்தாழ அலைநீளத்தின் அரைப் பங்கு ஆகும் போது) மாற்றங்கள் ஏற்படுகின்றது.

## தன் பாதுகாப்புக்காக மனிதன் செய்யும் ஒவ்வொன்றும் மறுவிளைவை ஏற்படுத்துகின்றன

அலையொன்று ஆழம் குறைந்த நீருக்குள் நகரும் போது நீருக்கும் கடற்படுக்கைக்கும் இடையிலான உராய்வு (Friction) காரணமாக அலையின் அடிப்பகுதியின் வேகம் குறைகிறது. கடற படுக்கையுடனான உராய்வு நீரின் வட்ட இயக்கத தைத் தட்டையாக்கி நீள்வட்ட (Elliptical), கிடை (Horizontal) இயக்கமாக்குகிறது (படம் 61).

வேகம் குறைவடையும் போது அலைநீளமும் குறையும். உயரம் அதிகரிக்கும். உயரம் அலைநீளத்தின் அண்ணளவாக ஏழில் ஒரு பங்கை அடையும் போது அலைமுகமானது (Wave-front) மிகச் செங்குத்தான வடிவையடைவதால் அலையானது முன்னோக்கி இடறி விழுந்து உடையும் (படம் 62).



படம் 62

காற்றின் வேகம் குறைவாகவிருக்கும் போது சமுத்திர அலைகளின் உயரமும் அலைநீளமும் குறைவாகவிருக்கும். குறுகிய அலைநீளத்தால வேறுபடுத்தப்பட்ட இவ்வலைகள் மண் நகர்த்தி இயந்திரங்கள் (Bulldozers) போற் செயற்பட்டு மணலைக் கடற்கரையில் கொண்டுவந்து குவிக்கும்.

காற்று வேகமாக வீசும்போது, அலைநீளம் அதிகமுடைய சக்திமிக்க அலைகள் உருவாகிக் கடற்கரையை முட்டிமோதி கடற்கரை மண்ணையும் பாறைகளையும் அரித்து கடற்கரையிலுள்ள மணலைக் கடலுக்குள் இழுத்துச்செல்லும்.

கடலேரரத்தில் குவியும் மணல் பேரலைகளின் தாக்கத்திலிருந்து கடலோரத்தைக் காப்பாற்றுவதற்கான மிகச் சிறந்த பாதுகாப்பு அரணாக விளங்குகிறது. இறுக்கமற்ற மண் குறுணிகள் (Loose sand grains) பெருமளவு அலைச் சக்தியை உறிஞ்சிக் கொண்டு விரைவாகத் தாம் முதலில் இருந்த நிலையை அடைந்து விடுகின்றன.

மனித செயற்பாடுகள் கடலோரத்தில் பெரும விளைவுகளை உண்டு பண்ணுகின்றன. ஆறுகளுக்குக் குறுக்காக அணைகளைக் கட்டுவது மூலம் மணல் கடற்கரையை வந்து சேராமல் நாம் தடுக்கிறோம். மேசன் வேலைகளுக்கும் கண்ணாடி உற்பத்திக்கும் பெருமளவு மணலை அகழ்ந்து எடுக்கிறோம். இவை கடலோர மணலின் அளவைக் குறைத்து விடுவதால், இக்கடலோரங்கள் அலைகளின் தாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டு கட்டடங்களுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் பெரும் சேதத்தை விளைவிக்கின்றன. மனிதரால் இறங்கு துறைகளும் அலைகளையும் மணல் நகர்வையும் கட்டுப்படுத்த தடுப்புச் சுவர்களும் (Break waters) அமைக்கப்படுகின்றன. ஆனால், மனிதனால் உருவாக்கப்படும் அமைப்புகள் ஒவ்வொன்றும் பலதரப்பட்ட எதிர் விளைவுகளையே உருவாக்குகின்றன. மறை விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு செயறபாட்டுக்கும் பல வேறுபட்ட எதிர்த்தாக்கங்கள் இருக்குமென்பது இயற்கையின் விதி. ஆனால் பல கடலோர கட்டுமானப் பணித் திட்டங்கள் ஒரு குறிக்கோளை மனதிற் கொண்டே உருவாக்கப்படுகின்றன. பின்னர் பக்க விளைவுகளைக் கண்டதும் அதனை உருவாக்கியவர்கள் ஆச்சரியமடைகின்றனர். உதாரணமாக கடலோரத்தை அலையின் தாக்கங்களிலிருந்து பாதுகாக்கக் கட்டப்படும் கொங்கி றீட் சுவர்கள், அலைகளைச் சுவரில் பட்டுக் கடலை நோக்கித் தெறிப்படைய வைக்கின்றன. அவ்வாறு தெறிக்கும் அலைகள் கடலோர மணலைக கடலை நோக்கி அள்ளிச் செல்கின்றன. கடல் மணல் அள்ளுப்பட்டுச் செல்ல கடலலைகள் சுவரின் ஓரங்களையும் அத்திவாரத்தையும் தாக்கிச் சுவரை விழவைத்துவிடுகிறது.

### சுனாமி (Tsunami)

எல்லா அலைகளிலும் மிகப் பெரியதும் (படம் 63) எம்மைப் பெரிதும் பயங்கொள்ள வைப்பதும் கரையைத் தாக்கும்போது ஆர்த்தெழுந்து பேரழிவை ஏற்படுத்துவதுமான ஒரு வகை அலைகள் திறந்த கடலில் அநேகமாகக் கவனிக்கப்படாது நகர்ந்துசெல்லும். இக்கொலைகார அலைகளால் பெரிதும் பாதிப்புக்குள்ளான சரித்திரத்தை உடைய நாடு ஜப்பான். அதனாலேயே ஜப்பானிய மொழியில்

படம் 63



இக்கொலைகார அலைகளுக்கு வைக்கப்பட்ட 'சுனாமி' (Tsunami) என்ற பெயர் இன்று அவ்வலைகளைக் குறிக்கும் உலகப் பொதுச் சொல்லாகி விட்டது. சுனாமி எனும் ஜப்பானிய சொல் (படம் 64) 'துறைமுகப் பேரலை' (Harbour wave) எனப் பொருள்படும். 'சு(tsu)' என்பது துறைமுகத்தையும் 'னாமி (nami)' என்பது பேரலையையும குறிக்கும்.

'துறைமுகம்' என்ற குறிப்பு அடைமொழி துறைமுகங்கள், குடாக்கடல் (inlets) போன்ற குறுகிய பிரதேச அமைப்பைக் கொண்ட இடங்களில் இவ்வலைகள் மிகவுயரத்திற்கு மேலெழுவதைச் சுட்டிக் காட்டுகிறது. உதாரணமாக திறந்த கடலோரத்தில் 25 அடி வரை மேலெழும் சுனாமி குறுகிய பரப்புடைய துறைமுகமொன்றினுள் புகும் போது அதன் உயரம் 100 அடி வரை உயரும்.

சுனாமி அலைகள் அமெரிக்கக் கடலோரங்கள் சிலவற்றையும் (உதாரணமாக ஹவாய் தீவுகள்) அடிக்கடி தாக்குவதுண்டு. அமெரிக்கர்கள் இப்பேரலைகளை சந்திர, சூரியர்களின் ஈர்ப்பு சக்தியினால் ஏற்படும் வற்றுப்பெருக்க அலைகள் (Tidal waves) எனக்கருதி இவற்றை இராட்சத வற்றுப் பெருக்கலைகள் (Giant Tidal Waves) என அழைத்தனர். பொதுவாக புவிநடுக்கமொன்றைத் தொடர்ந்தே இப் பேரலைகள் கரையோரங்களைத் தாக்குவது அவதானிக்கப்பட்டதால் விஞ்ஞானிகள் இவ்வலைகளைப் புவி நடுக்கக் கடலலைகள் (Seismic sea waves) என அழைத தனர்.

Tsunami
津波
படம் 64
**சுனாமி**

'சுனாமி'யின் தாக்கத்தின் அளவில் சூரிய சந்திரரகளின் ஈர்ப்புசக்தி ஓரளவு செல்வாக்குச் செலுத்துமாயினும் சுனாமி ஏற்படுவதற்கும் ஈர்ப்பு சக்திக்கும் நேரடித் தொடர்பில்லை என்பது இன்று உறுதியாகக் அறியப்பட்டுவிட்டது. மேலும் சுனாமி ஏற்படுவதற்கு புவி நடுக்கம் மட்டும் தான் காரணமாக அமைவதில்லை என்பதும் அறியப்பட்டுள்ளது. ஆகவே 'இராட்சத வற்றுப்பெருக்கலைகள்', 'புவிநடுக்க கடலலைகள்' போன்ற சொற்பிரயோகங்கள் தவறான கருத்தைத் தருவதாகக் கருதிக் கைவிடப்பட்டுவிட்டது.


பெரியதொரு நீர்த்தொகுதியானது அதன் சமநிலையிலிருந்து இடம்பெயர்த்தப்படும் போதே 'சுனாமி' எனப்படும் பேரலைகள் உருவாகின் றன. நீரில் (பொதுவாக சமுத்திரத்தில்) ஏற்படும் கணத்தாக்கக் குழப்பம் (Impulsive disturbance) காரணமாக நீர் நிரல் தொகுதியொன்று (water body) மேல் நோக்கி நகர்த்தப்படலாம். அவ்வாறு நகர்த்தப்படும் போது அந் நீரில் அலைத் தொடர் அல்லது தொடர்ச்சியான அலைத் தொடர் உருவாகும். இவ்வலைத் தொடரையே சுனாமி என அழைக்கிறோம். (படம் 65).

### சுனாமியை உருவாக்கக் கூடிய நிகழ்வுகள்

நீர் நிரல் தொகுதியொன்று (water body) மேல் நோக்கி நகர்த்தப்பட்டு சுனாமி உருவாகுவதற்கு பல இயற்கையானதும் செயற்கையானதுமான கணத்தாக்க குழப்ப (Impulsive disturbance) நிகழ்வுகள் காரணமாயமைகின்றன. அவையாவன -

* கடற்படுக்கையில் ஏற்படும் புவி நடுக்கங்கள் (Oceanic Earthquake)
* கடல் படுக்கையில் ஏற்படும் நிலச்சரிவுகள் (seabed landslides)
* கடலின் அடியில் ஏற்படும் எரிமலைக் குமுறல்கள் (seabed volcano eruptions)
* விண்கற் தாக்கங்கள் (Impact of asteroids)

(13ஆம் பக்கம் பார்க்க)

படம் 61




படம் 65

புவிநடுக்கத்தின் சக்தி புவிநடுக்கக் குறைகோட்டின் மேலமைந்த கடற்படுக்கையை ... நகர்த்துமாயின் சுனாமி உருவாகும்

புவிநடுக்க மேன்மையத்தில் (Epi centre) இருந்து வெளிநோக்கி சமுத்திரத்தடியில் அலைகள் நகர ஆரம்பிக்கின்றன. சுனாமியின் பயணம் ஆரம்பமாகிவிட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 . 08 . 1962

உதிர்வு 09 . 02 . 2005



அச்செழு - நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட

## கந்தையா வெற்றிவேலு

(உரிமையாளர், கிறீன் பியூட்டி சென்ரர், இல 292/1 செட்டித் தெரு, கொழும்பு-11)

திதி : 30.01.2006

ஓராண்டு கடந்த போதும்
உறங்கவில்லை உன் நினைவு
ஆண்டு பல ஆனாலும்
ஆறாது நம் துயரம்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

*குறிப்பு: அமரரின் ஆத்ம சாந்திப் பூசை நாளை (30.01.2006) திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு புத்தூர் ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**தகவல்:**
**லிங்கம் ஸ்ரோஸ், நீர்வேலி.** (45966) **குடும்பத்தினர்.**


# மணிக்கூண்டு வீதி போக்குவரத்துக்குத் தடை

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். பொலீஸ் நிலையம் அமைந்துள்ள மணிக்கூண்டுக் கோபுர வீதியில் வாகனப் போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் பின் நீண்டகாலம் பாவனையில் இல்லாதிருந்த இந்த வீதி, பின்னர் பொதுப் போக்குவரத்துக்குஅனுமதிக்கப்பட்டது.

இந்த வீதியில் சில நாள்களுக்கு முன் பஸ் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டு சிறியரக வாகனங்கள் அனுமதிக்கப்பட்டன.

தற்போது அந்த வீதியின் குறுக்காக தகரவேலி அமைக்கப்பட்டு சிறியரக வாகனங்கள் கூடச் செல்லமுடியாது தடைசெய்யப்பட்டுள்ளது. (ஒ-15)


UNIT
Ultimate Offer
Printer/Scanner/Table/USB Flash/
TV Tuner/Home Theater Woofer/UPS with Screen Filter,
Dust Cover, Mouse Pad & CD Cleaner
Are Totally Free
Attractive Woofers & Home Theatres 10% Discount
IBM World Leading Branded Systems @ Offer Price
புதிய P4 கணனிகள் 3 வருட முழு உத்தரவாதத்துடன் கொழும்பை ஒத்த விலைக்கே
சகல கணனிசார் உதிரிகளும் சலுகை விலையில்
Hurry இச்சலுகை குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே
தாயக மின்சார நிலைமைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டவை
இது எங்கள் மொபைல் சர்வீஸ் ரீமுடன் இணைக்கப்பட்டது.
An Indian Qualified Engineer's Workshop
Possible which Impossible
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737


## INVITATION TO BID

**Health Infrastructure Development Program funded by UNICEF & SCISL for the Ministry of Social Welfare of the Democratic Socialist Republic of Sri Lanka :**

**Construction of Social Development Centres:**

1. Memorandum of Understanding between the Government of Sri Lanka UNICEF & SCISL has been signed to construct Social Development Centres in the areas affected by Tsunami on 26th December 2004 The United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility is providing technical services as implementation partner of the Ministry of Social Welfare, UNICEF and SCISL.
2. The United Nations Office for Project Services – Sri Lanka Project Implementation Facility therein after referred to as "UNOPS", invites sealed bids from eligible bidders **with ICTAD Grading M6 or above, for the Construction of Social Development Centres at locations given below:**

| | |
|---|---|
| Lot 1 | SDC -Island North (Kayts) |
| Lot 2 | SDC -Karaveddi |
| Lot 3 | SDC - Point Pedro |
| Lot 4 | SDC - Chavakachcheri |
| Lot 5 | SDC - Karainagar |
| Lot 6 | SDC - Maruthankerny |
| Lot 7 | SDC - Thellipalai |
| Lot 8 | SDC - Nallur |
| Lot 9 | SDC - Sandilipay |

3. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of a refundable fee of **Rs 1,000.00.** Bidding documents will be issued to eligible bidders from 9.30 am to 5.00 pm on working days from **30th January 2006 to 03rd February 2006** at

**UNOPS-SLPIF Area office Jaffna,**
**123 Temple Road, Jaffna.**

**Contractors with ICTAD Grading M6 or above may submit complete bids (Lots 1 to 9) or partial bids for individual lots, provided full BOQ's are submitted in a lot for each location.**

4. Additional information regarding the Bidding Documents will be available at the office of the of UNOPS-SLPIF at 123 Temple Road, Jaffna.
5. All bids must be delivered to UNOPS at UNOPS-SLPIF in Jaffna at 123 Temple Road, Jaffna. before 2.00 pm on **08th February 2006.** Bids will be opened immediately thereafter in the presence of bidders or their authorized representatives who choose to attend.
6. UNOPS will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation of delivery of bids.

Country Coordinator
UNOPS- SLPIF

## INVITATION TO BID

**Health Infrastructure Development Program funded by World Vision for the Ministry of Social Welfare of the Democrâtic Socialist Republic of Sri Lanka :**

**Construction of Five Gramodaya Health Centers:**

1. Memorandum of Understanding between the Government of Sri Lanka and World Visions has been signed to rehabilitate the Health Infrastructure in the areas affected by Tsunami on 26th December 2004. World Vision has consented to provide assistance to the Ministry of Health of the Democratic Socialist Republic for rehabilitation of health infrastructure damaged by the tsunami. The United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility is providing technical services as implementation partner of the Ministry of Social Welfare and World Vision.
2. The United Nations Office for Project Services – Sri Lanka Project Implementation Facility therein after referred to as "UNOPS", invites sealed bids from eligible bidders with ICTAD Grading M6 or above, for the construction of five Gramodaya health centers at locations given below:

| | |
|---|---|
| Lot 1 | Neervely South |
| Lot 2 | Urelue West |
| Lot 3 | Kudathanai |
| Lot 4 | Kathkovalam |
| Lot 5 | Thumpalai East |

3. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of a refundable fee of **Rs 1,000.00.** Bidding documents will be issued to eligible bidders from 9.30 am to 5.00 pm on working days from **30th January 2006 to 03rd February 2006** at

**UNOPS-SLPIF Area office Jaffna,**
**123 Temple Road, Jaffna.**

**Contractors with ICTAD Grading M6 or above may submit complete bids (Lots 1 to 5) or partial bids for individual lots, provided full BOQ's are submitted in a lot for each location.**

4. Additional information regarding the Bidding Documents will be available at the office of the of UNOPS-SLPIF at 123 Temple Road, Jaffna.
5. All bids must be delivered to UNOPS at UNOPS-SLPIF in Jaffna at 123 Temple Road, Jaffna. before 2.00 pm on **10th February 2006.** Bids will be opened immediately thereafter in the presence of bidders or their authorized representatives who choose to attend.
6. UNOPS will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation of delivery of bids.

Country Coordinator
UNOPS- SLPIF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுங்குளிர் ஒரு புறம் உயிரச்சம் மறு புறம்

## இரண்டுக்கும் இடையே தவிக்கும் மக்கள்


செய்தியாளர் சுகிர்தராஜனின் இறுதிநிகழ்வில்...

கடந்த வாரம் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதியில் குறிப்பிடத்தக்க பாரிய சம்பவங்கள் இடம்பெறவில்லை. எனினும், கடுமையான குளிரால் மக்கள் அவதிப்படுகின்றனர்.

மட்டக்களப்பு ஊறணிப் பகுதியில் கடந்த ஞாயிறு மாலை இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். அத்துடன், அம்பாறை மாவட்டத்தின் கண்ணகி கிராமத்தில் ரோந்து சென்ற விஷேட அதிரடிப்படையினர் மீது நடத்திய தாக்குதலில் நால்வர் படுகாயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து படையினரின் தேடுதல், சுற்றிவளைப்பு என்று தமிழர்கள் கைதாகிப் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த இரண்டு சம்பவங்களை விட திருமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட பத்திரிகையாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் பூதவுடல் புதனன்று கல்முனைக்குக் கொண்டு வரப்பட்டு வியாழனன்று வீரமுனையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### விவசாயிகள் கவலை

உத்தரவாத விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்படி வேதனைப்படும் விவசாயிகள் தமது நெல்லை தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்ளைலாபத்தில் பெற முண்டியடிக்கிறார்கள். எனவே, 'மஹிந்த சிந்தனை' மூலம் கூறியபடி 17 ரூபா 50 சதத்திற்கு உத்தரவாத விலையில் நெல்லை அரசாங்கம் வாங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த போகத்தின்போது 15 ரூபா 50 சதப்படி அரசாங்கத்தினால் கொள்வனவு செய்ய ஆரம்பித்ததும் தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களும் நெல்லின் விலையை உயர்த்தினார்கள். அதனால் விவசாயிகள் நன்மையடைந்தனர். ஆனால், இம்முறை நெல்லின் விலை தனியாரால் மூடை 875 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்டுவருகின்றது.

### மட்டக்களப்பு மடல்

இது விவசாயிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகும். 'மஹிந்த சிந்தனை'க்கும் முரண்பாடாகும்.

அரசாங்கம் உடனடியாக நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய ஆரம்பிக்கும் பட்சத்தில் தனியாரும் நெல்லின் கொள்வனவு விலையை அதிகரிப்பார்கள். இன்றேல், அவர்கள் நிர்ணயித்தபடி நெல்லின் விலை தீர்மானிக்கப்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

இதேவேளை, ஒரு மூடை அரிசியின் விலை ஆயிரத்து 400 ரூபாவுக்கு தொடர்ந்து விற்பனையாகிவருகின்றது. இவ்விலை நெல்லின் விலை ஆயிரத்து 100 ரூபா ஆக இருந்த போதும், தற்போது 850 ரூபாவாக இருக்கும் போது எந்தவித மாற்றமுமில்லாமல் இருக்கின்றது.

வழமையாக நெல்விலை குறையும் போது அரிசியின் விலையும் குறையும். ஆனால், இம்முறை நெல்விலை 250 ரூபாவால் குறைக்கப்பட்டபோதிலும் அரிசியின் விலையில் மாற்றமில்லை. இது ஏன் என பாவனையாளர்கள் வினவுகின்றார்கள்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் தம்மிடையே ஓர் உடன்பாட்டுடன் நெல் விலையைத் தீர்மானித்துக் கொள்ளை இலாபம் அடிக்கின்றார்கள். பாடுபட்டு உழைக்கும் தமக்கு எந்த இலாபமும் இல்லையென விவசாயிகள் வேதனைப்படுகின்றனர்.

### சொய்காமத்தில் குடியேறமுயற்சி

பொத்துவிலையடுத்துள்ள சொய்காமப்பகுதியில் பெரும்பான்மை சிங்கள மக்கள் குடியேறுவதற்குக் கடும் முயற்சி எடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சொய்காமம் பகுதியில் காலம்காலமாக முஸ்லிம் மக்கள் வயல் மற்றும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையிலீடுபட்டு வருகின்றனர். 1994 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மீள்குடியேற்றத்திட்டம் அமுலிலிருந்தவேளை பொத்துவில் நகரிலிருந்து சில பெரும்பான்மையான மக்கள் சொய்காமம் பாதுகாப்புப் படைமுகாமருகே சில மாதங்கள் குடியேறி வாழ்ந்தனர். பின்னர் நிவாரண அட்டைகளைப் பெற்ற பின்னர் மீண்டும் பொத்துவிலுக்கே அவர்கள் திரும்பிவிட்டனர்.

தற்போது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தரவீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. இந்நிலையில் சொய்காமத்தில் மீண்டும் குடியேற பிரதேச செயலரூடாகச் சிங்கள மக்கள் சிலர் முயற்சியெடுத்து வருகின்றனராம்.

இதனைறிந்த முஸ்லிம் மக்கள் பொத்துவில் பொலீஸாரிடம் முறையிட்டுள்ளனர். ஆனால், அவர்களுக்குப் பிரதேச செயலாளரின் பரிந்துரைப்படி நடக்குமாறு கூறப்பட்டுள்ளதாம்.

### முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்

நிந்தவூரில் முஸ்லிம் அகதிகள் பிரதேச செயலாளருக்கு எதிராக மேற்கொண்ட பாரிய ஆர்ப்பாட்டம் விபரீதத்தில் முடிந்துள்ளது.

பொலீஸார், அதிரடிப்படையினர் விரைந்து கண்ணீர்ப் புகைப்பிரயோகம் மேற்கொண்டும் ஆர்ப்பாட்டம் கட்டுக்கடங்காமல் போனது. வீதி மறியலிலும் ஈடுபட்டனர். கடந்த செவ்வாய்கிழமை செயலகத்தில் இருந்த கணனிகள் யாவும் மாயமாய் மறைந்தன. தளபாடங்கள் நொருக்கப்பட்டன.

ஆழிப்பேரலை அகதிகளின் வீடுகள், நிர்

**வி.ரி.சகாதேவராஜா**

மாணிப்பது தொடர்பில் பிரதேச செயலர் எம். ஹசீம் கையாண்ட சர்வதிகாரப் போக்கு மக்கள் இவ்விதம் ஆத்திரமூட்ட வைத்துள்ளது என்று கூறப்படுகிறது. பசளைமானிய விநியோகத்தில் சிலகையாடல்கள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. கடந்த வெள்ளியன்று மழைகொட்டியது. அரசாங்க ஊழியரின் சம்பள மாற்றம் தொடர்பாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.பொன்னம்பலம் கல்முனை மாவட்ட கல்வி அலுவலர்களைச் சந்தித்து விளக்கமளித்துள்ளார். 'மஹிந்த சிந்தனை' சம்பளத்தில் காட்டிய கரிசனை பொருள்களின் விலைமாற்றத்தில் காட்டவில்லை என்று பரவலாக மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

# இயல்பு நிலை உருவாக வேண்டுமானால் அவசரகால சட்டம் நீக்கப்பட வேண்டும்

## அமைதிபேண இதுவே வழி என்கிறார் சிவநேசன் எம்.பி.

யாழ்ப்பாணம்,ஜன.29

இயல்புநிலை உருவாக்கப்பட வேண்டுமானால் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும். போர்ச்சூழலை அகற்றிப் பேச்சு இடம்பெறுவதற்கான சூழலை ஏற்படுத்த இதுவே வழியாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை அரசு அவசரகாலச் சட்டத்தை எப்போது பிரகடனப்படுத்தியதோ அன்று முதல் இராணுவமும் தனது அதிகாரத் துஷ்பிரயோகத்தைப் பயன்படுத்தத் தொடங்கியது எனலாம். இந்த நிலையே தமிழ்பேசும் மக்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து-விடப்பட்ட சூழலாக மாறியுள்ளது.

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவத்தால் இளைஞர்கள், யுவதிகள் கொலை செய்யப்படுவதும் துன்புறுத்தப்படுவதும், சுற்றிவளைப்புத் தேடுதல் மூலமாக மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதும், இவற்றினை நேரில் பார்த்து படம்பிடித்துச் சர்வதேசத்திற்கும், மனித உரிமை நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்த முனையும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர்கின்றது.

மக்கள் நடமாடும் வீதியெங்கும் காவல் அரண்கள் அமைக்கப்பட்டு தமிழ்பேசும் மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

கடற்றொழிலாளர்கள், தமது நாளாந்தச் செயற்பாட்டுக்குச் செல்வோர் உயிருடன் திரும்புவதற்கு உத்தரவாதமற்ற நிலையிருப்பதே மக்களை இடம்பெயரச்செய்கிறது. அவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கே சென்றனர். இதனைச் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இச்சூழ்நிலை போருக்கான நிலையினைத் தோற்றுவித்த போதும் தமிழ்த் தேசியத் தலைவர் சமாதான அனுசரணையாளரான எரிக் சொல்ஹெய்ம் ஊடாக இலங்கை அரசுடன் பேச்சுக்கான சூழலை உருவாக்கியுள்ளமை சர்வதேச அரங்கிலும், மனித உரிமை பேணும் அமைப்புக்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இவ்வாறான காலத்தை இலங்கை அரசு, முறையாகப் பயன்படுத்திப் பேச்சுக்கான புறச்சூழலை உருவாக்கிக்கொள்ள உறுதியுடன் செயற்படல் வேண்டும்.

ஆனால், சுடர்ஒளி - உதயன் பத்திரிகைகளின் திருமலை செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மேஜர் கபிலன் போன்றோர் கொல்லப்பட்டமை தமிழ் மக்களால் வன்மையாகக் கண்டிக்கப்படுகின்றது.

இந்நிலையைச் சர்வதேச சமூகமும், இலங்கை அரசும் மிகுந்த கவனத்தில் கொள்ள வேண்டும். பேச்சுக்கான காலமும் இடமும் தீர்மானிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்கமுடியாது.

பேச்சுக்கான புறச்சூழலை ஏற்படுத்த வேண்டிய அரசு இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிப்பதானது பேச்சைக் குழப்பிப் போருக்கான சூழலை ஏற்படுத்துவதாகவே கருதவேண்டியுள்ளது. இந்நிலை தொடர்வது இலங்கை அரசின் பொறுப்பற்ற தன்மையாகவே வெளிக்கொணரப்படும்.

எனவேதான் புறச்சூழலைச் சீராக்கிக் கொள்ளவதற்கு முதலில் அவசரகால நிலையை ஜனாதிபதி நீக்கவேண்டும். இதன் மூலம் இராணுவத்தினரின் அதிகார துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவது உடனடித் தேவையாகும். அத்துடன், இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களும் களையப்படவேண்டும். இந்நடவடிக்கைகளை இலங்கை அரசு செய்யத் தவறுமேயானால். அமைதிநிலையினைப் பேணுவது என்பது முடியாததாகவே இருக்கும்.

ஆகவே பேச்சு ஆரம்பித்து தொடரவேண்டுமாயின் அவசரகால நிலை நீக்கப்பட்டு இராணுவத்தின் அதிகார துஷ்பிரயோக நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது கடமையை முறையாகச் செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்திலேயே அமைதிநிலை தொடரவாய்ப்பு உண்டு.

# அரியாலையில் நேற்றுத் தேடுதல்

கொழும்புத்துறை,ஜன.29

அரியாலை தபாற்கட்டைச் சந்திப் பகுதியில் நேற்றுக்காலை பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

பெருமளவு இராணுவத்தினர் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்கு இனங்கியுள்ள இவ்வேளையில் இவ்வாறான நடவடிக்கைகள் இட்பெறுவது அச்சமூட்டுவதாக மக்கள் தெரிவித்தனர்.

(ஒ-30)

**ஞாயிறு நற்பிரசாதம்**

# இறைவழி நடந்து மனிதம் காப்போம்

'காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கிவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்' (மாற். 1:15)

இன்று உலக மக்கள் அனைவரும் பல நெருக்கடிகளையும் சவால்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கியுள்ளனர். இயற்கை அழிவுகள் ஒருபுறம். இறைவனின் படைப்பில் மிக்க மதிப்புள்ள மனித உயிரின் பெறுமதி அலட்சியப்படுத்தல் மறுபுறம் உலகியல் நோக்கு, ஆடம்பரங்கள் இன்பங்களின் பின்னே இழுபட்டுச் செல்கிறோம்.

இந்த நிலை மனித இனம் ஆன்மீகத்தை விட்டு விலகிச்சென்று கொண்டிருக்கிறது என்பதை உணர்த்துவதாகும். எமக்கும் மேலே ஒரு சக்தியுண்டு. அந்த இறைசக்தியை உதாசீனம் செய்கிறோம் எனப்பொருள்படுகிறது. பகையும், பெறாமையும், பழி தீர்க்கும் மனநிலையும் எம்மில் மாறவில்லை.

காலம் நெருங்கிவிட்டது. இன்னும் நாம் மனம்மாறக் காலந்தாழ்த்தக்கூடாது. இறைவன் விடுக்கும் நற்செய்தி அழைப்புக்குச் செவிகொடுங்கள் என இயேசு அறைகூவல் விடுக்கிறார்.

இயேசு தனது திறந்த பணிவாழ்வை ஆரம்பித்தபோது கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சீமோனையும் அந்திரேயாவையும் 'என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்' (மாற்.1:17) என அழைத்தார். அந்தச் சீடர்கள் வழியாக இந்த அழைப்பு எமக்கும் தரப்பட்டுள்ளது. மனிதரைப் பிடிப்பது என்பது சிறைப்படுத்தல், துன்புறுத்தல், அழித்தல் என்று பொருளல்ல.

நாம் ஒவ்வொருவருக்கும் எமது நன்மை பயக்கும் அன்றாட செயற்பாடுகளால் மனிதரை ஈர்ப்போராக மாறவேண்டும். இறைவழிக்கு அழைத்துச்செல்லும் கருவிகளாக பணிபுரியவேண்டும். அன்பு மனிதப் பண்பு, புரிந்துணர்வு, மன்னிப்பு என்னும் கனிவுள்ள சங்கிலிகளால் அனைவரையும் பிணைத்து மனித மாண்பை வளர்க்கவேண்டும். இதுவே இறைவன் கூறும் மனிதரைப் பிடிக்கும் வழிகள்.

இவ்வுலகு இப்போது இருப்பதுபோல் நெடுநாள் இராது. இனியுள்ள காலம் குறுகியதே. இறைவனால் எமக்குத் தரப்பட்டுள்ள எமது வாழ்வின் காலத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்துவோம். இவ்வுலக செல்வங்களுக்கும், அதிகாரங்களுக்கும், பெயர் புகழுக்கும் முன்னுரிமை கொடுப்பதை விடுத்து மனிதத்திற்கு முதலிடம் கொடுத்து இயேசுவின் அழைப்புக்கு சாட்சியாய் வாழ்வோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுத மோதல்களை தடுப்பது குறித்து கொழும்பில் மாநாடு

கொழும்பு, ஜன.29

தெற்காசிய பிராந்தியத்தில் ஆயுத மோதல்களைத் தவிர்ப்பது தொடர்பான மாநாடு கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான் உட்பட தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-12)

## நூல்கள் அன்பளிப்பு

நல்லூர், ஜன.29

யாழ். பொது நூலகத்திற்கு நாளை திங்கட்கிழமை ரூபா 50 லட்சம் பெறுமதியான நூல்கள் கையளிக்கும் வைபவம் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அபிவிருத்தி அமைச்சு இந்த நூல்களை வழங்கவுள்ளது.

(ஒ-111)

**Refresh System**

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய், 077-6279671, 077-3253104.
(44848)(21.19.17)

### அபிராமிப்பட்டர் விழா

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகமும் மாலை 4 மணிக்கு அபிராமி அந்தாதி பக்கவாத்திய சகிதம் ஓதி உற்சவம் நடைபெறும்.

உபயம்:
வா.ஜெயவஸ்த்தாங்கன்
வா. விஸ்ணுவர்தனன்
வா.ஜெனார்த்தனன்.
(46075)

கொழும்பு, வெள்ளவத்தையில்
Nature Way இல் மணப்பெண் அலங்காரம் Hair Style, Facial, Wedding Cake, Structure என்பவற்றிற்கான Orders செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு:
Mrs.T.Luxmy
Tel. 2505325
(21.11.19) (44990)

**சிறுகுறிஞ்சாப் பவுடர்**

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும், உடஉணவுமாகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப் பொருள்கள் போன்ற நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.
BIOTEC INTERNATIONAL
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி [பாம் ஸ்கூல் அருகில்]
T.P. 021 4590907
32/5 ரெமில்வே அவனியூ, கொழும்பு - 06 T.P. 0112 852269
(44990) (21.11.19)

**விற்பனைக்கு**

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 1 அடி நீளம், 4'' அகலக் கல்லின் விலை 26/- ரூபா மட்டும். நேரடியாகப் பார்வையிட்டுப் பெற்றுச் செல்லவும்.
இடம்: VNC
கும்பளாவளை பிள்ளையார் கோயில் அருகில்,
(45944) அளவெட்டி மத்தி, அளவெட்டி. (261719)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**HND, MBA**

பிற்போடப்பட்ட மேற்படி கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் 11.02.2006 தைப்பூசத் தினத்தன்று ஆரம்பமாகவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

அனுமதிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களும் புதிய பதிவினை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களும் உடனடியான அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

Director
IIS City Campus
# 181, Navalar Road, Jaffna.
☎ 021 222 8060



**G.C.E. O/L G.C.E. A/L படித்த மாணவர்களுக்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்**

3C, 3S or 3B, 3C தகமையுடன் வெளிநாட்டில் உயர்கல்வி.

UK, USA, Canada, Singapore, Cyprus, Malasia, Australia, New Zealand, Rusia போன்ற நாடுகளில் மேற்படிப்பைத் தொடர்வதற்கு University, College அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுத்தருகிறது.

சகுமட்டுமல்லாது Rusian University களில் நீங்கள் M.B.B.S முடிப்பதற்கான முழுவருட அனுமதிக்கட்டணம் 2500$ (1 year)

மலேசியாவின் Tafe College மிகப்பெரிய Technical கல்லூரி ஆகும். Automative Enginerring, Multimedia Computing, Computer & Network Technology, Software Engineering Technology, Business Accounting, Finance, Business Management போன்ற பெரிய அளவிலான படிப்பை குறைந்த செலவில் படிப்பதற்கு சலுகைகளைப் பெற்றுத்தருகிறது.

Courses Available
- Computing
- Business Management
- Engineering & Mathematical Sciences
- Art
- Business Studies
- Law
- Urban Planning
- Social Sciences
- Architecture & Construction
- Education & Training
- Humanities
- Sciences
- Commercial Management
- Tourism Management
- Research Degree MA/MPHIL/PHD
- MBA
- MSC & MA
- Bachelor of Business Administration
- BSc. (Hons.)
- BA
- E-Business
- Biotechnology
- Microbiology
- Software Engineering
- Information Technology
- Computer Administration
- Medichine
- Economics
- Hotel Management
- Accounting
- Marketing Management
- Travel & Tourism

2006 February, April ற்கான பதிவுகள் நடைபெறுகின்றன



SKY LINE TRAVELS & SERVICES
PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSLTANTS
No. 7-1/2, W.A.Silva Mawatha, Wellawatte, Sri Lanka. Tel: 0773 175767
E-mail: Mohamedhaniffa_riyas@yahoo.co.uk

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 09 - 1933 | 30 - 12 - 2005 |



### திருமதி கனகசபை பராசக்தி

இன்று (29.01.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் சமுகமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கண்டிவீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (46072) (21.19.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 19 - 10 - 1929 | 30 - 12 - 2005 |



### அமரர் முருகேசபிள்ளை ஒப்பிலாமணி

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)

30.12.2005 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் முருகேசபிள்ளை ஒப்பிலாமணி அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலமும் , நேரிலும் அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும் எமது தலைவர் நோயுற்ற காலத்தில் உதவிபுரிந்தோருக்கும், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை சமூகத்தினருக்கும், யாழ் மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தினருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*குறிப்பு : இன்று (29.01.2006) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

556, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (46088)(21.17.19)

தகவல்:
சுமதி ஒப்பிலாமணி (மகள்)

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மனம் மகிழ | மனம் நெகிழ |
|---|---|
| 1970 - 02 - 19 | 1988 - 01 - 29 |



### செல்வி துரைஐயா சிவரமணி

குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த எங்கள்
அன்புத் தெய்வமே!
இளமைப்பருவத்தில் மாண்புடன் வாழ்வாய் என்றிருக்க
எங்களை ஏங்க வைத்து எங்கு சென்றுவிட்டாய்?
பால்வடியும் முகமும் சிரித்த வதனமும் இனி
எங்கு நாம் காண்போம்...

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு,
நல்லூர். (57077)(21.19.17)

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா,
தங்கைமார்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11 - 10 - 1914 | 25 - 12 - 2005 |



தெல்லிப்பழை - பொன்னர்வளவு

### அமரர் சபாபதி துரைராஜா

(சிமெந்து கூட்டுத்தாபன பொறுப்பதிகாரி)

அமரர் சபாபதி துரைராஜா அவர்கள் 25.12.2005 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த செய்தியறிந்து வந்து பல வழிகளிலும் உதவிசெய்த அன்பர்களுக்கும் நோயுற்று இருந்தவேளையில் உதவி செய்த Medical ஸ்தாபனத்தார் கொழும்பு - 3, Royal Hospital வைத்தியர்கள், ஊழியர்களுக்கும், திவ்வியா பயிற்சி நிலைய மாணவர்களுக்கும் Wellawatha Pharmacy ஊழியர்களுக்கும் நித்தம் மன ஆறுதல் தந்த கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களுக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து சிறப்பித்து சகலவிதத்திலும் உதவிசெய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும்; மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, தந்தி, கடிதம், அனுதாபமடல்கள் மூலம் துக்கம் விசாரித்து ஆறுதல்வார்த்தைகள் கூறியவர்களுக்கும் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் இன்னும் பலவழிகளிலும் உதவிசெய்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

31, Boswell place,
Colombo - 6.
Tel. 2504218
(சி-47559)(21.19.17)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
தகவல் :
அருந்ததி துரைராஜா (மகள்).

## மரண அறிவித்தல்

### அமரர் செல்லத்துரை மங்களம் (ரோசலீன்)



சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாக்வும் கொண்ட திருமதி செல்லத்துரை மங்களம் (ரோசலீன்) 22.01.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜோன் - மேரிசின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஜோன் தேவசகாயம் (நியூசிலாந்து), ஜேம்ஸ் (சிங்கப்பூர்), மேசிகமலம், அனா ஜீவமணி (பரிஸ்), காலஞ்சென்றவர்களான ரூத், புஸ்பம், அக்னஸ் செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் றெஜீனா (நியூசிலாந்து), திருச்செல்வம் (பரிஸ்), காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, இராஜசேகரம், றூபி ஆகியோரின் மைத்துனியும் பத்மவதி (ஜேர்மனி), சறோஜினி தேவி (கனடா), மோகன் (ஜேர்மனி), மதிமுகன், மனோதீபன் (ஜேர்மனி), சியாமளா (வவி), காலஞ்சென்ற காந்திமதி, வளர்மதி (குமுதினி -ஜேர்மனி), மால்மருகன் (மால்), காலஞ்சென்ற மஞ்சளாதேவி, மயூறேபன் (பாபு- ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பெருந்தவராசா, லோகேஸ்வரன், பவானி, லிங்கேஸ்வரி (சாந்தி), சத்தியதேவி, செல்லத்துரை, யோகநாதன், ரஜினி, சுபாஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மலர்வன், டார்ஜன், பானுஷன், சதுர்ஜன், தனுஜா, நிரோஜன், வினுஜா, ஜெதுஷன், விலக்ஷன், துவாரகன், டிலானி, பிரவீன், அனுஜா, திருக்குமரன், பானுக்குமரன், ஜெனன், அனோஜன், நிவேதா, குருஷிகா, யோகவாணி, பிரகாஷ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(30.01.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''திருமால் இல்லம்''
கோப்பாய் மத்தி,கோப்பாய்.
T.P.No: 0776139889 (46094)(21.19.17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொலிடாரின் பன்முகப் பணிகளுக்கு மகுடம் சூட்டிய சுனாமிக் கண்காட்சி

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களைப் போக்குவதற்கான உடனடி உதவிகளை வழங்குவதற்காக இலங்கையில் சொலிடார் அமைப்பு பல பணிகளைச் செய்துவருகின்றது.

'நோர்வே மக்கள் உதவி' (Norwegian People's Aid - NPA) 'ஆபிட்டர் சமாரிட்டர் பண்ட்' (Arbeiter Sam- ariter Bund - ASB) 'தொழிலாளர் உதவி'(SAH)ஆகிய மூன்று நிறுவனங்கள் சொலிடார் வலையமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

எவருமே எதிர்பார்க்காத வகையில் உலகை உலுக்கிய ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் இலங்கையின் வடக்கே உள்ள யாழ்ப்பாணத்தின் கரையோரங்கள் பலவும் சிதைந்து சின்னாபின்னப்பட்டுப் போயின.

யாழ்ப்பாணத்தில் ஆழிப்பேரலை தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பகுதியில்தான் சொலிடாரின் மனிதாபிமானப் பணிகள் இடம்பெறுகின்றன.

### இடைத்தங்கல் முகாம்கள்

குறிப்பாக வத்திராயன், உடுத்துறை, மருதங்கேணி போன்ற பகுதிகளில் 'சொலிடார்' நிறுவனம் பன்முகப் பணிகளை மேற்கொள்கிறது. அந்தக் கிராமங்களில் ஆழிப்பேரலையினால் குடியிருப்புகளை இழந்தவர்களுக்கு இடைத்தங்கல் முகாம்களை அமைத்துக் கொடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓரளவு ஆறுதலை ஏற்படுத்திய தொண்டு அமைப்புகளில் 'சொலிடார் ' நிறுவனமும் ஒன்று.

சொலிடாரின் இடைத்தங்கல் முகாம்களில் ஒவ்வொரு குடும்பங்களுக்குமென தற்காலிக வீடுகள் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அடிப்படை வசதிகளான தண்ணீர், மலசலகூடம் போன்றனவும் போதுமான அளவில் அந்த அமைப்பினால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. குடிதண்ணீர் பெறுவதற்கு பிளாஸ்ரிக்கிலான நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. உள்ளகப் போக்குவரத்து வசதிகளுக்காக சிறுசிறு வீதிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

### நிரந்தர வீட்டுத் திட்டம்

சொலிடார் நிறுவனம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஆயிரத்து 125 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறது. இந்த நிரந்தர வீடுகளுக்கான மாதிரி அமைப்பாக - பரீட்சார்த்தமாக உடுத்துறையில் இரண்டு


மங்கள விளக்கேற்றல்...

வீடுகள் தற்போது அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சுமார் ஏழரை லட்சம் ரூபா செலவில் ஒவ்வொரு வீடுகளையும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த வீடமைப்புத்திட்டக் கிராமங்களில் வீதி அமைப்பு உட்பட வேறு சில உட்கட்டுமானப் பணிகளையும் ' சொலிடார் ' மேற்கொண்டிருக்கிறது.

' சொலிடார்' அமைப்பின் திட்ட முகாமையாளராக 'ஜேம்ஸ் மார்ட்டின் ' என்பவர் சேவையாற்றுகிறார். மிகவும் இளம் வயதினரான அவர் மிகவும் துடிப்போடு பணியாற்றுகின்றார். தனக்குக் கீழ் பணியாற்றும் அலுவலர்களோடு மாத்திரமின்றி தமது நிறுவனத்தின் உதவித் திட்டங்களைப் பெறுகின்ற மக் களிடத்திலும் மிகவும் சாதாரணமாக - அன்னியோன்யமாக பழகுகின்றார் ஜேம்ஸ் மார்ட்டின்.




கண்காட்சியில்.....

''.... ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று ஒரு வருடத்திற்கு மேலாகி விட்டதே. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டத்தை ஏன் இவ்வளவு தாமதப்படுத்து கிறீர்கள்...?''என்று அவரிடம் பேச்சுக் கொடுத்தோம்.

''... தாமதம் எங்களிடம் இல்லை. நாங்கள் குறிப்பிட்ட வீடுகளுக்கென ஒதுக்கிய நிதியை எப்போதும் செலவழித்து வீடுகளை அமைக்கத் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் இந்த நிரந்தர வீடுகளுக்கான காணிகளை எமக்கு வழங்குவதில்தான் தாமதம் காட்டுகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் நலனில் அக்கறை கொள்ளாது அவர்களுக்கான நிரந்தர வீட்டிற்குரிய காணிகளை எமக்கு வழங்குவதில் அரச திணைக்களங்கள் தாமதம் காட்டுகின்றன....'' என்றார் ஜேம்ஸ்.

சம்பந்தப்பட்ட மக்களும் அரச அலுவலர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கினால் குறுகிய காலத்தில் வீடமைப்பு பணிகளை முழுமையாகவே முடித்துவிடலாம் என்று நம்பிக்கையோடு அவர் கூறினார்.

அந்தளவுக்கு தமது பணிகளை நேரகாலத்துடன் முடித்து ஆழிப் பேரலை தாக்கிய மக்களை நிரந்தர வீடுகளில் குடிய

**அலங்காரன்**

மர்த்தி அவர்கள் நிம்மதியாக தொழில் செய்து வாழ்வதற்கு வழிசெய்ய வேண்டும் என்று 'சொலிடார்' நிறுவனம் கருதுகிறது அதற்கான செயற்பாடுகளில் முனைப்போடு- திடசங்கற்பத்தோடு ஈடுபட்டு வருகிறது சொலிடார்.

### ஆழிப்பேரலைக் கண்காட்சி

சொலிடாரின் மனிதாபிமானப் பணிகளை வெளிக்கொணர்வதற்கும், ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவங்களை நினைவு கூர்வதற்காகவும் கடந்த 16, 17, 18, 19 ஆகிய திகதிகளில் மருதங்கேணியிலும் 20, 21, 22 ஆகிய திகதிகளில் பரந்தனிலும் கண்காட்சி நடத்தப்பட்டது. ஆழிப்பேரலையின் ஆவணப்பதிவாக அமைந்திருந்த ஆழிப்பேரலை அனர்த்தக் கண்காட்சி பார்ப்போரை மிகவும் கவர்ந்திழுப்பதாய் - மெய்சிலிர்க்க வைப்பதாய் அமைந்தது என்றால் அது மிகையல்ல.

ஆழிப் பேரலையினால் கரையோரக் கிராமங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்தழிவுகள் போன்றவற்றையும் ஆழிப் பேரலைக்குப் பின்னரான மக்களின் வாழ்க்கைநிலை அவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகள் என்பவற்றையும் தத்ரூபமாக விளக்கி நின்ற சுமார் இருநூற்றுக்கும் அதிகமான புகைப்படங்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சியின் முக்கியத்துவத்தை அறிந்த மக்கள் பெருமளவில் படையெடுத்துவந்து கண்காட்சியைப் பார்வையிட் டனர். பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் பலரும் அவர்களுடைய ஆசிரியர்கள் சகிதமாக வந்து கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

ஒவ்வொரு புகைப்படமும் ஒவ்வொருவிதமான உள்ளார்ந்த அர்த்தம் பொதிந்தவையாகக் காணப்பட்டன.

கண்காட்சி மண்டபத்தினுள் நுழைந்தவுடன் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்த புகைப்படம் ஒன்று சற்றுப் பெரியளவில் வைக்கப்பட்டிருந்தது.

'பாவப்பட்ட மக்களுக்கு அபயம் தருவேன்' என்று கூறி அழைத்த இயேசுபிரானின் திருச்சொரூபம் உருக்குலைந்து போய் கற்களோடு கற்களாக குவிக்கப்பட்டிருந்த காட்சிதான் அது.

மரியாள் மகனின் உடலற்ற தலை ஒன்று கற்குவியலுக்கு மத்தியில் அநாதரவாகக் கிடந்ததை இயற்கையாகவே படம் பிடித்திருந்தார்கள்.

சாதி, மத, இன பேதம் கடந்து இயற்கை அன்னை தனது சீற்றத்தில் அனைவரையும் ஒன்றாகவே பார்க்கிறாள் என்ற உலக யதார்த்தம் முதலாவதாக வைக்கப்பட்டிருந்த இயேசு நாதரின் தலை வைக்கப்பட்டிருந்த படத்தில் உயிரோட்டமாகக் கிடந்தது. பச்சிளம்பாலர்கள், பள்ளிச்சிறார்கள், வயோதிபர்கள் வரை அனைவரையுமே தனது அரக்குப் பிடிக்குள் சிக்க வைத்துவிட்ட ஆழிப்பேரலைக்ளை கொடிய விஷம் கொண்ட நாகபாம்பாக சித்திரித்துக் காட்டியது ஒரு புகைப்படம்.

தமது கல்விக்கான அடிப்படை வசதிகள் யாவும் நிர்மூல


பார்வையிடும் மாணவர்கள்....

மாகிவிட்ட நிலையில் ஏக்கப் பெருமூச்சோடு காத்திருக்கின்ற பள்ளிச் சிறார்களின் சோகத்தை பறைசாற்றியது மற்றைய படம்.

இவ்வாறாக ஒவ்வொரு புகைப்படமும் ஒவ்வொரு வகையான அர்த்தத்தைப் புலப்படுத்தி நின்றது.

'சொலிடார்' மனிதாபிமான நிறுவனம் தனது மனிதாபிமான ரீதியான மறுவாழ்வுப் பணிகளுக்கிடையே இப்படியான புகைப்படக் கண்காட்சிகளைத் தொடர்ந்தும் ஏனைய இடங்களிலும் நடத்தவேண்டும். அது அந்த நிறுவனத்தின் பணிகளுக்கு மகுடம் வைத்தாற் போன்று அமையும்'' என்று கண்காட்சிக்கு வந்திருந்தவர்கள் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

---

# பேச்சுப்பற்றி...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள், மூத்த தளபதிகள், பொறுப்பாளர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். பெருமளவு உடைமைகள் நாசமாக்கப்பட்டன.

இந்நிலையிலும் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் பொறுமை காத்துத்தான் வந்துள்ளனர்.

இன்னமும் பொறுமை காத்து, சிங்களத் தலைமை ஏதாவது செய்யும் என எதிர்பார்த்துக் காத்திருக்குமாறு சர்வதேச சமூகம் ஆலோசனை கூறுவது நியாயமானதா? என்பதை, இலங்கை விடயத்தில் சம்பந்தப்பட்ட நாடுகள் சற்றுச் சிந்திக்கவேண்டும்.

தொடர்ந்தும் சிங்களத் தலைமைகளிடம் கையேந்தி நிற்பதைத் தவிர்த்து, சுயாதீனமான அரசு ஒன்றுக்கான போராட்டத்தை ஆரம்பிக்கும் நிலைக்குத் தமிழர் தரப்பு தள்ளப்பட்டுள்ளது என்ற யதார்த்தத்தை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்.

சிங்களத் தலைமைக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள கடைசிச் சந்தர்ப்பத்தைத் தெற்குத் தலைமை சரிவரப்புரிந்து செயற்படத் தவறுமேயானால், தனியரசை நிறுவும் போராட்டத்தை மீண்டும் தமிழ் மக்கள் ஆரம்பிப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

### தீர்வை வைக்காவிட்டால் தனி அரசுதான் ஒரே வழி

ஒரு நாட்டுக்குள் இரு அரசுகள் என்ற நிலை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதை ஒரு பாடமாகக்கொண்டு தெற்கின் சிங்களத் தலைமைகள் செயற்பட்டு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய - நடைமுறைச் சாத்தியமான - தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கவேண்டும்.

அத்தகைய ஒரு நிலையைப் புதிய ஜனாதிபதியால் ஏற்படுத்த முடியுமானால், அவரது நாமம் நிலைக்கும். இல்லாவிட்டால் தமிழர் தனியரசுக்கான கால்கோள் இட்டவராக அவர் வரலாற்றில் இடம்பெறுவார் என்பது மட்டும் உண்மை.

★

---

# மனிதப் பேரவலத்தை...

(09பக்கத் தொடர்ச்சி)

* அணுகுண்டு வெடிப்புகள் (Atomic bomb explosions)

கடற்படுக்கைப் புவி நடுக்கங்களுடன் நிலச் சரிவுகளும் சேர்ந்து ஏற்படுமாயின் அவை சுனாமியின் வலுவை அதிகரிக்கவும் மேலதிக சுனாமிகள் உருவாகவும் காரணமாகிவிடும்.

1883 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இந்தோனேசிய தீவுக்கூட்டத்திற்குச் சமீபமாக அமைந்த றாகற்ரோ எரிமலையின் கூம்பு உடைந்து வீழ்ந்ததால் நீர்நிரல் தொகுதி மேலெழுந்து உருவாகிய 'சுனாமி' கடலோரத்தில் 115 அடி உயரத்திற்கு மேலெழுந்து 295 நகரங்களைத் துவம்சம்செய்து 36,000 மனித உயிர்களைக் காவுகொண்ட வரலாற்றை நான்காவது கட்டுரையில் விவரித்திருந்தோம். ஆயினும் பதிவுசெய்யப்பட்ட வரலாற்றுத் தகவல்களின்படி கடற்படுக்கை நிலநடுக்கமே அதிகளவு பயங்கரமான 'சுனாமி'யைத் தோற்றுவித்துள்ளது. இவற்றுள் 1755 ஆம் ஆண்டில் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் ஏற்பட்ட புவிநடுக்கத்தின் விளைவாக உருவான 'சுனாமி' ஏறத்தாழ முப்பது அடி உயர அலைகளைக் கடலோரத்தில் ஏற்படுத்தி முப்பதாயிரம் மனித உயிர்களைக் காவுகொண்டது. போர்த்துக்கல் நாட்டின் காலனித்துவ ஆட்சி அபிலாசைகள் தோல்வியைத் தழுவியமைக்கு இச்சுனாமி [illegible] முக்கிய காரணமாகும்.

1896 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜப்பானில் ஏற்பட்ட புவி நடுக்கத்தின் விளைவாக உருவான 'சுனாமி' தொண்ணூறு அடி உயர அலைகளை ஏற்படுத்தி இருபத்தேழாயிரம் மனித உயிர்களைக் காவு கொண்டது. 2004 டிசெம்பர் 26 ஆம் திகதிய சுனாமியின் தாக்கமே எமக்குத் தெரிந்த வரலாற்றில் அதிகளவு உயிர்ச் சேதத்தை ஏற்படுத்திய அனர்த்தமாகும்.

எமக்குக் கிடைக்கும் வரலாற்றுத் தகவல்களின்படி உலகிலேயே மிகப்பெரிய அலை 1958 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்பதாம் திகதி ஏற்பட்டது. இத்தினத்தில் அமெரிக்காவின் அலஸ்கா மாநிலத்தின் லித்துயா விரிகுடாவினுள் (Lituya Bay) மிகப்பெரும் பாறையொன்று விழுந்தபோது ஏற்பட்ட 'சுனாமி' குடாவின் மறுகரையை அடைந்தபோது கடலோர மலைச்சாரலில் கடல் மட்டத்திலிருந்து ஆயிரத்து எழுநூறு அடி வரை உயரமான இடங்களில் இருந்த காடுகளையெல்லாம் துவம்சம் செய்தது.

பல மைல் விட்டமுள்ள விண்வெளிக்கல்லொன்று சமுத்திரத்தில் வந்து விழுமாயின் அது மேற்கூறியதைவிடப் பெரிய 'சுனாமி'யை ஏற்படுத்தலாம்.

'சுனாமி' கடலோரத்தை அண்மித்தவுடன் ஏன் பேரலையாக உருவெடுத்துப் பேரழிவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணத்தில்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்

வாழும் கலைப்பயிற்சி

நாள்:- 30.01.2006 திங்கட்கிழமை
மாலை 5.00 மணி
பயிற்சி பற்றிய இலவச அறிமுகஉரை

இடம்:- நல்லூர் கம்பன கோட்டம்

பயிற்சி நாள்கள்:- 31.01.2006 முதல் 05.02.2006வரை

பயிற்சி நேரம்:- மாலை 4.30 மணிமுதல் 6 மணி வரை

மேலும் தொடர்புகளுக்கு: 0779059544, 0776160214

www.artofliving.org (46118) www.srisriravishankar.org



## COLLEGEVIEW International



Special classes for Spoken English & IELTS

Basic Qualification G.C.E. (O/L)

Your VISA to the World

STUDY IN LONDON

CANADA, MALAYSIA, SINGAPORE SWITZERLAND, CYPRUS & INDIA

Available Courses

- Management
- Business Ad. (BBA, MBA, Phds)
- Marketing
- HRM
- Law
- Computer Science
- IT Networking,
- Pattern Designing & Textile
- Nursing etc.
- Hotel Management
- Travel & Tourism
- Engineering (Aerospace, Electrical & Electronical etc...)
- Medicine
- Dental
- Fine Arts
- Beauty Culture
- Shipping Courses.

All Courses are available in any field

# February & may Semester க்கான பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

# பகுதிநேர வேலைவாய்ப்பு,

# இலகுவாக செலுத்தக்கூடிய தங்குமிட வசதிக்கட்டணம்

COLLEGEVIEW International
(Professional Overseas Educational Consultants & Promoters)
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.
Tel : 0 115 672131, 0114 512175 Fax : 0114 512175
Hotline : 0714 245166, 0773 113156
Email : collegeview@visualnet.lk


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இராஜபூபதி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - வட்டு.இந்துக் கல்லூரி)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் மூளாய் வீதி, வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராஜபூபதி 27-01-2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்புமகளும் இலகுப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் Dr.ரஞ்சன்(U.K), ராஜினி (ஆசிரியை-கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.மதுமலர் (U.K) அவர்களின் அன்பு மாமியும் சின்னம்மா, ஆறுமுகம், ஞானமணி, காலஞ்சென்ற திருமதி ரஞ்சிதமலர், இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மாணிக்கம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற கந்தையா, கனகரத்தினம், திருமதி பராசக்தி, திருமதி சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30-01-2006) திங்கட்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மூளாய் வீதி, (சி/47576) தகவல்:
வட்டுக்கோட்டை. (26-17-19) எஸ்.இராமநாதன்.

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஜன.29

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை அபிராமிப்பட்டர் விழா நடைபெறவுள்ளது.

இதனையொட்டி விசேட அபிஷேகம், அபிராமி அந்தாதிப் பாடல் இசைத்தல், வசந்த மண்டபபூஜை, சுவாமி வீதி உலா வருதல் என்பன இடம்பெறும். (ஒ-173)

* * *

வடமராட்சி,ஜன.29

பொலிகண்டி கந்தவனக் கடவை கந்த சாமி கோயிலில் கும்பாபிஷேக தினவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அன்றையதினம் காலை 108 சங்காபிஷேகம் இடம்பெற்று, மாலையில் திருக்கல்யாண உற்சவத்துடன் கும்பாபிஷேகதினம் நிறைவடையும். (ஒ-173)

* * *

வரணி,ஜன.29

துன்னாலை வடக்கு, ஸ்ரீ வல்லிபுர சுவாமி கோயில் பெப்ரவரி மாத விசேட பூசை தினங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை பூர் ஏகாதசி, 11ஆம் திகதி சனிக்கிழமை தைப் பூசம், பெப்ரவரி 24ஆம் திகதி வெள்ளி அபர ஏகாதசி ஆகிய விசேட தினங்களின் விசேட பூசை ஆராதனைகள் இடம்பெறவுள் ளன. ஏகாதசி விசேட தினங்களில்பிற்பகல் 4 மணிக்கு விசேட ஆராதனை,அபிஷேகம் என்பன இடம்பெறும். (ஒ-170)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 27.01.2006 வெள்ளிக் கிழமை சிவபதம் அடைந்த உடுவில் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர் **சண்முகராஜா சண்முகலிங்கம்** (அதிபர் யா/ ஈவினை அ.த.க.பா.) அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத் தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(46127) உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளரும் உடுவில் கோட்ட அதிபர்களும்.


தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு லண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் கணனிப் பயிற்சி நிலையமும் ஆங்கில வள நிலையமும்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

மேற்படி பயிற்சி நிலையத்தில் கணனி, ஆங்கில பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயிற்சி பெறவிரும்புவோர் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற் கொள்ளவும்.

முகாமையாளர்,
இல.401/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (46124)



## கடை வாடகைக்கு

கொக்குவில் சந்தியில் இரு கடைகள் வாடகைக்கு உண்டு.

முற்பணம் எதிர்பார்க்கப்படும்.

தொடர்பு : நாகராஜா (சுஜன்)

(46116) T.P.: 0773 151616


## வெள்ளிவிழா நாயகருக்கு மாபெரும் பாராட்டு விழா

சிவாச்சாரிய சேவையில் 25 வருட பூர்த்தியைக் காணும்

**சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்கள்** அவர்களுக்கு

(பிரதமகுரு, மடத்துவெளி மகாமாரி அம்மன் தேவஸ்தானம்)


உடுப்பிட்டி தேவன்குறிச்சி கற்பகவிநாயகர் தேவஸ்தானத்தினர், அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை ஒன்றியத்தினர் அனுசரணையுடன் இந்து மறுமலர்ச்சி ஆதீனம் எடுக்கும்

**கௌரவிப்பு விழா**

இடம்: தேவன்குறிச்சி கற்பக விநாயகர் தேவஸ்தான மண்டபம்
காலம்: தைத்திங்கள் 16ஆம் நாள் (29-01-2006)
ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மதியம் 12.00 மணி (சி/47575)(32-26-17-19)

## நீங்காத நினைவில் 31ஆம் நாள்

தோற்றம் 19 - 10 - 1929



மறைவு 30 - 12 - 2005

அமரர் **முருகேசபிள்ளை ஒப்பிலாமணி**

(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்கட்சி ஆரம்பகால முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும் ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும்)

உங்கள் விண்ணுலகப் பயணத்தை
எங்களால் தாங்கமுடியவில்லை
கண்ணீர் மல்க நினைந்து நிற்கின்றோம்
மேடைகள் பல கண்ட 'அராலியூரானை
என்றும் மறப்போமா?
காலன் தன்மேடைக்கு அழைத்தாலும்
உம்மோடு சார்ந்தவர்கள் என்றும் மறப்பதற்கில்லை!

43, 3ஆம் குறுக்குத் தெரு, அகில இலங்கை
யாழ்ப்பாணம். தமிழ்க் காங்கிரஸ் கட்சி.
(46121) (24-26-17-19)

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 19 - 10 - 1929



உதிர்வு 30 - 12 - 2005

அமரர் **முருகேசபிள்ளை ஒப்பிலாமணி**

(முன்னாள் தலைவர், யாழ்.மாவட்ட கிராம சேவையாளர் சங்கம்)

அர்ப்பணிப்பு உணர்வுடன்
ஆளுமை திறன் மிகு ஐயா எம்
சங்க உயிர் புற
தந்த உம் சேவைகள் மறவோம்!
விதியை வென்றவர் யார் தான்
எங்கள் தலைவா! இறைபதம் எய்தி
சாந்தி பெற்றிட நாமும்
இறைவனை வேண்டுவோம்.

யாழ்ப்பாணம். (46120)(26-17-19) யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்.


# 4வது வருடத்தில் BBS இன் 4 வளாகங்கள்

யாழ்ப்பாணம் கோயில் வீதி | யாழ்ப்பாணம் கண்டி வீதி | பருத்தித்துறை கிராமக் கோட்டடி | மானிப்பாய் ஆலடிச்சந்தி

எதிர் வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி தைப்பூசம் அன்று ஏடு தொடக்கி அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

Year 1-5 English Medium

**Week End Classes நடாத்தப்படும்.**

ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், பாடல்கள் ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றன. மேற்கூறப்பட்டவாறும் எமது யாழ் நகர் வளாகங்களில் நடாத்தப்படுவது போன்று மானிப்பாய் வளாகத்திலும் சிறந்த கொழும்பில் பயிற்றுப்பட்ட ஆசிரியர் களினால் நடாத்தப்படும்.

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

வயது 2+ முதல் வயது 3 வரை Play Group

வயது 3+ முதல் வயது 4 வரை Montessori

வயது 4+ முதல் வயது 5+ வரை Pre-School

**விசேட அம்சங்கள்**

- ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
- தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
- பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
- முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

BBS ஆல் நடாத்தப்படும் மற்றைய ஆங்கில மொழி பாடநெறிகள்

5+ to 14+ சிறார்களுக்கு

- Diploma in English
- Certificate in English
- IELTS
- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

BRITISH BUSINESS SCHOOL

இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, நல்லூர். | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

HOT LINE : 021-222-5796 e-mail: british.businessschool...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத் தேர்தல் முடிவு: மத்திய கிழக்கில் புதிய திருப்பங்களுக்கு இடமளிக்குமா?

பலஸ்தீனத் தேர்தலில் ஆளும் பதாஹ் கட்சி தோல்வியுற்று தீவிரபோக்குள்ள ஹமாஸ் அமைப்பு அதிக ஆசனங்களை வென்று பதவிக்கு வந்துள்ள நிலையில் மத்திய கிழக்கின் எதிர்காலம் பற்றிய பெரிய கேள்வி ஒன்று எழுந்துள்ளது.

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான பிணக்குகளைத் தீர்த்துக்கொண்டு பலஸ்தீன தனிநாடு ஒன்றை அமைப்பது என்ற கொள்கையுடன் செயற்பட்டுவந்த அதிபர் மக்மூத் அப்பாஸின் கட்சி தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதனால், ஏற்கனவே இரு நாடுகளுக்குமிடையில் பகிர்ந்துகொள்ளப்பட்ட கொள்கைக் கோட்பாடுகளுக்கு ஒரே அடியாக வீழ்ச்சியேற்பட்டுவிடுமா அல்லது புதிய மாதிரியில் சமரசத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா என்பதெல்லாம் இப்போதைக்குத் தெரியவரமாட்டாது. என்றாலும் 'ஹமாஸ்' அமைப்பின் பிரமுகர்கள் சிலர் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் உற்சாக மூட்டுவனவாக இருக்கின்றன.

பதாஹ் அமைப்போடும் வேறு கட்சிகளோடும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் சாத்தியம் இருப்பதாக ஹமாஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். பலஸ்தீனத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்தியதன் பின்னர் அரசு அமைப்பது பற்றி ஆராயப்படும் என்று அவர் கூறினார்.



இஸ்மாயில் ஹொனியெஹ்
(ஹமாஸ் தலைவர்)

பலஸ்தீன எழுச்சி 2000ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஹமாஸ் அமைப்பு சுமார் 60 தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை இஸ்ரேலுக்கெதிராக நடத்தி வந்துள்ளது. பதாஹ் கட்சிக்குள் உட்பூசல் ஏற்பட்டிருப்பதும் ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேடுகள் ஏற்பட்டிருப்பதும் ஹமாஸ் அமைப்புக்கு வாய்ப்பைக் கூட்டியிருக்கின்றன.

எதுவானாலும் தீவிர இஸ்லாமிய கொள்கைகளையுடைய ஹமாஸ், பலஸ்தீனத்தில் பதவி ஏற்பது இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான பிணக்குகளை மேலும் சிக்கலாக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறுவதற்கு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், பதாஹ் கட்சியின் தலைவரும் பலஸ்தீன அதிபருமான மக்மூத் அப்பாஸுடன் செய்துகொண்ட உடன்பாடே காரணம் என்று கூறப்பட்டபோதிலும் ஹமாஸ் அமைப்பின் தீவிரவாத நடவடிக்கைகளின் காரணமாகவே இஸ்ரேல் வெளியேறியதாகப் பலஸ்தீனியர்கள் பலர் நம்புகின்றார்கள். வன்செயல்களால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு அவ்வமைப்பு வழங்கி வந்த உதவிகள் ஊக்குவிப்புகளாலும் பலஸ்தீனர்கள் மத்தியில் அது செல்வாக்குப் பெற்றுள்ளது.

**பெண்கள் அச்சம்**

பலஸ்தீனத்தில் ஹமாஸ் ஆட்சிக்கு வந்தால் இஸ்லாமிய ஷரியத் சட்டத்தை அமுல்படுத்தக்கூடும் என்றும், பலஸ்தீனப் பெண்கள் மீண்டும் 'பர்தா' அணிய வேண்டியேற்படும் என்றும் அஞ்சப்படுகின்றது. பலஸ்தீனப் பெண்களின் மனித உரிமைகள் பறிக்கப்படலாம் என்றும் கருதப்படுகின்றது.

இதேசமயம், ஹமாஸ் அமைப்பின் வெற்றி இஸ்ரேலியர் மத்தியில் மட்டுமன்றி அமெரிக்காவுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கவேண்டும். முதலில் ஹமாஸ் பலஸ்தீனத் தேர்தலில் போட்டியிடுவதை இஸ்ரேலும் விரும்பவில்லை. அமெரிக்காவும் விரும்பவில்லை. ஹமாஸைத் தேர்தலில் தோற்கடிக்கவென அமெரிக்கா தாராளமாகப் பதாஹ் அமைப்புக்கு உதவி செய்திருந்தது.

மேலும் ஹமாஸ் அமைப்பு ஆட்சி அமைத்தாலும் இஸ்ரேலுடன் பேச்சுகளை ஆரம்பிக்கும் சாத்தியம் இல்லை. பயங்கரவாத அமைப்பொன்றுடன் எதுவித பேச்சையும் நடத்துவதற்குச் சாத்தியமே இல்லையென்று இஸ்ரேலிய அமைச்சர்கள் கூறிவந்திருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் மத்திய கிழக்கில் அமைதி தொடரவும், புதிய நிலைப்பாடுகள் உருவாகவும் ஹமாஸின் போக்கில் மாறுதல் ஏற்படவேண்டும்.

ஏனைய கட்சிகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள ஹமாஸ் விருப்பம் தெரிவித்திருப்பது சாத்தியமானால் அதன் தீவிர போக்கிலும் மாற்றம் ஏற்படவாய்ப்புண்டு. அவ்வாறாயின் இஸ்ரேலும் பலஸ்தீனம் தொடர்பான தனது போக்கில் மாற்றங்களைச் செய்தாக வேண்டும்.

இதற்கிடையில் அமெரிக்க அதிபர் புஷ் பலஸ்தீனத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் "ஹமாஸ் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாகவே நாங்கள் கருதிவருகின்றோம். இஸ்ரேலின் அழிவை நாடி நிற்கும் அதன் போக்கை மாற்றிக்கொள்ளாதவரை நாம் அவ்வாறே கருதுவோம்" என்று கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் அமைதியைத் தோற்றுவிப்பதற்கான 'ரோட்மாப்' என்ற அமைதித் திட்டம் உருவாகுவதற்கு அமெரிக்காவே பொறுப்பாகச் செயற்பட்டுவந்துள்ளது. ஆகவே, ஹமாஸின் வெற்றி அமெரிக்காவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

* * *

**ஆபிரிக்க ஒன்றியத் தலைமை**

'ஆபிரிக்க நாடுகளின் குரல்' என்று வர்ணிக்கப்படும் ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைமைப் பதவியில் அமர்வதற்குச் சூடான் எடுத்துக்கொண்ட முயற்சி படுதோல்வியில் முடிவடைந்தது. ஆபிரிக்க ஒன்றிய நாடுகளின் 53 தலைவர்களின் மாநாடு சூடான் தலைநகரில் நடந்துமுடிந்தது. ஒன்றியத் தலைமைப் பதவியைப் பெற்றுக்கொள்ள சூடானிய அதிபர் ஓமார் அல் பஷீர் எடுத்த முயற்சி கைகூடவிலலை.

சூடானின் மேற்கு மாகாணமான டர்பரில் 3 லட்சம் மக்கள் சண்டைகளிலும் அட்டூழியங்களிலும் கொல்லப்பட்டிருப்பதும், அங்கு பெரும் அகதிப் பிரச்சினை தோன்றியிருப்பதும் இந்தத் தோல்விக்குக் காரணம் என்று சூடானிய அமைச்சர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வருடத் தலைமைப் பதவி கொங்கோ அதிபர் டெனிஸ் சஸோ என்குஸோவுக்குக் கிடைத்தது என்றாலும், அடுத்தவருடம் சூடானுக்கு வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

* * *

**கொன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி**



ஸ்டீபன் ஹார்பர்
[கனேடிய கொன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர்]

கனடாவில் 12 வருட கால லிபரல் கட்சியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு கொன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி அமைக்கும் நிலையேற்பட்டுள்ளது.

தேல்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் ஆட்சி அமைப்பதற்கு வேறு சிறிய கட்சிகளின் ஆதரவை நாடவேண்டிய நிலையில் கொன்சர்வேட்டிவ் இருக்கின்றது.

அரசைத் [illegible] வும் ஊழல்களை [illegible] போவதாகவும் கொன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் ஸ்டீபன் ஹாமர் கூறியிருக்கின்றார். ஹாமர் என்ன தான் கூறினாலும் எந்தக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்கப்போகிறார் என்பது பெரும் கேள்வியாக எழுந்து நிற்கின்றது.

கனேடிய அரசியலில் மூன்றாவது சக்தியாக இருக்கும் புதிய ஜனநாயகக் கட்சி கொன்சர்வேட்டிவ் கட்சியுடன் கூட்டணி சேர முடியாதெனில் 'புளக்கியுபொக் கொயில்' கட்சியுடன்தான் கூட்டுச் சேர வேண்டியிருக்கும். ஆனால், இக்கட்சி பிரெஞ்சு மொழி பேசப்படும் கியுபெக் மாநிலத்தில் மட்டுமே அதிக ஆதரவைப் பெற்றுள்ளது. மேலும் கனடாவிலிருந்து கியுபெக் மாநிலத்தைப் பிரிக்கவேண்டும் என்பது இக்கட்சியின் பிரதான நோக்கமாகும். இந்த நிலைமையில் கொன்சர்வேட்டிவ்களுக்குப் புதிய அரசு அமைப்பதில் பெரும் சங்கடம் உண்டு. அவ்வாறு அமைந்தாலும், அமைக்கப்படும் அரசு நீடித்து இருக்குமா என்ற கேள்வியும் கூடவே எழுந்துநிற்கின்றது.

* * *

## கணித அறிவில் தேர்ந்த அமேஸன் பழங்குடிகள்



கணித அறிவில் தேர்ந்த
பழங்குடிமக்கள்.

**கணித அறிவுக்கும் எழுத்தறிவுக்கும் சம்பந்தமில்லை**

கணித அறிவு என்பது முறையாக எழுத்தறிவு பெற்றவர்களுக்குத்தான் இலகுவாகக் கைவரும். எழுத்தறிவு இல்லையெனில் கணிதம் சுட்டுப்போட்டாலும் வராது என்பது நம் மத்தியில் பண்டைக்காலமாக இருந்து வரும் ஒரு நம்பிக்கை. அதனால்தான் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று கூறிவைத்தார்கள். ஆனால், எண்ணையும் எழுத்தையும் முறையாகக் கற்காதவர்களுக்குக்கூட கணித அறிவு குறைந்துவிடுவதில்லை. அதுவும் கேத்திரகணித அறிவுக்கு எழுத்தறிவு அவசியம் என்பதில்லையென்பது ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்து.

அமேஸன் ஆற்றின் கரையில் வெகு தூரத்திலுள்ள காடு ஒன்றில் வாழும் பழங்குடிகள் இந்த அற்புத அறிவை வெளிப்படுத்துபவர்களாய் இருக்கிறார்கள் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

முன்டுருகு (Munduruku) என்றழைக்கப்படும் இப்பழங்குடி மக்கள் கேத்திரகணிதத்தின் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கான கல்வி அறிவைப் பெற்றிருக்காவிடினும் அதன் அடிப்படை அறிவைப் பெற்றவர்களாய் இருப்பது ஆராய்ச்சிகளில் தெரிய வந்துள்ளது.

மொழியானது அறிவின் மீது எவ்வாறு செல்வாக்கை செலுத்துகிறது என்பதில் தத்துவாசிரியர்களும் உளவியலாளர்களும் இதுவரை காலமும் தர்க்கம் புரிந்து வந்திருக்கிறார்கள். முன்டுருகு மக்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வுகளிலிருந்து மனிதர்களுக்கு இயற்கையாகவே உள்ளார்ந்த கணித அறிவு உண்டு என்பது வெளிப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமேஸன் ஆற்றங்கரையைச் சேர்ந்த 'பிரஹா' (Piraha) என்ற இன்னொரு பழங்குடிகள் மத்தியில் நடத்தப்பட்டிருந்த ஆய்வில் பழங்குடிகளின் வளர்ச்சியடைந்த மனிதர்களின் கணித அறிவு, சிறுகுழந்தைகளின் அறிவை விட திறமாய் இருப்பதில்லையென்ற முடிவை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பிட்ட இலக்கத்தைக் குறிக்கும் எழுத்துக்கள் இல்லாமல் இலக்[illegible] அறிவை ஏற்படுத்தமுடி[illegible] இந்த ஆராய்ச்சியின் முடிவாக இருந்தது. ஆனால், இந்த முடிவினை புதிய ஆய்வு முறியடித்துவிட்டது.

உலக வலம்
பேனா

கேத்திர கணிதத்தில் உள்ள இடம் - [illegible]
- இலக்கம் போன்ற அடிப்படை அ[illegible]
மனித மனங்களில் மொழி அறிவுக்கு[illegible]
பால் ஆழப்பதிவு பெற்றிருக்கிறது [illegible]
இந்த ஆய்வு காட்டுகின்றது.

பண்டைய கிரேக்கர்கள் அறி[illegible]
புள்ளி, கோடு, சமாந்தரம், சதுரம், நீ[illegible]
போன்ற கேத்திர கணித அடிப்ப[illegible]
பாடுகளை 'முன்டுருகு' பழங்குடி[illegible]
எளிதாகப் பற்றிக் கொண்டு விடு[illegible]
என்கிறார்கள் ஹாவார்ட் பல்க[illegible]
ஆய்வாளர்கள்.

* *

**25 ஆண்டுகளின் பின் [illegible] பார்வைபெற்ற பெ[illegible]**

இருபத்தைந்து ஆண்டுக[illegible]
வையை இழந்து தவித்துக்கொ[illegible]
ஒரு பெண் இருதய நோயால்[illegible]
பட்டு வைத்தியசாலையில் அ[illegible]
பட்டு படுக்கையில் இருந்தா[illegible]
அவர் நித்திரையில் இருந்து எ[illegible]
தனக்கு மீண்டும் பார்வை திரும்[illegible]
ஆச்சரியத்தோடு அறிவித்தார்.

1979ஆம் ஆண்டிலிருந்து க[illegible]
றினால் பார்வையை இழந்து அ[illegible]
ஜொய்ஸ் உரிச் என்ற 74 வயதான [illegible]
பெண்ணுக்குப் பார்வை திரும்பியிருக்கிறது. தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்த பெண் 'ஓ... எனக்கு வயதுபோய்விட்டது, என் கணவருக்கும் வயதாகிவிட்டது' என்று கூறினார். 25 வருடங்களுக்குப் பின் பார்வை திரும்பியதற்கான காரணத்தை டாக்டர்களால் கூற முடிய வில்லை.

* * *

## பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் ரஷ்ய நாட்டில் உளவு

**பிரிட்டிஷ் அதிகாரிகளின் உளவு**

வீதி ஓரங்களில் ஒலிப்பதிவுக் கருவிகளை வைத்து அரச இரகசியங்களைப் பதிவு செய்து பெற்று வந்தார்கள் என்று நான்கு பிரிட்டிஷ் ராஜதந்திரிகளைக் கைதுசெய்திருப்பதாக ரஷ்ய அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள்.

கற்பாறைத் துண்டுகளைக் குடைந்து அதற்குள் மின்சூழ்களையும் ஒலிப்பதிவுக் கருவிகளையும் வைத்து மூடி சாதாரண கற்துண்டுகள் போன்று பார்வைக்குத் தெரியும் விதத்தில் உருவாக்கி அவைகளைப் பாதை ஓரங்களில் வைத்து ரஷ்ய இரகசியங்களை இவர்கள் பெற்று வந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த நான்கு பிரிட்டிஷ் ராஜதந்திரிகளும் இனம் காணப்பட்டிருப்பதாகவும், அவர்களை நாடு கடத்துவதா இல்லையா என்பது பற்றி அரசியல் மட்டத்தில் முடிவுசெய்யப்படும் என்றும் ரஷ்ய உளவு அமைப்பான எல்.எஸ்.பி. அறிவித்துள்ளது.

* * *

**73 வயதில் காதல்**

அயர்லாந்தில் 73 வயதான ரோமன் கத்தோலிக்க போதகர் ஒருவருக்கு அவருடைய 31 வயது காதலி மூலம் ஓர் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

மாரிஸ் டிலானி என்ற அந்தப் பாதிரியார் சமூக சேவைகளுக்காகவும் மிதவாத கருத்துக்களுக்காகவும் பிரபல்யமானவராகவிருந்தார். ஆனால், அவர் தன்னைவிட 42 வயது குறைந்த ஒரு பெண்ணைக் காதலித்து அவர் மூலம் ஓர் ஆண்மகவைப் பெற்றார் என்ற தகவல் அப்பகுதி மக்களை அதிர்ச்சிகொள்ளச் செய்துள்ளது.

உள்ளூர் தேவாலய சபைத் தலைவர் ஐஸ்டின் ஒபைம் கருத்துத் தெரிவிக்கையில்:-

"நாம் ஏமாற்றமுற்றுள்ளோம். இவ்வாறு நடந்திருக்கக்கூடாது - ஆனால் நடந்துவிட்டது. நாம் அதைப்பற்றி நடவடிக்கை எடுப்போம்" - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு



- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
2, சோமசுந்தரம் அவனியூ,
ண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777 - 903090
0777- 246117
077 - 9172730

(45779)(26-19.11)

கலாலயா
பயிற்சியகம்
மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

களிருக்கான கேக் ஐஸிங், உணவு தயாரித்தல், கூந்தல் ங்காரம், FABRIC வர்ணந்தீட்டல், பூ வேலை, கை வேலை, ல் பயிற்சி, FACIAL முக அழகுக்கலை ஆகியவற்றிற் புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

வரங்களை அறிந்துகொள்ள வியாழன், வெள்ளி த ஏனைய நாள்களில் காலை 9முதல் பி.ப. 2.30 ள் நேரில் வரவும்.

(சி/47552)(26-19-11) பதிவாளர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

வலூர் மருதந்தெணி மகாமாரி அம்மன் ஆலய
பிரதம குரு


**ஸ்ரீ சிவ. குஞ்சிதபாதக்குருக்கள்**

சைவசமய குருத்துவப் பணியில்
ல் நூற்றாண்டு முழுமையாக அர்ப்பணித்த
களைப் பல்லாண்டு வாழ வாழ்த்துவதோடு
குருத்துவப் பணியினைத் தொடரவேண்டுமென
இறையாசியை வேண்டுவதோடு
சேவையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குரும்பசிட்டி
வலூர் சைவசமயிகள். (சி/47563)(26-11-19)

அகில உலக சைவக்குருமார்,
பேரவை.

# மரண அறிவித்தல்



## விநாசித்தம்பி சோமசுந்தரம்

(பிரபல தொழிலதிபர், கொட்டடி மரக்காலை CITY HARDWARE, CITY STEELS, STANLY ROAD, JAFFNA. CITY TRANSPORT SERVICE CENTRAL ROAD, COLOMBO -12. பங்காளர் S.அருணாச்சலம் செட்டியார் அன்சன்ஸ், 165, 5ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு -11)

புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்போது கொழும்பு 26/5, லோறிஸ் வீதி, பம்பலப்பிட்டியில் வசித்தவருமாகிய பிரபல தொழிலதிபர் விநாசித்தம்பி சோமசுந்தரம் அவர்கள் 25-01-2006 அன்று காலமானார்.

அன்னார் சிறிதேவியின் (நாகம்மா) அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (சுவிஸ்), ஆனந்தகௌரி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன், பிரகதீஸ்வரன், மனோகௌரி(கனடா), அமிர்தகௌரி (ஆசிரியை), ஜெயகௌரி (சங்கீத ஆசிரியை, சைவப்பிரகாச வித்தியாலயம், வேலணை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வி நீதிராஜா, சகி, சந்திரா, ரூபசாந்தன், யோகமோகன் ஆகியோரின் அன்பு மாமனும் சஜானி (கண்ணம்மா), தினேஸ், திருஷா, கருஷன், சஞ்சயன், ஆதித்தன், ஆரணியன், அருண் பிரவீனா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களாகிய சிவபாக்கியம், ஆறுமுகம், காராளபிள்ளை, பசுபதிப்பிள்ளை, சிவக்கொழுந்து மற்றும் சின்னத்தங்கம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கந்தையா (ஆசிரியர்) மற்றும் சறோஜினி இரத்தினம், இராசமணி முத்தையா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-01-2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு பொரளை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

NO.26/5, LOURES ROAD,
BAMBALAPITYA.
T.P.: 2589701

(46080)(26.19.11)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## புத்தளம் எம்.பி. பிணையில் விடுதலை

கொழும்பு,ஜன.29

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கபண்டார புத்தளம் நீதிமன்றத்தில் வைத்து நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரை 40 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 3 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல உத்தரவிட்ட புத்தளம் மாவட்ட நீதிவான் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

கடந்த 8 ஆம் திகதி கார்கலிஸ்ஹேவ பகுதியைச் சேர்ந்த 16 வயது யுவதி ஒருவரை துப்பாக்கியால் அடித்துக் காயப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டி இவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவர் உடனடியாக நீதிமன்றம் செல்லவில்லை.ஆயினும் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் ஆஜராகியதை அடுத்து நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போதே பாலித்த ரங்கபண்டார பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ஒ-12)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி, ஜன.29

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவு வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பக்திநெறி எனும் தலைப்பில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்களின் சொற்பொழிவு இடம்பெறும்.

(ஒ-173)

உங்களுக்கோர் சேமிப்பு
உங்களுக்கோர் இல்லம்

காணி வாங்குதல், வீடு கட்டுதல், வீடு வாங்குதல், வீடு திருத்தியமைத்தல் போன்ற தேவைகளுக்கு கடன்பெற சேமிப்புக் கணக்கு ஒன்றை எங்களுடன் ஆரம்பியுங்கள்.

மேலும்,
அதியுயர் வட்டியில்
நிலையான வைப்புக் கணக்குகள்.
முதியோர் நிலையான வைப்பிற்கு விசேட சலுகைகள்.

**பிரதிநிதி ஒருவரின் ஆலோசனை பெற அழையுங்கள் 021-2226258**

(செலிங்கோ வீடமைப்பு கடன் சங்கம் லிமிட்டட்)
24, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6258

(இலங்கையில் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தனியார் துறை வீடமைப்புச் சங்கமாகும்)

(46054)(32-26-11-19)

லங்கா பெல்லுக்கு நீங்கள் தேவை...

இலங்கையில் CDMA தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் லங்கா பெல் நிறுவனம் திறமையாளர்களை தன்னுடன் சேர்த்துக்கொள்ள விரும்புகிறது. திருகோணமலை, வவுனியா, அம்பாறை, மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள உங்களால் தற்போது லங்கா பெல்லுக்கு பலம்சேர்க்க முடியும். கீழுள்ள வெற்றிடங்களுக்கு தேவையான தகைமைகளை நீங்கள் கொண்டிருப்பின் லங்கா பெல் எதிர்பார்ப்பது உங்களையாகும்.

உங்களின் பொறுப்புக்கள்
- நிறுவனத்தின் விற்பனை இலக்கை பூர்த்தி செய்தல்
- CDMA தொலைபேசி இணைப்புகளுக்கு ஊக்கமளித்தல் • வாடிக்கையாளர் உறுதியுடன் கையாளும் ஆற்றல் • வாடிக்கையாளர் முகாமைத்துவப்படுத்தல்

நீங்கள் கொண்டிருக்க வேண்டிய தகமைகள்
- தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த தொடர்ப்பாடல் திறமை
- சிறந்த நற்புறவு இணைப்புகளை ஏற்படுத்தும் திறமை
- சிறந்த அறிமுகப்படுத்தல் ஆற்றல்
- தொழில்முறையாக, பிரதிநிதியாகவும் பயனளிக்கும் பேச்சாற்றல்
- உருவாக்கல் திறமை
- பிரிதொரு நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதியாக சேவை புரிந்த அனுபவம்
- அறிமுக ஆற்றலுள்ள பாடசாலையைவிட்டு விலகியவர்களும் விண்ணப்பிக்கலாம்
- க.பொ.த. ச/த கணிதம் மற்றும் சிங்கள/தமிழ் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்
- ஏனைய உயர் கல்வி தகமைகள் அனுகூலமாக அமையும்.

உங்களின் பொறுப்புக்கள்
- உட்புற மற்றும் வெளிப்புற வாடிக்கையாளர் சேவை நடவடிக்கைகள்
- பணம் மற்றும் வங்கி நடவடிக்கைகள் • அமைப்புக்குள்ளான தேவைகளை நிறைவேற்றல்

நீங்கள் கொண்டிருக்க வேண்டிய தகமைகள்
- நல்ல தோற்றமுள்ளவராக இருத்தல் வேண்டும்
- கணனி அறிவு, ஆங்கிலம் மற்றும் தமிழில் சிறந்த தொடர்பாடல் திறமை
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் ஆகக்குறைந்த 6 மாத கால அனுபவம்
- கா.பொ.த. ச/த பரீட்சையில் கணிதத்தில் சித்தியும் ஆங்கிலத்தில் திறமை சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன் உ/த பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்றிருக்க வேண்டும்

நீங்கள் கொண்டிருக்க வேண்டிய தகமைகள்
- உயர்தரத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தமிழிலும், ஆங்கிலத்தில் சிறந்த பேச்சுத்திறமையை கொண்டிருக்க வேண்டும்
- பாதுகாப்பு வைப்பாக 100,000/- இனை செலுத்த வேண்டும்
- நீண்ட நேரம் தொழில் செய்ய கூடியவராகவும், சனிக்கிழமை வேலை செய்யக் கூடியவராகவும் இருக்க வேண்டும்

உங்களின் பொறுப்புக்கள்
- வலைப்பின்னல் சம்பந்தப்பட்ட சிக்கல்களை திருத்தல் வேண்டும்
- தொழில்நுட்ப சிக்கல்களை திருத்தல் வேண்டும்

நீங்கள் குழுவாக இயங்கக்கூடியவராகவும் பின்வரும் தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும்
- 28 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்
- தேசிய டிப்ளோமா தொழில்நுட்ப சான்றிதழை (NDT) அல்லது அதற்கு சமமான தகுதியினை கொண்டிருத்தல் வேண்டும்
- எந்த நேரத்திலும் சேவையாற்றும் தன்மையை கொண்டிருக்க வேண்டும்
- Microwave & Data transmission உபகரணங்கள் பற்றிய அறிவினை கொண்டிருத்தல் வேண்டும்

மேற்கூறப்பட்ட மாவட்டத்தில் உள்ள விண்ணப்ப தாரர்களிடம் இருந்து மட்டுமே விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவ்விளம்பரம் பிரசுரமாகி 10 தினங்களினுள் உறவினர்கள் அல்லாத நடுவர்கள் இருவரின் தொடர்பு இலக்கங்களுடன் உங்கள் விண்ணப்பங்களை கீழ்கானும் விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

பொது முகாமையாளர்,
மனிதவள வசதி மற்றும் நிர்வாகம்,
**லங்கா பெல் (தனியார்) நிறுவனம்,**
தொ.பே.1719
கொழும்பு.
இணையத் தளம் : careers@mail.lankabell.com

லங்கா பெல்

Sarva Integrated

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கு.வி.மகாலிங்கம்



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர், வித்துவான் குஞ்சர் விநாசித்தம்பி மகாலிங்கம் (கு.வி.மகாலிங்கம்) அவர்கள் கனடாவில் காலமானார்.

அன்னார் கமலம் (பவானி - ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும் சாந்தினி (கலாநிதி U.S.A.), இரஞ்சனி (ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செல்வக்குமார் (B.Sc.- கனடா), சிவகுமார் (U.K.), ஞானக்குமார் (டாக்டர் U.K.), வரதக்குமார் (பொறியியலாளர் U.S.A.), சற்குணகுமார் (B.Sc.- கனடா) அவர்களின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அன்னம்மா (குணம்), முத்துலிங்கம் (முத்தப்பா), சுந்தரலிங்கம் (முன்னாள் இலங்கை வானொலி அறிவிப்பாளர்) ஆகியோரின் சகோதரரும் நாகராசா (ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி), மகேஸ்வரி, மலர், அன்னபூரணம், தர்மலிங்கம், காலஞ்சென்ற சிவஞானம் (தியாகு), ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஜெயராசா (கலாநிதி U.S.A.), சந்திரதேவன் (ஆசிரியர் யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), சுந்தரரூபி (கனடா), தவராணி (U.K.), ரேணுகா (டாக்டர் U.K.), பாமினி (U.S.A.), சந்திரவதி (கனடா) ஆகியோரின் மாமனும் சௌமினி (விஞ்ஞானி நாசா-U.S.A.), சிரோமினி, ரகுராஜ், ராம்ராஜ், சங்கவி, ஆரணன், ஐஸ்வரியா, ஈஸ்வரா, அஸ்வின், விதுஷன், விஷ்வா, துளசி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் (கனடா நேரம்) திங்கட்கிழமை காலை 9 - 11.30 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தொ.பே.: 0602212814,
0776569621,
கனடா-001 4164190446

**தகவல்:**
**இரஞ்சனி (மகள்),**
**சந்திரதேவன் (மருமகன்).**
(46136) (18-45-15)

## திருமதி கணபதிப்பிள்ளை தையல்முத்து

காரைநகர், பத்திரகேணியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தையல்முத்து அவர்கள் நேற்று (28.01.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, நவரட்ணம் (நீர்ப்பாசனத் திணைக்களம், ஒட்டுசுட்டான்), பரமேஸ்வரி, லக்ஷுமி (கணக்காளர், காரைநகர் M.P.C.S.) ஆகியோரின் அன்புத் தாயாரும் குலராஜா, விமலாதேவி, சுந்தரமூர்த்தி, அமரர் ஜெகதீசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சண்முகநாதன், கனகசுந்தரம், அமரர் ஆறுமுகம் ஆகியோரின் பெரியதாயாரும் சற்குணதேவி (யாழ். போதனா வைத்தியசாலை), சற்குண ராஜா (லண்டன்), நற்குணராஜா, அருள்ராஜா (அருள் பந்தல் சேவை), அருள்ராணி (லண்டன்), சத்தியரூபன் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி), மோகனகரன் (ஊர்காவற்றுறை பிரதேச சபை), கஸ்தூரி (லண்டன்), சரோஜா, பூங்குணசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஐங்கரன், கிருசிகா (மாணர்கள் - காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி), சங்கவி (லண்டன்), நர்த்தனன், வைஸ்ணவி (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.:021 222 9171,
0776184753

(46138) (18-45-15)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## சண்முகராசா சண்முகலிங்கம்

(அதிபர் -ஈவினை அ.த.க.பாடசாலை)

உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா சண்முகலிங்கம் (அதிபர்) அவர்கள் 27.01.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சபாபதி (பீதாம்பரம்) - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் சண்முகசீலன் (உதவி முகாமையாளர் Sjms.Associate-கொழும்பு), மயூரன்(பிரான்ஸ்), செந்தூரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் மங்கையர்க்கரசி, கோகுலமணி, கணேசலிங்கம் (இந்தியா), இராசமலர், தறுமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகராசா(ஆஸ்திரேலியா), சின்னராசா, காலஞ்சென்றவர்களான நல்லம்மா, தங்கராசா அகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.01.2006)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'இராச பவனம்'*
*உடுவில் தெற்கு, உடுவில்.*

(46130) (18-45-15)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## திருமதி பாலசிங்கம் பெரியநாயகி



நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பாலசிங்கம்பெரியநாயகி அவர்கள் நேற்று(28.01.2006)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான திரு.திருமதி செல்லப்பாவின் அன்பு மகளும் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்அமரர்களான திரு.திருமதி தாமோதரம்பிள்ளை அவர்களின் மருமகளும் சசிதேவி (கனடா), ஹரிகரன்(கனடா), இளங்கோ(கனடா),றஜனி(கனடா), ஜெயலலிதா(லண்டன்)ஆகியோரின் அன்புத் தாயும் ராசபாலன் (கனடா), ரேணுகா(கனடா), கலாநிதி(கனடா), குலசிங்கம் (கனடா),சச்சிதானந்தராசா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் கேசவகாந்,மிதுசனா,கம்சனா, அனோசிகா, சோபிகா, கரிசன், லக்ஷனா,விதுசனா, அனோச், கபிலன், ரேகன், நிவானன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

**தகவல்:**
**தா.பாலசிங்கம்**
**(கணவர்- ஓய்வுபெற்ற அதிபர்).**
(46131) (18-45-15)

## நயினாதீவு ச.ச. நிலையக் கூட்டம்

நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலையத்தின் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் க.விஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-12)

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமு துரைபத்மநாதன்

ஏழாலை வடக்கு, முனியப்பர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு துரைபத்மநாதன் அவர்கள் நேற்று(28.01.2006)சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைள்இன்று (29.01.2006) ஞாயிற்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-46525) (18-45-15)

**தகவல்:**
**மூர்த்தி (கிளி).**

## மயில்வாகனம் கணேசலிங்கம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கணேசலிங்கம் 25.01.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மயில்வாகனம்- புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் நடராசா- காலஞ்சென்ற செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் ராகினியின் அன்புக் கணவரும் பிரபா என அழைக்கப்படும் கிருபாகரன், அருந்ததி, அனோஜன், அகலியா, அனோஜியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோதீஸ்வரன், சந்தானலஷ்சுமி, மயில்வாகனம், காலஞ்சென்றவர்களான நடேசலிங்கம், கைலேஸ்வரி, பஞ்சலஷ்மி மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணரத்தினம், விஜயரட்ணம், காலஞ்சென்ற பாலேந்திரன், இராசகுலம், ஞானசோதி, ஜெகதாம்பாள், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சிற்சபேசன், சிவபாலன், புஸ்ப்பா, ஈஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு 219, சில்வா வீதி, வட்டக்கச்சியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*219, சில்வா வீதி,*
*வட்டக்கச்சி.*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(46122) (18-45-15)















# மரண அறிவித்தல்கள்

## முத்தன் இரத்தினம்



கொற்றாவத்தை, . தளைச்சாந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் சந்நிதி றோட், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மு.இரத்தினம் அவர்கள் 27.01.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தன் - சின்னக்கண்டு தம்பதியரின் மகனும் மாணிக்கம் - தெய்வானை தம்பதியரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கீதா, சுரேஸ் (லண்டன்), லதா, சுதாஆகியோரின் தந்தையும் அருந்தவராசா, உதயசங்கர், சுபாகினி (லண்டன்) ஆகியோரின் மாமனும் தங்கராசா, வேலுப்பிள்ளை, பாலசிங்கம், அன்பழகன், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் மூர்த்தி,புஸ்பராணி , பிரபு (லண்டன்), குலவதி, அன்னலக்சுமி(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் சம்பிக்காவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.01.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக வல்லை கரும்பாழி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்நிதி றோட்,*
*உடுப்பிட்டி.*

(46133) (18-45-15)

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள்.**

## ஏகாம்பரம் பிரபாகரன்



கரம்பொன்கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு, 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் பிரபாகரன் அவர்கள் நேற்று (28.01.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் இராசேந்திரம் - மத்தினா தம்பதியரின் அன்பு மருமகனும் மங்களநாயகியின் அன்புக் கணவரும், குணமாலினி (ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச.), தேவபாலினி, வாசுகி, குகாகரன், காலஞ்சென்ற கோமுகி, சசிகரன் (கதிரவன் நகைமாடம் விசுவமடு), மதுப்பிரியா (சிலாவத்தை தமிழ் வித்தியால ஆசிரியை), பக்தவக்சலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீரங்கநாதன், ஜான்சன், மணிவண்ணன், பாலினி ஆகியோரின் மாமனாரும் துவாரகன், நிஷோக், சிந்துஜா, விதுஷன், டினோஷன், திருஷிகா, குஜிநந் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

*4ஆம் வட்டாரம்,*
*புதுக்குடியிருப்பு.*

(சி-47578) (18-45-15)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## திருமதி சின்னத்துரை கற்பகம்

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கற்பகம் நேற்று (28.01.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு -அபிராமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மதியாபரணம் (கிளிநொச்சி) மற்றும் நாகம்மா, கனகாம்பிகை (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பற்பநாதனின் சிறிய தாயாரும் செல்லம்மா (கிளிநொச்சி),காலஞ்சென்றவர்களான நவரெத்தினம், கனகசபை ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசேஸ்வரி (இத்தாலி), சுரேஸ் (வட்டக்கச்சி), விஜயன் (லண்டன்), நேசன் (வட்டக்கச்சி), அருணா (லண்டன்), காலஞ்சென்ற ஜெயமோகன் மற்றும் கலா (லண்டன்), ரஜனி (இத்தாலி), ரவி (கனடா), ராசன் (இத்தாலி), சாந்தன் (லண்டன்), வசந்தன் (இத்தாலி), உதயன் (இத்தாலி), சுபத்திரா (லண்டன்), நிர்மலா (இத்தாலி), கவிதா (லண்டன்), சோபா (ஜேர்மனி), ராதிகா (இத்தாலி) சிறியோகன்(கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

*இல. 33, கச்சேரி கிழக்குஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 0212226963*

**நவரெத்தினம் நாகம்மா (மகள்).**
(46137) (18-45-15)

## திருமதி ராஜயோகம் பகீரதன்

(ராஜம் *U.K.*)

திருமதி ராஜயோகம் பகீரதன் (*Accountant u.k.*) அவர்கள் 26.01.2006 வியாழக்கிழமை காலை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகணநாதன், திருமதி தனசோதி (*No.33,Marys road , Colombo- 4*) தம்பதியரின் அன்பு மகளும் மாணிக்கவாசகர்,திருமதி ராஜேஸ்வரி மாணிக்கவாசகர் (கும்பழாவளை, அளவெட்டி) தற்சமயம் கனடாவில் வசிப்பவர்களின் பாசமிகு மருமகளும் ***Dr.***பகீரதன் *(U.K.)* அவர்களின் அன்பு மனைவியும் யாழினி, அருண்ராஜன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் லண்டனில் நாளை(30.01.2006) திங்கட்கிழமைநடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

***Dr.m.Bhahirathan (U.K.)***
***Tel.: 0208 3649434***

(46134) (18-45-15)

***Dr.P.தர்மராஜசிங்கம்***
***Meleod Hospital Inuvil***
***Tel.: 077 6257969***
**(சித்தப்பா).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விடுதலைப்போரை அமெரிக்கா ஒரு சந்தைப் பொருளாகவே பார்க்கிறது

## தமிழக ஆர்ப்பாட்டத்தில் கவிஞர் இன்குலாப்

சென்னை,ஜன.29

தமிழர்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை அமெரிக்கா ஒரு சந்தைப் பொருளாகவே பார்க்கிறது.

இப்படி குற்றஞ்சாட்டினார் மக்கள் கவிஞர் இன்குலாப்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக அமெரிக்கத் தூதர் அண்மையில் தெரிவித்த கருத்துக்களை கண்டித்து நேற்று தமிழகத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சுமத்தினார்.

தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஒரு சந்தைப் பொருளாக அமெரிக்கா பார்க்கிறது.தேசிய இன விடுதலை விழுமியத்தை அமெரிக்கா விழுங்கப்பார்க்கிறது. அமெரிக்காவின் பாதத்துக்கு கீழ் லத்தீன் அமெரிக்க நாடுகள் கிளர்ந்து எழுந்துள்ளன. உலகம் முழுவதும் விடுதலை விரும்பும் நாடுகள் ஒன்றுபட்டு நிற்கின்றன.

உலகம் முழுவதும் விடுதலைப் போராட்டத்தை இடதுசாரிகள் ஆதரிக்கின்றன. ஆனால், ஈழத்தையும் இடதுசாரிகள் ஆதரிக்கவேண்டும். தமிழக இடதுசாரிகள் சிங்கள ரத்னா விருது பெற்ற இந்து ராமின் அணுகுமுறையைப் பின்பற்றக் கூடாது. இந்த நாட்டில் குறைவான எண்ணிக்கையில் இருப்போருக்கான நலன் தான் அவரது அணுகுமுறைதான் - என்றார் மக்கள் கவிஞர் இன்குலாப்.

அமெரிக்க தூதுவரின் அச்சுறுத்தும் உரையைக் கண்டித்தும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்கு என்றென்றும் உறுதுணையாக இருப்போம் என்பதையும் வலியுறுத்தி ஆர்பாட்ட முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

'சர்வதேச இடதுசாரி சக்திகளுக்கு விடுதலைப் புலிகள் நேசக்கரம்' என்ற தலைப்பில் புலிகளின் குரல் அரசியல் ஆய்வரங்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆற்றிய உரையின் எழுத்துவடிவமும் கியூபாவும் தமிழீழமும் என்ற தலைப்பில் தமிழகத்தில் கியூபா ஆதரவு மாநாட்டை நடத்துகிற இடதுசாரி சக்திகள் கியூபாவுக்கு நேசக்கரம் நீட்டும் தமிழீழம் குறித்து அக்கறை கொள்ள வேண்டும் என்ற துண்டுப் பிரசுரமும் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினரால் இந்த கூட்டத்தில் விநியோகிக்கப்பட்டன.

2 மணிநேரம் நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் 30 இற்கு மேற்பட்ட இயக்கங்களின் நூற்றுக் கணக்கானோர் பங்கேற்று தமிழீழ விடுதலைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவாகவும் ஈழத்தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் உரையாற்றிய அமெரிக்க தூதுவரை கண்டித்தும் கண்டன முழக்கங்களை உரத்த குரலில் எழுப்பினர்.

இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் தஞ்சையில் தமிழ்த்தேச பொது உடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பெ.மணியரசன் தலைமையிலும் மதுரையில் தமிழர் தேசிய இயக்கப் பொதுச் செயலாளர் பரந்தாமன் தலைமையிலும் கோவையில் தந்தை பெரியார் திராவிடக் கழக பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டினன் தலைமையிலும் நடைபெற்றன. எதிர்வரும் 30ஆம் நாளன்று சேலத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி தலைமையில் அமெரிக்கத் தூதுவரைக் கண்டித்துக் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெறவுள்ளது.

(ஐ)

# புலிகள் - முஸ்லிம்கள் திருமலையில் சந்திப்பு

கிளிநொச்சி,ஜன.29

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினருக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றுள்ளது.

பிற்பகல் 2 மணியளவில் சம்பூரில் அமைந்துள்ள புலிகளின் அரசியல்துறைச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. படையினரால் முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்கப்பட்டமை தொடர்பாகவும்-

படையினரின் துணை ஆயுதக்குழுக்களால் மேற்கொள்ளப்படும் கொலைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சந்திப்பில் புலிகள் தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் பிரதிநிதிகள் தரப்பில் திருகோணமலை, மூதூர், தோப்பூர், ஜின்னாநகர், ஆசாத் நகர், வாடிபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பள்ளிவாசல்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

(ஐ-12)

# ஜெனீவா பேச்சில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுத்துதல், அது தொடர்பான விதி முறைகளைக் கடைப்பிடிக்காமை போன்ற விடயங்களில் உள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள எடுக்கப்படும் முடிவுகள் முஸ்லிம்களைப் பாதிக்கக்கூடிய விடயங்களாக இருக்கின்றமை குறித்து அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்களில் அது யுத்த நிறுத்த உடன்படிக்கை பற்றியதாக இருந்தாலும் சரி அந்தப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் பங்குபற்றல் கட்டாயமாக இருத்தல் அவசியம்.

அதற்கான அடிப்படை உரிமை முஸ்லிம்களுக்கு இருக்கின்றது என்பதை முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்துகின்றது. முஸ்லிம்களின் நிலைமைகளையும் உணர்வுகளையும் சர்வதேச சமூகமும் அரசாங்கமும் புலிகள் இயக்கமும் புரிந்துகொண்டு, முஸ்லிம்களை இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளச் செய்வது தொடர்பில் முஸ்லிம் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையிலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்துகின்றது. அவ்வாறு நடவடிக்கைகள், ஏற்பாடுகள் செய்யப்படாவிடின் அதற்கு எதிராக சகல விதமான நடவடிக்கைகளையும் எடுத்து அரசியல் ரீதியாகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயங்காது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(ஐ-12)

# சமாதானத்தை பாதிக்கின்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் அப்போது இருந்தே நிறுத்திக் கொள்வதாக விடுதலைப் புலிகள் நோர்வேயூடாக அரசுக்கு உறுதியளித்திருக்கின்றனர் என்ற தகவலும் அப்போது அறிவிக்கப்பட்டது. எனினும், இந்த இணக்கம் ஏற்பட்டு 24 மணி நேரத்திற்குள் மட்டு.- பொலன்னறுவை எல்லைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியினுள் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் போராளி ஒருவர் உயிரிழந்தார்.

அரசுப் படைகளும், ஒட்டுப்படைகளும் இணைந்து இத்தாக்குதலை நடத்தியிருந்தன. இது குறித்துப் புலிகள் தரப்பில் கண்டனமும் கடும் ஆட்சேபமும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமைதி நடவடிக்கைகளை முறையான விதத்தில் மீள ஆரம்பிக்கவும் முன்னகர்த்தவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றும்வேளையில், அமைதியைப் பாதிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன என்பது அரசாங்க வட்டாரங்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே படைத்தளபதிகளுக்கு ஜனாதிபதி இத்தகைய கண்டிப்பான உத்தரவை விடுத்தார் என்று அறியப்படுகின்றது.

ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் - சமாதானத்தைப் பாதிக்கின்ற செயல்களில் - எவரும் ஈடுபடுவதை அனுமதிக்கவேண்டாம் என்று படைத்தளபதிகளையும் பொலீஸ்மா அதிபரையும் தமது செயலகத்துக்கு நேரில் அழைத்து ஜனாதிபதி உத்தரவை வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச படைகளுக்கு எதிரான வன்செயல்கள் அனைத்தையும் நிறுவத்துவது என்று விடுதலைப் புலிகள் அறிவித்தமைக்குப் பதிலாக ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை அமைவதாக அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இதேவேளை -

அரசும் புலிகளும் ஜெனீவாவில் பேச்சு நடத்த இணக்கம்கண்ட பின்னர், மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் உயிரிழக்கக் காரணமான தாக்குதல் சம்பவத்திற்கு இணைத்தலைமை நாடுகள் கடும் அதிருப்தியைத் தெரிவித்தன என்று கூறப்படுகின்றது.

இணைத் தலைமை நாடுகளின் வெளிநாட்டுத் தூதுவர்கள் இருவர் ஸ்ரீலங்காவின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரட்ணவை தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு தமது கண்டனத்தைத் தெரிவித்தனர் என்று கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இத்தகைய தாக்குதல்கள், தற்போது ஏற்பட்டுள்ள இணக்கமான சூழ்நிலையைச் சீர்குலைத்துவிடும் என்றும் உடனடியாகத் துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து அவர்களைப் பொது வாழ்க்கைக்குத் திரும்பவைக்கவேண்டும் அல்லது கைதுசெய்யவேண்டும் என்றும் இந்த நாடுகள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன என்றும் தெரியவருவதாக இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

(ஐ-12)

# அமெரிக்கத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசப் பொதுவுடமைக் கட்சியின் கி.வெங்கட்ராமன், தமிழ்த் தேசிய மார்க்சிய கட்சியின் இராசேந்திரசோழன், ஓவியர் புகழேந்தி உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட இயக்கத்தின் நிர்வாகிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றினர்.

(ஐ-12)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்பலம் கமலாம்பிகை

கொக்குவில் சம்பியன்லேனைச் சேர்ந்தவரும் கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி பொன்னம்பலம் கமலாம்பிகை அவர்கள் 24.01.2006 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னம்பலம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-அன்னமுத்து தம்பதியரின் அன்புமகளும் சௌபாக்கியவதி, வரதராசா, தர்மலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினசோதி, சிவலிங்கம், சண்முகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கமலநாயகி (ராதா - கனடா), பாலகுமார் (ராஜன் - அமெரிக்கா), சௌந்தரராஜன் (ரகு - கனடா), நந்தகுமார் (ரவி - கனடா), சுசேந்திராதேவி (றஞ்சி - கொழும்பு), அருணாதேவி (ராசினி -கனடா), ராஜ்குமார் (றமன் - அமெரிக்கா), புவனேந்திரகுமார் (ரூபன் - அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தனநாயகம், பங்கையச்செல்வி, சுபத்திரா, மீனலோசனி, நாதன், ஞானானந்தன், தேவறஜனி, சுபித்தா ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும் கங்காசுதன், காயத்திரி, ஈசன், உமா, பிரவீன், சாமந்தி, விக்னேஸ், மயூரிக்கா, கபிலன், பர்வதா, அபர்னா, பிரம்மி ஆகியோரின் பாசமுள்ள செல்லப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **Highland Funeral Home, Canada** வில் இன்று (29.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**T.P.: Colombo 2552830**
**Canada 0014164382091** (சி/47569) (33-12)

தகவல்:
குடும்பத்தினர்.

### இராசையா சத்தியசீலன்

*(முன்னாள் ஊழியர், யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)*

அரியாலை, பொன்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சத்தியசீலன் அவர்கள் நேற்று (28.01.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னம்பலம் வீதி,*
*அரியாலை.* (46139) (33-12)

தகவல்:
குடும்பத்தினர்.


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

| Course | Duration | Fees |
|---|---|---|
| Diploma in Computer Programming (Java, VB.Net, Pascal) | 5 Months | Rs 6000/= |
| Diploma in Accounting Pacages | 2 Mon[illegible] | Rs 2000/= |
| Diploma in Computer Hard ware | 2 Months | Rs 2000/= |

Starts on : 01.02.2006

பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ளவும்

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil

## பாடசாலை மினிபஸ் சேவை

**01.02.2006 புதன்கிழமை முதல் தென்மராட்சி மிருசுவில் சந்தியில் இருந்து கொடிகாமம் சந்தி - கச்சாய்வீதி ஊடாக அல்லாரை சென்று மீசாலை - புத்தூர் சந்தியூடாக சாவகச்சேரி இந்துக் கல்லூரிவரை சென்றடையும். பதிவுகளை கிருஸ்ணா கல்வி நிறுவனத்தில் (K.E.C) 30.31ஆம் திகதிகளில் பி.ப. 3.30 இல் இருந்து 5.30 மணி வரை மேற்கொள்ளலாம்.**

கொடிகாமம். (46128) இயக்குநர் (K.E.C)

EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...



**தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை**
**ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்**
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரேஞ்ச் ரோவர் மற்றும் ரேஞ்ச் ரோவர் ஸ்போர்ட் வாகனங்க[ள்] புரொண்டியர் ஆட்டோமோடிவ் நிறுவனத்தால் அறிமுகம்

இலங்கையில் லேண்ட் ரோவர் வாகனங்களின் ஏக முகவர்களான புரொண்டியர் ஆட்டோமோடிவ் நிறுவனம், காலி வீதியில் உள்ள தனது காட்சி அறையில் ரேஞ்ச் ரோவர் மற்றும் ரேஞ்ச் ரோவர் ஸ்போர்ட் வாகனங்களை அண்மையில் அறிமுகப் படுத்தியது.

இந்த வாகனங்கள் 2 கோடி 20 லட்சம் ரூபா முதல் விலையிடப்பட்டுள்ளன. "ரேஞ்ச் ரோவர் வாகனங்கள் உலகிலேயே மிகச் சிறந்த சொகுசு SUV (விளையாட்டு பன்நோக்கு வாகனம்) வாகனங்களாகும்" என புரொண்டியர் ஆட்டோமோடிவ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஷெரான் பெர்னாண்டோ அறிமுக விழாவில் கூறினார்.




கொமர்ஷல் வங்கி தொடர்ச்சியாக ஏழாவது வருடமாக இவ் வருடமும் இலங்கையின் சிறந்த வங்கியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அமெரிக்க வர்த்தகச் சஞ்சிகை யான 'குளோபல் பினான்ஸ் நிறுவனமே வழமைபோல்இதைத் தெரிவுசெய்து விருது வழங்கியுள்ளது. வங்கியின் நிதி மற்றும் திட்டமிடல் பிரிவின் சிரேஷ்ட பிரதி பொதுமுகாமையாளர் ரஞ்சித் சமரநாயக்க குளோபல் பினான்ஸ் சஞ்சிகையின் தலைவர் ஜோசப் டீ. ஜயராபியூட்டோவிடம் விருதைப்பெறுவதைப் படத்தில் காணலாம். வாஷிங்டனில் நடைபெற்ற உலக வங்கியினதும் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தினதும் வருடாந்தக் கூட்டங்களின்போதே இந்த விருது வழங்கப்பட்டது. (07)

"நான்கு சக்கர ஓட்ட (போர் வீல் டிரைவ்) வாகனத் தயாரிப்பில் ரேஞ்ச் ரோவர் புரட்சி செய்துள்ளது. சொகுசு ஸ்போர்ட்ஸ் பன்நோக்கு ரக வாகனங்களைத் தனித்தன்மை மிக்கதாக அது உருவாக்கியுள்ளது" எனவும் தெரிவித்தார். 1970 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட லேண்ட் ரோவர் வாகனமானது, சொகுசு SUV வாகனச் சந்தையில் கடந்த 30 வருடங்களாக முன்னணி வகிப்பதில் வேறுபட்ட கருத்தில்லை. இது, உயர்ந்த சொகுசு செடான் வழங்கும் வசதிகளை விஞ்சி நிற்கிறது. எந்த நிலப்பகுதியிலும் செல்லும் திறன் வாய்ந்தது.

2006க்கான புதிய ரேஞ்ச் ரோவர் சக்திவாய்ந்த இரு வி 8 எஞ்சின்களைக் கொண்டது. அத்துடன், இலத்திரனியலால் கட்டுப்படுத்தக்கூடிய 6 விரைவு கியர்களையும் கொண்டிருக்கிறது. ரேஞ்ச் ரோவரின் உள்ளக் வடிவமைப்பில் புதுமையும் தொழில்நுட்பமும் முக்கிய இடம்வகிக்கின்றன.

சமகால பிரிட்டிஷ் வடிவமைப்பாளர்களிடம் இருந்தும், சொகுசு படகுகளில் இருந்தும் பெறப்பட்ட வடிவமைப்பு குறிப்புகளின் உதவியுடன் உள்ளக் வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வித நிலப்பகுதியிலும் செல்லத்தக்கதாக கனரக பொருத்துக்களும், நான்கு மூலை எயார் சஸ்பென்சர்களும் இவ்வாகனத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தரம், வசதி, திறன் என்பனவற்றில் இது மேலோங்கி இருக்கிறது.

லேண்ட் ரோவர் வகையின் ஐந்தாவது படைப்பே ரேஞ்ச் ரோவர் ஸ்போர்ட்ஸ் ஆகும். "உயர் செயற்திறன் ஸ்போர்ட்ஸ் ரக வாகனங்கள் மற்று[ம்] 4 சக்கர ஓட்ட SUV வாகனங்களின் கலப்பே ரேஞ்[ச்] விருதுபெற்ற டிஸ்கவரி 3 ரகத்துடன் ரேஞ்ச் ரோவர் ஸ்போர்ட்ஸ் இணைத்து பேசப்படுகிறது. "அதி நவீன தொழில்நுட்பம் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது" என பெர்னாண்டோ கூறினார். வசதி, மாறுதல்கள், எந்நிலப்பகுதியிலும் செல்லும் திறன்வாய்ந்த ரேஞ்ச் ரோவர் ஸ்போர்ட் வியக்கத்தக்க வகையில் ஆற்றல் படைத்துள்ளது என அவர் மேலும் கூறினார்.

இதன் சிறப்புகளைப் பற்றி புரொண்டியர் ஆட்டோமோட்டிவ் நிறுவன அதிகாரி சந்திம குணரத்ன கூறுகையில், ரேஞ்ச் ஸ்போர்ட்ஸ் 400 குதிரை வலு சக்தியை வெளிப்படுத்தும் விசேட எஞ்சினையும், 6 விரைவு கியர் பெட்டியையும் கொண்டுள்ளது என்றார். 4 x 4 வாகனங்களைக் கையாளும் எதிர்பார்ப்புகளையும், செயற்பாட்டையும் இவ் வாகனம் விஞ்சிநிற்கிறது. அத்துடன், ரேஞ்ச் ரோவரின் பெயருடன் இணைந்துள்ள சொகுசு மற்றும் நவீனத்துவம் என்பவற்றையும் கொண்டுள்ளது" என்றார்.

லேண்ட் ரோவர் வகையானது, வாழும் தொழில்நுட்ப பரிணாமமாகும். இது "டிபண்டர்" வாகனங்களை உலகின் அதிதிறன் படைத்த நம்பத்தகுந்த வாகனமாக்கியது. நகராந்திர பயணங்களுக்கான வாகனமான "தி பிரிலேண்டரும்" சொகுசு, திறன் படைத்த டிஸ்கவரி 3 வாகனமும் சிறப்பான ரேஞ்ச் ரோவர் மற்றும் ரேஞ்ச் ரோவர் ஸ்போர்ட்ஸ் வாகனமும் 4 x 4 வகை வாகனத் தயாரிப்பில் லேண்ட் ரோவரின் மேன்மையைச் சுட்டிக்காட்டுகிறது. "உலகின் மிகப்பெரிய 4 x 4 வாகனத் தயாரிப்பாளர்களான லேண்ட் ரோவரைத் தவிர வேறு எவரும் திறனும், அழகும் வாய்ந்த வாகனங்களை உங்களுக்கு வழங்க முடியாது" என பெர்னாண்டோ கூறினார். (07)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SEA - ME - WE - 4

# கடலடி ஒலியிழை கேபிள் திட்டம் ஸ்ரீலங்கா ரெலிக்கொமால் ஆரம்பம்

நாட்டின் தொலைத்தொடர்புத்துறையில் மிகப்பெரிய நிறுவனமாக விளங்கும் ஸ்ரீலங்கா ரெலிகொம் SEA-ME-WE-4 (South Fast Asia (SEA), Middle East (ME) Western Europe (WE) கடலடி ஒளியிழைக் கேபிள் திட்டத்தின் உள்ளூர் செயற்பாடுகளை அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

பல் பிராந்திய இணைப்புச் சாதனமாகத் திகழும் இத்திட்டம் 20,000 கிலோ மீட்டர்களுக்குப் பரந்துள்ளது. அதிநவீனதொழில்நுட்பத்தைக் கொண்ட இக் கடலடிக் கேபிள் முறைமை 15 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 16 இயக்குநர்களைக் கொண்ட கூட்டிணைவினால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.

இந்த ஆரம்ப விழாவில் ஸ்ரீலங்கா ரெலிகொம் கூட்டிணைவுப் பங்காளர்களில் 50 இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அவர்களில் பலர் பிராந்தியத்தில் சக்திமிக்க நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாகும்.

இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள சகல தொலைத் தொடர்புக் கம்பனிகளுக்கும் இத்திட்டம் வருமான மற்றும் அபிவிருத்திசார் திட்டமாக விளங்குவதுடன், இப்பிராந்தியத்திற்குக் கிடைக்கும் அகன்ற அலைவரிசைக் கொள்ளளவை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கக்கூடியதாகவும் உள்ளது. அத்துடன் இத்திட்டம் முடிவடையும் நேரத்தில் அட்டவணையில் காட்டப்பட்டிருந்தது போல், ஏற்கனவே இருந்துவரும் தேவைக்கு ஏற்ப உட்கட்டமைப்பை அதிகரிக்கும் பொறுப்பையும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் SEA-ME-WE-4 கூட்டிணைவின் முகாமைத்துவ அமைப்பில் முக்கிய பங்கை வகித்து வருகின்றது. இத்திட்டத்தின் நிதியைக் கையாளும் பொறுப்பைக் கொண்டுள்ள நிதி மற்றும் நிர்வாகக் குழுவில் (F& AC) இக்கம்பனி தலைமைப்பொறுப்பிலும் இருந்து வருகின்றது.

...00 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இத்திட்டத்திற்கு இந்தக்குழுவே முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ளது. ஸ்ரீலங்கா ரெலிகொம் இத்திட்டத்தில் 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை (3 பில்லியன்) முதலீடு செய்துள்ளது.

இந்தப்புதிய இணைப்பின் மூலம் ஸ்ரீலங்கா ரெலிகொம் பெறும் நலன்கள் அளவற்றவை. முன்னைய SEA-ME-WE-3 மற்றும் ஏனைய நுண்ணலை இணைப்புகளும் கைவசம் உள்ளதால், இந்தக் கேபிள் முறையானது தற்போதுள்ள இணைப்புகளை மேலும் வலுப்படுத்துவதுடன், தன்னிறைவு பெறுவதற்கான வசதிகளையும் தாராளமாக வழங்குகின்றது. SEA-ME-WE-3 கடலடிக் கேபிள்மூலம் தற்போதுள்ள ஒரு செக்கனுக்கான போக்குவரத்துக் கொள்ளளவான (Per Second traffic capacity) 160 ஜிகா பிட்ஸ் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கேபிள்கள் மூலம் 1.28 ரெறாபிட்ஸ் ஆக உயர்த்தப்படும்.

இந்த அதிகரித்த கொள்ளளவு IP முதுகெலும்பு வலையமைப்பின் (IP Backbone network) அகன்ற அலைவரிசைத் திறனை மேலும் அதிகரிப்பதற்கு வழிவகுப்பதுடன், நாடுகளுக்கிடையிலான பரிமாற்றங்களின்போது உயர்ந்த வேகத்தையும், சிறந்த வினைத்திறனையும் ஏற்படுத்தும். ஸ்ரீலங்கா ரெலிகொம்மிடம் தற்போது கைவசமுள்ள வலையமைப்புடன் இந்தக்கேபிள்களின் ஆற்றல்கள் இணைக்கப்படுவதால், அது மிகச் சிறந்த நம்பகத்தன்மையையும், அதி உயர் இணைப்புத் திறனையும் பெற்றுக்கொள்ளும்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் ஏனைய நாடுகளிலுள்ள அதிக போட்டித்தன்மையுள்ள IP குத்தகைச் சுற்றுப்பட்டியலை (IP Leased Circuit Traffic) நிறுவன மற்றும் உயர்கொள்ளளவு வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் திட்டம் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் ஒரு அனுகூலமாகும்.

மேலும் இக்கேபிளின் இலங்கையர் பக்கம் உள்ள சந்தாதாரர்கள் பல்லூடகக் கொள்ளளவு மற்றும் திரைப்படங்கள், இசை போன்ற அகன்ற அலைவரிசைச் சேவைகளின் மேலதிக இணைப்புகளை வழங்கக்கூடிய மிகச்சிறந்த இணைப்பைப் பெற்றுக்கொள்வார்கள். அத்துடன் ஒடியோ, வீடியோ ஒழுங்குபடுத்தல் வசதிகளும் மேலும் மேம்படுத்தப்படும்.

ஆரம்ப விழாவின்போது உரையாற்றிய ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான சுகேய் அனன் இந்தப்பிராந்தியத்திற்கும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கும் SEA-ME-WE-4 திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். இலங்கையின் புவியியல் அமைவிடத்தின் பயனாக, எதிர்காலத்தில் மிக உயர்ந்த அகன்ற அலைவரிசைத் தேவைகள் இலங்கைக்குக் கிடைப்பதற்கு இக்கேபிள்கள் வழிவகுக்கும் என மேலும் கூறினார்.

எதிர்காலத்தில் அமைக்கப்படும் எந்தவொரு SEA-ME-WE-4 கேபிள்கள் செல்லும் பாதையின் கேந்திரமான இடத்தில் இலங்கை அமைந்திருப்பதால் பெறுமதி மிக்க சேவைகளை உருவாக்கும் வாய்ப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்குத் தொடர்ந்து கிடைக்கும். சர்வதேசப் போட்டியாளர்களுடன் இலங்கையின் போட்டியிடும் தன்மை காரணமாக இந்தக் கேபிள் பாதையிலிருந்து முழு இலங்கையும் கம்பனியின் அணுகுவழி (ACCESS) இன் உயர் இணைப்புத்திறன், சிறந்த நம்பகத்தன்மை, முன்னேற்றகரமான பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட வேகம் என்பன அதிகரித்தல் போன்ற நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும்.

உண்மையில் இந்தக் கேபிள்கள் மூலம் கிடைக்கும் நன்மைகள் முழுவதும் தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பாவுக்கு மட்டும் பயன்படுத்தப்படாமல், இந்தப்பிரதேசத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பெருமளவு தரவு, இணையத்தள இணைப்பு மற்றும் ஈ-வர்த்தகத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான, பொதுமக்களிடையே வேகமாக வளர்ந்து வரும் உயர் வேகமுடைய இணையத்தள இணைப்பிற்கான அணுகுவழியையும் வழங்க உதவும்.

இது மக்கள், கலாசாரங்கள் மற்றும் நாடுகளிடையே நிலவும் புவியியல், வர்த்தகம், கலாசாரம் போன்ற சமூக இடைவெளிகளை இணைப்பதற்கு உதவும். வேகமானதும், இலகுவானதுமான பரிமாற்றம் மற்றும் ஒருசில செக்கன்களில் பெருமளவு தரவுகளையும், தகவல்களையும் விநியோகித்தல் போன்றன சர்வதேச ரீதியாக தனிப்பட்டவர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு அடிப்படைத் தேவையாக வளர்ந்துவருகிறது.

லட்சக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கையான உயர் வேகமுடைய இணைப்பை வழங்கிவரும் சர்வதேச தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களின் முயற்சிகளின் இன்னொரு மைல்கல்லாக இந்தக் கேபிள் முறையை மாற்றுவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் SEA-ME-WE கூட்டிணைவு மேற்கொண்டுள்ளது.

மேலும் இந்தக்கேபிள் முழுத்திறனையும் பயன்படுத்தி ஒரு செக்கனுக்கு 1.28 ரெறாபைட்ஸ் வேகத்தில் செயற்படும்போது 15 மில்லியனுக்கு மேற்பட்ட தொலைபேசி அழைப்புகளை ஒரே நேரத்தில் கையாளக்கூடியதாக இருக்கின்றது.

சர்வதேச அகன்ற பட்டி போக்குவரத்து பரிமாற்றங்களை மேம்படுத்தும் அதேவேளை, வாடிக்கையாளர்களின் ஆற்றல்களுக்கு உதவக்கூடிய முறைமையொன்றை வழங்குவதன் மூலம் அவர்களால் அணுகப்படும் கொள்ளளவை மேலும் அதிகரிக்க உதவிகள் வழங்கப்படும். sea-me-we யுடன் சம்பந்தப்பட்ட பிரதேசங்கள் இந்த அதிகரித்துவரும் போட்டிக்குத் தயாராவதை இதன்மூலம் நிரூபிக்க முடியும்.

தனிப்பட்ட பங்காளரின் நோக்கில் கடலடிக் கேபிள் முறைமையின் வெற்றியுடன் தொடர்புடைய செலவுகள், முதலீடு மற்றும் சேவை முன்னேற்றங்களைக்கொண்டு நோக்கும்போது அவை இலாபகரமானவையாக உள்ளன. அதிக வருமானமுள்ள தொலைத்தொடர்புக்கம்பனிகளின் பங்குடமை போட்டிகள் நிறைந்த சூழலிலும் நடைபெறக்கூடியது என்பதை sea-me-we திட்டங்கள் நிரூபித்துள்ளன.

இந்தத் திட்டத்தின்மூலம் கிடைக்கும் மேலதிக அகன்ற பட்டி புதிய சேவைகளை உருவாக்க அனுமதிப்பதன் மூலம் வாடிக்கையாளர்களின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. உள்ளூரிலும், பிராந்தியத்திலும் பலமான நிலையில் உள்ள sea-me--we-4 திட்டத்தின் அங்கத்தவர்களிடையே காணப்படும் பங்குடமையின் அபிவிருத்திக்கு இது மேலும் உதவிசெய்யும்.

sea-me-we-4 திட்டம் ஏறக்குறைய 20,000 கிலோ மீட்டர்கள் நீளமுடையது. அத்துடன் கிழக்கு, மேற்கு நாடுகளூடாகச் செல்லும் பிரதான ஆதாரமாக பல்வேறு நாடுகளுடன் நீடிக்கப்பட்ட இணைப்புகளையும் கொண்டுள்ளது. இந்தப் பிரதேசம் அதிக பொருளாதார வளமான கேபிள் முறைமைகளுக்கிடையில் அமைந்துள்ளது.

அத்துடன் ஒரு செக்கனுக்கு மிகவேகமான ரெறாபிட்ஸ் இணைப்புத்திறனை அடையக்கூடிய அதிநவீன ரெறாபிட் DWDM தொழில்நுட்பம் உபயோகிக்கப்படுகின்றது. இந்தத்திட்டம் தொலைபேசி, இணையத்தளம், பல்லூடகம் மற்றும் பல்வேறு அகன்ற அலைவரிசைதரவுப்பிரயோகங்களுக்குத் துணைபுரிகின்றது.

இந்தக் கூட்டமைப்பில் பின்வரும் கம்பனிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.- அல்ஜீரியா ரெலிகொம் (AT), பாரத்(இந்தியா), பங்களாதேஷ் ரெலிகொம் (BTTB), ரெலிகொம் தாய்லாந்து (CAT), பிரான்ஸ் ரெலிகொம் MCI, பாகிஸ்தான் ரெலிகொம் (PTCL), சிங்கப்பூர் ரெலிகொம்(SINGTCL), ஸ்ரீலங்கா ரெலிகொம் (SLT), சவூதி ரெலிகொம் (STC), ரெலிகொம் எகிப்து, ரெலிகொம் இற்றாலியா, ஸ்பார்க்கிள் ரெலிகொம் மலேசியா, டுனிசியா ரெலிகொம், VSNL (இந்தியா) மற்றும் எற்றிசல்ற் (UAE). (07)




## லங்கா பெல்லுக்கு உங்களின் வான்கள் தேவை

CDMA தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும், நாடு முழுவதும் வேகமாக பரவி வரும் லங்கா பெல்லின் சேவையின் வேகத்தை மேலும் அதிகரிக்க வவுனியா, திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் வேன்சாரதிகளுடன் வான்கள் வாடகைக்கு எடுக்க லங்கா பெல் நிறுவனம் நாடுகின்றது.

இதற்காக கீழுள்ள தகைமைகளை நீங்கள் கொண்டிருந்தால் எம்முடன் கைகோர்க்க இன்றே வாருங்கள்.

*Hi Ace Dolpin அல்லது Caravan அல்லது Mazda Bongo ரக வெள்ளை நிர வான்கள், குளிரூட்டி வசதியுடன் Hood Wrack பொறுத்தப்பட்டிருத்தல் கட்டாயமாகும்.
*ஆகக் குறைந்த வாடகைக் காலம் 6 மாதங்களாக இருக்கும்
*டீசல் வாகனமாயிறுத்தல்
*வாகனத்துடன் சாரதியையும் மற்றும் எரி பொருளையும் உரிமையாளர் வழங்குவதுடன் அதற்கான கட்டணத்தை லங்கா பெல் km அடிப்படையில் உரிமையாளருக்கு செலுத்தும்
*லங்கா பெல் நிறுவனத்தின விற்பனை பதாகைகளுக்கு அனுமதியளித்தல்

முகாமையாளர்,
போக்குவரத்து மற்றும் லொஜிஸ்டிக்
2ம் மாடி, 74/5, கிரேண்ட்பாஸ் வீதி,
கொழும்பு 14.

லங்கா பெல் CDMA



## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் வேளாண்மை உபகரணங்களை ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள




## சமரக்கோன் டிரக்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

இல. 199, குருநாகல் வீதி, வெதமுல்ல, மினுவான்கொடை.

Tel : 011 - 2295254, 5670180 Fax : 011 - 2295254

எமது முகவர்கள் :
- கடவத்தை மோட்டர்ஸ்- அம்பாறை
- நிபாஸ் மோட்டர்ஸ் - சாய்ந்தமருது
- எஸ்.எஸ். மோட்டர்ஸ்- சம்மாந்துறை
- சஹுக எண்டபிரைசஸ்- கிங்குராங்கொட, மஹிரிகிரிய
- ராஜ் இண்டநஸினல் ஏஜன்சீஸ் - யாழ்ப்பாணம்
- தரங்க மோட்டர்ஸ்- கந்தளாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

29.01.2006

# தமிழரைப் பணிய வைக்கும் உளவியல் போரே மரண தண்டனைப் பாணிக் கொலைகள்!

திருகோணமலையில் 5 இளம் மாணவர்களும் யாழ்ப்பாணத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண் களும் அண்மையில் மரண தண்டனைப் பாணியில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

வடக்கு-கிழக்கு பிரதேசத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அண்மைக்காலங்களில் தொடர்ந்து நடைபெற்று வந்த படுகொலைகள் தற்போது மிகக் குரூரமான திசைநோக்கித் திரும்பி இருக்கின்றன என்பதை போரில் நேரடியாகத் தொடர்புபடாத இந்த அப்பாவிப் பொதுமக்களின் படுகொலைகள் உணர்த்துகின்றன.

ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு அண்மையில் மீளமைக்கப்பட்டது. அதன் பணிப்பாளரும் கடும்போக்காளருமான பிரிகேடியர் றிஸ்வி ஷக்கி யாழ்ப்பாணத்தில் பிரிகேடியர் ஜென்ரல் அலுவலக ஆலோசகராக இருப்பவருமான ஒருவரே வழங்கினார்''- என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கொட்டகதெனியவைவே அப்பத்திரிகை இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளரும் கடும்போக்காளருமான பிரிகேடியர் றிஸ்வி ஷக்கி யாழ்ப்பாணத்திற்கான பிரிகேடியர் ஜெனரல் அலுவலக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

> ''யாழ்.அதிகாரியாக றிஸ்வி ஷக்கி பதவியேற்ற பின்பே அப்பாவிப் பொதுமக்கள் மீதான கொலைகள் அதிகரித்துள்ளன''

இராணுவத் தளபதி பொன்சேகாவின் முன்னாள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு ஷக்கி நியமிக்கப்பட்டுள்ளமை, புதிய தளபதி எதற்கு முன்னுரிமை கொடுக்கிறார் னாள் துணைப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஷக்கியால் அலைந்து அல்லல்பட்டநிலையில் அந்த வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்திலும்-திருகோணமலையிலும் வடக்கு-கிழக்கு எங்கிலும் நடைபெற்றுவரும் இராணுவ வெறியாட்டமும் குழுக்கொலைகளும் போரில் சம்பந்தப்படாத மக்களைத் திகிலடையச் செய்யும் நோக்கிலான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழேயே நடைபெறுகின்றன. இந்தக் கடும்போக்கு உளவியல் அணுகுமுறையானது, ஸ்ரீலங்கா இராணுவத்தின் புலிகளுக்கு எதிரான படை நடவடிக்கைகள் வேறுபக்கம் திசை கடும்போக்கு நிலையைத் தெரிவுசெய்துள்ளார் என்ற செய்தியையே தமிழர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெரிவித்துள்ளது என்று விமர்சனங்கள் கூறப்படுகின்றன. ரட்னசிறிஒரு சிங்களக் கடும்போக்குவாதி என்று நன்கு அறியப்பட்டவர். 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் அவர் கொண்டு வந்த மதமாற்றத் தடைச் சட்டம் மீதான விவாதத்தின்போது (அப்போது அவர் புத்தசாசன அமைச்சர்) புலிகளுடனான சமாதான முயற்சிகளுக்கும் நோர்வேயின் அனுசரணைகளுக்கும் போர்நிறுத்த ஒப்பந்தங்களுக்கும் எதிராக உரையாற்றியவர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் மிக நெருங்கிய உதவியாளர்கள் வட்டத்துக்குள் இருந்தவர் அவர். சந்திரிகாவை புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு வழிநடத்தியதில் அவருக்கும் பெரும் பங்

அதிகாரியாக (புலனாய்வு) புனரமைப்பின் போது நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் தமிழ்மக்களின் சனத்தொகையைக் குறைக்கும் விதத்தில் (இன அழிப்பு நடவடிக்கை) மேற்கொள்ளப்படும் பயங்கரவாத வன்முறைகள் கடும்போக்காளர்களின் மீள்வருகையை குறித்து நிற்கின்றன.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் புதிய இராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டார். புதிய ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ அவரை அப்பதவியில் அமர்த்தினார். பதவியேற்றதும் இராணுவத்திலும் இராணுவப் புலனாய்வுப் பிரிவிலும் பொன்சேகா பெரும் மாற்றங்களைச் செய்தார்; அவற்றை மீளமைத்தார்.

இராணுவத்தின் கவசவாகனப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவரான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி யாழ்.படைகளின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அதற்கு முன் யாழ்ப்பாணத்தில் இருந்த மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனின் இடத்தை அவர் பொறுப்பேற்றார். ஜனாதிபதியின் சகோதரரும் முன்னாள் லெப்டினன்ட் கேணலுமான கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். சில காலங்களுக்கு முன்பே அவர் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இருந்து நாடு திரும்பியிருந்தார். கொழும்பு வந்ததும் அவர் அப்போது பிரதமராக இருந்தவரான தனது சகோதரரின் பாதுகாப்பு ஆலோசகராகச் செயற்பட்டார். ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் கோத்தபாய பாதுகாப்புச் செயலரானார்.

1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டை, புலிகளால் முற்றுகையிடப்பட்டிருந்த போது அங்கிருந்த சிப்பாய்களை மீட்கவென மேற்கொள்ளப்பட்ட 'ரிவிடபாலய' என்ற இராணுவ நடவடிக்கையில் கோத்தபாய ராஜபக்ஷவும் (அப்போது மேஜர்) சரத்பொன்சேகாவும் (அப்போது லெப்டினன்ட் கேணல்) சேர்ந்து பங்கெடுத்திருந்தனர்.

பாதுகாப்புச் செயலராகப் பொறுப்பேற்றுக்கொண்ட கையோடு கோத்தபாய ராஜபக்ஷ செய்தவேலை, புலிகளுடன் சண்டையிடத் தமக்கு உதவுமாறு அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் தூதர்களிடம் கோரியதுதான்.

சிங்களக் கடும்போக்காளரும் முன்னாள் பொலிஸ் மா அதிபரும் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த அரசியல்வாதியுமான எச்.எம்.ஜி.பி.கொட்டக தெனிய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை டொக்யார்ட் பகுதியில் 20 வயதிற்கும் குறைந்த 5 தமிழ் இளைஞர்கள் மரண தண்டனைப் பாணியில் கடந்த மாதத்தில் கொல்லப்பட்டனர். இவர்களை விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒரு குழுவே கொன்றது என்று கடந்த 8 ஆம் திகதிய 'சன்டே ரைம்ஸ்' பத்திரிகை தனது களநிலைவரம் பகுதியில் தெரிவித்திருந்தது. அதற்கான உத்தரவை ''ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியும் தற்போது பாதுகாப்பு அமைச்சின்

என்பதற்கான ஒரு சமிக்ஞையை வெளிப்படுத்தி நிற்கிறது. யாழ்.குடாநாட்டில் எதிர்க் கலக நடவடிக்கையுடன் ஒரு உளவியல் போரை முழு வீச்சில் முன்னெடுப்பதே அந்த முக்கியபணியாகும்.

ஷக்கி இதற்கு முன்னர் மட்டக்களப்பின் கட்டளைத் தளபதியாக இருந்தவர். பின்னர் இலங்கை இராணுவத்தின் உளவியல் நடவடிக்கைத் தலைவராக இருந்தார். 2004 இல் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமனம் பெறுவதற்கு முன்னர் அவர் பாகிஸ்தானில் இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார்.

இராணுவத் துணைப் படைகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களான மேஜர் ரி.என்.முத்தலிப் (இவர் 2005 ஆம் ஆண்டு மே மாதம் படுகொலை செய்யப்பட்டார்), லெப்டினன்ட் கேணல் மீடின் (இவர் 2005ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் படுகொலை செய்யப்



முத்தலிப்



சரத்பொன்சேகா



ராஜபக்ஷ

பட்டார்) ஆகியோரை விடவும் பிரிகேடியர் ஷக்கி மிகக் கடும்போக்காளர் என்று மட்டக்களப்பின் முன்னாள் இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தப் புலனாய்வு அதிகாரிகள் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று இலங்கை அரசு குற்றஞ்சாட்டியது. ஆனால், அந்தக் கொலைகளுடன் பாதாள உலகக் குழுக்களுக்குத் தொடர்பு இருக்கிறது என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தங்களுடைய சூது, வாதுத்தன அணுகுமுறைகளால் துணைப்படையினர் மத்தியில் நன்கு பிரபல்யம் பெற்றிருந்த குறித்த இரு புலனாய்வு அதிகாரிகளும் கொல்லப்பட்டமை, கொழும்பில் துணைப்படைகளை இயக்குவோர் மத்தியில் அவநம்பிக்கையை வளர்த்தது. சிலர் நாட்டைவிட்டே வெளியேறினர் என முன்னாள் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், ஷக்கி இங்கேயே தொடர்ந்திருந்தார்.

தமிழ் ஆயுதக் குழுவினருடன் முன்னர் தனக்கிருந்த அனுபவத்தைப் பயன்படுத்தி மட்டக்களப்பில் தான் பணியாற்றிய போது இராணுவத் துணைப்படையினர் மத்தியில் தன்னைப் பற்றிய நம்பிக்கையை ஷக்கியால் கட்டியெழுப்பமுடிந்தது. அந்தத் துணைப்படையினர் பின்னர் புலிகளின் மாற்றுக்குழுவினர் என்று அழைக்கப்படலாயினர்.

''ஷக்கி [illegible] பணியாற்றும் எந்தவொரு உள[illegible] நபர் குறித்தோ சந்தேகம் ஏற்படுவதைச் சகித்துக்கொள்ளவேமாட்டார்''-என்று முன்

மாறி இருப்பதைப் புலப்படுத்துகின்றது.

சமாதான நடைமுறைக் காலத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் இடம்பெற்றுவரும் இத்தகைய கொலைகளின் பாதகமான தாக்கத்தின் அளவு பற்றிக் குறிப்பிடுவதிலிருந்து, இலங்கைக்கான அமெரிக்கத் தூதரும் அண்மையில் கொழும்புக்கு விஜயம்செய்தவரான அமெரிக்க அரசியல் விவகாரத் துணைச் செயலரும் தவறிவிட்டனர். அவர்கள் அண்மையில் விடுத்த அறிக்கைகள் அனைத்தையும் சீர்தூக்கி சமநிலையில் வைத்துப் பார்க்கத் தவறிவிட்டன.

அதேசமயம், இலங்கை இராணுவக் கட்டமைப்பு மீள் ஒழுங்கு செய்யப்பட்டதன் பின்னர் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு இணைப்பாளர் லெப்டினன்ட் கேணல் ஜேம்ஸ் ஈ ஒஸ்லி யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவக் கட்டளைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்துள்ளார். இராணுவத்தின் இணையத்தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

''இலங்கை இராணுவத்தின் முக்கிய உயர் அதிகாரிகளது பின்புலம் குறித்து அமெரிக்க அதிகாரிகள் தெரிந்துவைத்துள்ளனர். ஆனால், அது (அமெரிக்கா) ஒரு வரையறைக்குட்பட்ட இறைமையுள்ள நாடு. அதனை இலங்கை அரசு தனக்கான சாதகமாகப் பயன்படுத்துகின்றது'' - என்று ஒருவருடத்திற்கு முன்னர் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

''வெள்ளைவான் கடத்தல்கள், காணாமற்போதல்கள் என்பன யாழ்ப்பாண மக்களின் மனங்களில் ஓர் அச்சத்தை உருவாக்கியுள்ளன. கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் கடந்தகாலங்களில் நிகழ்ந்த வெள்ளைவான் கடத்தற்கதைகளை அவர்களுக்கு இவை மீண்டும் ஞாபகப்படுத்துகின்றன''-என்று தெரிவித்தார் தமிழ்க்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.கஜேந்திரன்.

தமிழர்களின் மனங்களில் உளவியல் ரீதியான அச்சத்தை ஏற்படுத்துவதற்கான இந்தத் தொழிநுட்பத்தின் மூலம் அவர்களின் அரசியல் எழுச்சியை நசுக்கலாம் என்ற சரத் பொன்சேகாவின் நம்பிக்கையை அவரது இராணுவ மீள்கட்ட[illegible]முறையில் பூர்த்திசெய்[illegible]

ரட்ன சிறி விக்கிரமநாயக்கவின் நியமனம்கூட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

குண்டு.

அதற்கு முன்னர் சந்திரிகா தனது மாமனாரான அனுருத்த ரத்வத்தையைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமித்திருந்தார். அரசியலில் இருந்து அவர் ஒதுங்க நேர்ந்ததன் பின்னர் சந்திரிகாவின் காலத்திலும் இப்போதும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ரட்னசிறி விக்கிரமநாயக்கவே உள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் கீழ் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியாக இருந்தவர் சரத் பொன்சேகா . அவரது கட்டுப்பாட்டின் கீழேயே செம்மணிப் புதைகுழிகள் தோன்றின. அவரது காலத்திலேயே வடக்கு - கிழக்கில் - போர்நிகழ்ந்து கொண்டிருக்கையில் - மிக அதிக எண்ணிக்கையான மனித உரிமை மீறல்களும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றன என்று பதிவுகள் கூறுகின்றன.

'காளைமாடு'(புள்) வீரதுங்க என்று எல்லோராலும் நன்கு அறியப்பட்ட ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க இலங்கை இராணுவத்தின் வடபிராந்தியம் முழுவதுக்குமான கட்டளைத் தளபதியாக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் 1989 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். 1979 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பான 6 மாத காலத்திற்குள் தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற நோக்கோடு அவர் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட எழுச்சியை அடக்குவதற்காக பி.ரி.ஏ.எனப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பிறப்பித்த பின்னரே தனது நெருங்கிய உறவினரான வீரதுங்கவை ஜெயவர்த்தன யாழ்ப்பாணம் அனுப்பினார். 1974 இல் பிரிட்டனில் இருந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் போன்று தனது சட்டத்திற்கு ஜெயவர்த்தன பெயரிட்டாலும் உண்மையில் அது தென்னாபிரிக்காவில் 1967 இல் இருந்த சட்டத்தை ஒத்த உள்ளடக்கங்களுடனேயே இருந்தது.

மூலம்: தமிழ் நெற்
தமிழில்: பிரேம்

அந்தச் சட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டம் அவசரகால நிலைக்குள் தள்ளப்பட்டது. சந்தேகத்துக்குரிய எவரையும் சுடும் அதிகாரம் ஆயுதப் படைகளுக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் எந்தவிசாரணைகளும் இன்றிச் சடலங்களை அழித்துவிடவும் அவர்களுக்கு அனுமதி இருந்தது.

இதுதான் யாழ்.மாவட்டத்தில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவதற்கும் தடுத்து வைக்கப்படுவதற்கும் ஆரம்பமானது. அதேநேரம் தமிழ் இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்தின் பால் தள்ளப்படுவதற்கு அல்லது நாட்டை விட்டு நீங்குவதற்கு அந்தச் சட்டம் ஒரு காரணமாயிற்று. இந்த இரண்டுமே பின்னாளில் தமிழர்களின் பிரச்சினைக்கு உரமூட்டுவதாகவும் உந்துசக்தியைக் கொடுப்பதாகவும் அமைத்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீட்டிலும் வீதியிலும் விபத்துகளை வருமுன் காப்பதே சாலச் சிறந்தது

**2005** ஆம் ஆண்டு ஜூன் மாதம் சுவிற்ஸர்லாந்தின் ஜெனிவா நகரில் அமைந்துள்ள சர்வதேச தொழில் ஸ்தாபனத்தில் நடைபெற்ற தொழில்சார் பாதுகாப்பு சுகாதாரக் கருத்தரங்கில் தொழிலுடன் தொடர்புடைய விபத்துகளாலும் நோய்களாலும் வருடமொன்றுக்கு அண்ணளவாக இருபது லட்சம் மரணங்கள் நிகழ்கின்றன என்று ஆய்ந்தறியப்பட்டது. இலங்கையிலும் இத்தகைய மரணங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன.

உலகில் தொழிலுடன் தொடர்புடைய மரணமற்ற விபத்துகளில் 24 கோடி தொழிலாளர்களும் தொழிலுடன் தொடர்புடைய வியாதிகளினால் 16 கோடி தொழிலாளர்களும் துன்பப்படுகின்றார்கள் என்றும் மதிப்பீடு செய்துள்ளார்கள். இம் மதிப்பீட்டின்படி இந்நிகழ்வுகளால் நஷ்டஈடு, வேலைநேர இழப்பு, உற்பத்தியில் ஏற்பட்ட தடை, தொழிலாளருக்குப் பயிற்சி, மருத்துவச் செலவு ஆகியவற்றினது செலவீனம் அண்ணளவாக வருடாந்தம் உலக மொத்த உற்பத்தி வருமானத்தின் நான்கு சத வீதமாகும்.

விபத்து என்பது எந்நேரமும் எவ்விடத்திலும் நிகழக்கூடிய விரும்பத்தகாத சம்பவமாகும். அதாவது, விபத்துகள் வேலைத்தளத்திலோ வீட்டிலோ அல்லது பிரயாணம் செய்யும்பொழுதோ நிகழலாம். விபத்துகள் நிகழும் இடத்தினைக் கொண்டு அதற்குரிய பாதுகாப்பு முறையினை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

அவையாவன -

* வேலை செய்யுமிடத்தில் பாதுகாப்பு (On The Job Safety)
* வேலையற்ற இடத்தில் பாதுகாப்பு (Off The Job Safety)

குணப்படுத்துவதை விட தடுப்பது இலகுவானது என்ற பழமொழிக்கிணங்க நாம் விபத்தினை நிகழவிடாது தடுத்தால் எமக்கு



நன்மையளிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள். மேலும், விபத்தினால் ஏற்படும் செலவீனத்தில் அண்ணளவாக கால் பங்கு, பாதுகாப்பு நடவடிக்கைக்கு ஏற்படும் செலவீனம் என்று கூறியுள்ளார்கள். அவற்றினை விட விபத்தினால் நோயாளிகள் அனுபவிக்கும் துன்பத்தினையும் அவரைச் சார்ந்தவர்களுக்கு ஏற்படும் மேலதிக வேலைப்பளுவினையும் தவிர்க்க முடியும்.

### வேலைசெய்யுமிடத்துப் பாதுகாப்பு

உரிய பாதுகாப்பற்ற நடவடிக்கை மற்றும் பாதுகாப்பற்ற நிலை என்பன விபத்துகள் நிகழக் கூடிய காரணிகளாகும். இவற்றைத் தீர்க்கமுடியுமானால், விபத்துகள் ஏற்படாமல் தடுக்கலாம். பாரதூரமான விபத்துகள் நிகழும் இடங்களை ஆராய்ச்சியாளர்கள் இனங்கண்டுள்ளனர்.

அவையாவன -

* அபாயகரமான நிலையினைக் கொண்டுள்ள வேலைத் தளங்கள்
* அபாயகரமான நடவடிக்கைகள் காணப்படுகின்ற வேலைத்தளங்கள்
* உடலின் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வேலைத் தளங்கள்

என்பனவாகும்.

இந்த வேலைத் தளங்கள் அனைத்தும் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 128 இல் உள்ள 126 ஆம் சட்ட உடன்பாட்டில் தொழிற்சாலைகள் என வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டளைச் சட்டத்தினை அமுல்படுத்தவும் அண்மையில் அறிமுகமான தொழில்சார் பாதுகாப்பும் சுகாதார அறிவினையூட்டவும் தொழில் திணைக்களத்தில் தொழில்சார் பாதுகாப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்தினை தடுக்கும் நோக்கில் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு சுகாதாரம், சேமநலம் என்பவற்றினை உறுதி செய்வதற்காக தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 128) இனை அமுல்படுத்த தொழிலதிபர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கும் பொறுப்பு தொழில் ஆணையாளருக்கு (கைத்தொழில்) வழங்கப்பட்டுள்ளன. அதன் வடமாகாண பிராந்தியம் யாழ்.நகரில் அமைந்துள்ளதுடன் மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர்களின் தலைமையில் இயங்குகின்றது.

### வேலையற்ற நேரத்தில் பாதுகாப்பு

வேலை செய்யுமிடத்து விபத்து ஏற்பட்டால் தொழிலாளிக்கு நஷ்டஈடும் விடுமுறையில் நிற்கும் நாள்களில் ஊதியமும் கிடைக்கும். ஆனால், வேலையற்ற இடத்தில் விபத்து ஏற்பட்டால் நஷ்டஈடோ, விடுமுறையோ அல்லது ஊதியமோ கிடைக்காதவிடத்து ஏற்படும் பாதிப்பு அதிகம். இதனை உணர்ந்து வேலையற்ற இடத்தில் நிகழும் விபத்துக்களைத் தவிர்ப்பதற்குரிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இந்த வகையான விபத்தினால் தொழில் அதிபர்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதனால் இத்தகைய விபத்துகளை தடுப்பதற்கு விழிப்புணர்வூட்டும் கருத்தரங்குகள் மூலம் பாதுகாப்பு அறிவினை ஊட்டவேண்டும்.

வேலையற்ற நேரத்திலான பாதுகாப்பு வீட்டில் பாதுகாப்பு, வீதிப்பாதுகாப்பு என இரு வகைப்படும்.

### வீட்டில் பாதுகாப்பு

வீட்டில் அபாயம் கூடிய பகுதி சமையலறையாகும். இங்கு காய்கறிகளை வெட்டுவதற்கு பாதுகாப்பற்ற கூரிய கத்தி பயன்படுத்தப்படுகிறது. பொருள்களைச் சூடாக்குவதற்கு மின் சூடாக்கி, மண்ணெண்ணை அல்லது எரிவாயு அடுப்பு மற்றும் விறகு போன்றவற்றினை உபயோகிக்கின்றோம். மேலும், சூடான பொருள்கள், காரமான பொருள்கள் கையாளப்படுவதும் எரிபொருள், மின்சக்தியினால் இயங்கும் உபகரணங்களைப் பாவிப்பதும் சமையலுக்கு நீர் கையாளப்படுவதும் விபத்துகள் ஏற்படுவதற்குரிய முக்கிய காரணிகளாகும்.

காய்கறிகள் போன்றவற்றினை வெட்டுவதற்குக் கூரிய கத்தியினைப் பாவிக்கும் பொழுது காயம் ஏற்பட சாத்தியமுண்டு. அனுபவ ரீதியாக விரலில் உண்டாகும் வெட்டுக் காயத்தினைத் தவிர்த்துக் கொள்ளலாம். மண்ணெண்ணெய் அடுப்பிற்கு மண்ணெண்ணை பாவித்தல் போதியளவு நிரப்பிய பின்னரே அதனைப் பற்றவைத்துப் பாவித்தல் வேண்டும். பற்ற வைத்த பின்னர் மண்ணெண்ணெய் நிரப்பும் பொழுது நிரம்பி வழியும் சந்தர்ப்பங்களில் வெப்பநிலை மண்ணெண்ணெய் எரிபற்று நிலைக்கு செல்லுமிடத்துத் தீப்பற்றுகின்றது. அவ்வாறான வேளைகளில் அடுப்பு வெடித்துச் சிதறுகின்றது. இச் சந்தர்ப்பங்களினால் யாழ்.குடாநாட்டில் மரண விபத்துகளும் பாரிய எரிகாயங்களும் ஏற்படுகின்றன. இதேபோன்று, எரிபொருளினால் இயங்கும் நீரிறைக்கும் இயந்திரங்களிற்கு அல்லது ஏனைய இயந்திரங்களிற்குப் போதியளவு எரிபொருளினை நிரப்பிய பின்னரே இயக்க வேண்டும். மின்சக்தியினால் இயங்கும் இயந்திரங்களை இயக்கும் பொழுது இறப்பர் விரிப்புகளின் மேல் நிற்கவேண்டும்.

மேலும் சூடான பொருள்களை கையாளும் பொழுது வெப்பம் அரிதிற் கடத்திகளான கடதாசி, துணி போன்றவற்றினைப் பாவித்தல் வேண்டும். வெப்பத்தினால் ஏற்படும் எரிகாயங்களுக்கு [illegible] தேங்காய் எண்ணெய் அல்லது மரக்கறி எண்ணெயை உடனடியாகப் பூசுவதனால் அவற்றினால் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளையும் நோவினையும் குறைத்துக் கொள்ளலாம்.

வெங்காயம், மிளகாய் போன்ற காரத் தன்மையுடைய பொருள்களைக் கையாண்ட பின்னர் நன்றாக நீரில் கழுவவேண்டும். ஆகக் கூடிய அளவு நேரம் நீர் பாவிக்கப்படுமிடத்து உலர்ந்த சருமமுள்ளவர்களின் கையிலுள்ள கொழுப்புப் பாதுகாப்புப்படை நீரினால் அகற்றப்படுவதன் காரணமாக நுண்அங்கிகளால் தோலிற்கும் நகத்திற்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, பாத்திரங்களைச் சுத்தப்படுத்துதல், வீடு கழுவுதல் போன்ற வேலைகளை ஒரே நாளில் செய்யாமல் திட்டமிட்டு வேறு வேறு நாள்களில் செய்வதாலும் நீர் உட்புகவிடாத தைலம் அல்லது கையுறையினைப் பாவிப்பதன் மூலமும் தோலரிப்பினைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அடுத்த அபாயம் கூடிய இடம் குளியலறையாகும். இங்கு வழுக்கி விழக் கூடிய சந்தர்ப்பம் அனேகம் உண்டு. குளியலறையில் பாசி வளர்வதாலும், ஈரப்பற்றினாலும் வழுக்கி விழ நேரிடும். இதனைத் தவிர்ப்பதற்கு அடிக்கடி வெளிற்றும் தூள் பயன்படுத்தி குளியலறை மற்றும் கிணற்றுத் தொட்டியினைக் கழுவ வேண்டும். சறுக்கும் தன்மையற்ற பாதணிகளினை அணிவது சிறந்த செயலாகும். குளியலறைக்கு

## அபாயம் எதுவானாலும் அதனை உபாயத்தால் தடுக்கலாம்

சறுக்கும் தன்மையற்ற நிலம் அமைப்பது சிறந்த செயலாகும். கால் துடைப்பான்கள் அல்லது விரிப்புகள் சேதமுறுவதால் அதில் சிக்குண்டு ஏற்படும் விபத்தினைத் தவிர்ப்பதற்கு சேதமுற்றவற்றினைப் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

மின்சக்தியற்ற வீடுகளில் குப்பி விளக்கினைப் பாவிக்கின்றார்கள். குப்பி விளக்கு உடையக் கூடிய கண்ணாடிப் போத்தலையும் தகர மூடியினையும் கொண்டுள்ளதோடு திறந்த தீச்சுடர் உள்ளதால் அது தவறுதலாக விழும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் தீ விபத்தினால் எமது நாட்டில் நாளொன்றிற்கு ஆகக் குறைந்தது ஒரு மரணம் சம்பவிக்கின்றது என்று புள்ளிவிவர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இத்தகைய விபத்தினைத் தவிர்ப்பதற்கு குப்பி விளக்கிற்குப் பதிலாக அரிக்கன் லாம்பு பாவித்தல் வேண்டும்.

குப்பி விளக்கினை அல்லது அரிக்கன் லாம்பினை ஒரு சிலர் படுத்திருந்து வாசிப்பதற்குப் பாவிக்கின்றார்கள். இவ்வாறு வாசிக்கும் சந்தர்ப்பங்களில் தங்களை அறியாமல் நித்திரைக்குள்ளாகின்றார்கள். இதனால், மரண விபத்து மற்றும் சொத்துகளிற்கு நாசம்,எரிகாயங்கள் போன்றவை ஏற்படுகின்றன. எனவே, இந்தப் பழக்கத்தினை கைவிடுவது சாலச் சிறந்ததாகும்.

மண்டபத்தில் (Hall) இலத்திரனியல் உபகரணங்கள் பாவிக்கப்படுகின்றது. இவை பிளாஸ்ரிக் போன்ற மேலுறைகளினால் மூடப்பட்டுள்ளதால் பாதுகாப்பானது. ஆனால், மின்வழங்கும் பாதுகாப்பான கடத்திகள் நடமாடும் பகுதியில் இல்லாமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
தொலைக்காட்சியினைப் பார்க்கும் பொழுது வெளிச்சமுள்ள சூழலில் இருந்து பார்க்கவேண்டும். அவ்வாறு பார்க்கத் தவறியவர்கள் விலை மதிப்பற்ற கண்பார்வையை இழந்த சம்பவம் பாரினில் உண்டு.

### மின் பாவனையில்

மின்சக்தியினைப் பாவிக்கும் பொழுது மின் கடத்திகளில் தற்காலிக இணைப்பை தவிர்த்தல் வேண்டும். பிளாஸ்ரிக் மேலுறை உடைந்த ஆளியினை நாம் பயன்படுத்தும் பொழுது மின்தாக்கம் ஏற்படச் சந்தர்ப்பமுள்ளது. கடைகளில் உடையாத ஆளிகளை கேட்டுவாங்க வேண்டும். உடைந்த ஆளியினை மாற்றத் தவறினால் மின் அதிர்ச்சியில் பாரிய விளைவு ஏற்பட சந்தர்ப்பமுண்டு.

மின் ஒழுங்கு விதிப்படி ஆளி பிரதான சுற்றில் (Live wire) இணைக்கப்படல் வேண்டும். சில அனுபவமற்ற பணியாளர் மேலதிக சுற்றில் (Neutral wire) இணைப்பதால் ஆளி மின் சுற்றினைத் துண்டித்தாலும் மின் [illegible] பகுதிக்கு மின்சாரம் பாய்வதினால் ஏற்படும் மின் அதிர்ச்சியினைத் தவிர்ப்பதற்கு பிரதான ஆளியினால் மின் சுற்றினைத் துண்டித்த பின்னர் மின்சுற்றில் திருத்த வேலைசெய்தல் வேண்டும்.

எரிபொருள்களாகிய பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும் கிருமி நாசினிகளினை வீடுகளில் சிறுபிள்ளைகள் எடுக்க முடியாதவிடத்திலும் அபாயமில்லாத இடத்திலும் களஞ்சியப்படுத்தல் வேண்டும். பெற்றோலினை மண்ணெண்ணெய் என்று தவறுதலாக விளக்கிற்கு விடும் பொழுது பாரிய மரண விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் யாழ்.குடாநாட்டில் உண்டு. பெற்றோலினை கொள்கலன்களில் வீட்டில் வைத்திருப்பது பெற்றோலிய பாதுகாப்பு சட்டத்தினை மீறும் ஒரு செயலாகும் என்று நம்மவர்கள் உணரவேண்டும்.

கிருமி நாசினிகளினைத் தெளிக்கும் பொழுது காற்றிற்கு எதிர்த்திசையில் இருந்து தெளித்தல் ஆகாது. கிருமிநாசினி தெளித்ததும் அணிந்திருக்கும் உடையினை மாற்றி, நன்கு கழுவிய பின்னரே தேநீர், உணவு, தாம்பூலமாகியவை அருந்தல் வேண்டும். ஒவ்வொரு கிருமிநாசினிக்கும் அதன் விஷத்தினை நீக்கும் மருந்தினை வீட்டில் வைத்திருந்தால் நல்லது. இரு கிருமி நாசினிகளைக் கலந்து விசிறக் கூடாது.

வானொலியினையோ அல்லது தொலைக் காட்சியினையோ அதிக நேரம் தொடர்ந்து கேட்பதை அல்லது பார்ப்பதைத் தவிர்த்தல் வேண்டும். அளவுக்கு மிஞ்சிய சத்தத்தினைக் கேட்கும் பொழுதோ அல்லது மங்கலான வெளிச்சத்தினைப் பார்க்கும் பொழுதோ முதலில் எரிச்சல் போன்ற உணர்வு தென்படும் வேளையில் அதனை எச்சரிக்கையாக எடுத்து அச்சந்தர்ப்பத்தில் சூழலினை மாற்றுவோமேயானால் கண் பார்வைக்கோ அல்லது செவிப்புலனிற்கோ பாதிப்பு ஏற்படாது.

சிறுபிள்ளைகள்,குழந்தைகள் விளையாடும் பொழுது அவர்களினைக் கண்காணிக்க வேண்டும். விளையாட்டின் பொழுது அவர்கள் அபாயநிலை அடைகின்றார்கள் என்று நாம் உணர்ந்தால் அவர்களைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் அநாவசியமான விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

### வீதி விபத்து

வீதிகளில் விபத்துகள் ஏற்படுவதற்குரிய காரணிகளாகப் போக்குவரத்து விதியை அனுசரியாமை, சீரற்ற வீதி, குறைபாடுள்ள வாகனம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

வாகனம் செலுத்தும் பொழுது கண்ணில் தென்படும் சமிக்ஞை மூளையினூடு கால்கள், கைகளிற்கு அசையும் வேகத்திலேயே ஒருவர் வாகனம் பாதுகாப்பாகச் செலுத்தும் வேகம் காரணிகளில் முக்கியமானதாகும்.
மேற்குறிப்பிடப்பட்ட அசையும் வேகமானது ஆளுக்கு ஆள் வேறுபடுவதால் அவரவர்கள் தங்களது சக்திக்கேற்ற வேகத்தில் வாகனத்தை செலுத்தினால் பாதுகாப்பாக அமையும்.

போக்குவரத்து விதிகளை அனுசரித்தால் பெரும்பாலான விபத்துகளினைத் தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் குறைபாடுள்ள வாகனம் உபயோகிப்பதைத் தடுப்பதற்காக வாகனங்கள் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் பரிசீலிக்கப்பட்டு வழங்குவதாலும், தானாக இயங்கும் வாகனங்களைச் செலுத்துபவரினைப் பரிசீலித்து அவற்றிற்குரிய உத்தரவுப் பத்திரத்தினை வழங்கினால் விபத்து நிகழ்வதைத் தடுக்கலாம்.

சீரற்ற வீதியில் வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்லும்பொழுது விபத்துக்குள்ளாவதுடன் வாகனம் பழுதடையவும் நேரிடுகின்றது. பழுதடைந்த வீதியால் பயணிக்கும் பொழுது பாதுகாப்பாகவும் விரைவாகவும் பயணம் செய்யமுடியாமல் உள்ளது. எனவே, வீதிகளினைப் பராமரிப்பவர்கள் ஒழுங்காகவும் முறையாகவும் பராமரிப்பது சாலச் சிறந்தது.

ஒருவர் விபத்துக்குள்ளானால் அவரின் உழைப்பிற்கு பாதிப்பு ஏற்படுவதும் மேலதிகமான செலவு குடும்ப அங்கத்தவர்களிற்கு கஷ்டம் வேதனை என்பவற்றினை அனுபவிக்க வேண்டி நேரிடும். எனவே, விபத்துகள் வருமுன் தடுப்போம்.

**சி.மகேந்திரராஜன்**
*மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனை பொறியியலாளர், வடமாகாணம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றியின் பின்னர் பிரதமர் சந்திரிகா தனது நெருங்கிய ஆதர வாளர்களுக்கு அலரிமாளிகையில் இராப்போசன விருந் தொன்றை வழங்கினார். அதில் கலந்துகொள்ளுமாறு எனக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

அந்த விருந்து வழமையாக நான் வார இறுதியில் வீட்டிற்குச் செல்லும் நாளில் இடம்பெற்றதால் என்னால் அந்த விருந்தில் கலந்துகொள்ளமுடியவில்லை.

ஆதரவாக இருந்தனர். அந்த உதவிக் குப் பதிலாக சந்திரிகா தனது ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குப் பாது காப்பை வழங்கினார் முடிவில் அவர் கள் நாட்டின் இரத்தத்தை மாத்திர மன்றி நாட்டின் சட்ட விதிகளையுமே உறிஞ்சியுள்ளனர்.

இருப்பினும், அரசுப் பயணத்தில்



# சந்திரிகாவின் பாதுகாப்புப் பெட்டகத்தில் கொட்டிக் கிடந்த 'பொக்கட் மனி'

புதிதாக அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர்களும் கலந்து கொண்ட அந்த விருந்தில் ஆதரவாளர்கள் திறந்தவெளியில் குடித்துக் கொண்டாடிக் கொண்டிருந்த வேளை யில், அவர்களுடன் ஒட்டிஉறவாட விரும்பாத பிரபலங்கள் ஒரு சிறு குழுவாக அலரி மாளி கைக்குள் தனியாகக் குடித்து மகிழ்ந்து கொண் டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்திரி காவுடன் மிகவும் நெருங்கிப் பழகிய ஒருவரே இவ்வாறு எனக்குத் தெரிவித்தார்.

அலரி மாளிகைக்குள் குடித்து மகிழ்ந்துகொண் டிருந்தவர்களுடன் பொழுதைப் போக்கிய பின்னரே புதிய பிரதமர் (சந்திரிகா) திறந்தவெ ளியில் கூடி மகிழ்ந்துகொண்டிருந்த ஆதர வாளர்களைச் சந்தித்துள்ளார்.

அலரி மாளிகைக்குள் குடித்து மகிழ்ந்து கொண் டிருந்தவர்கள் பிரதமரின் நெருங்கிய நண்பர் களாவர். அவர்களில் தாரா டி மெல், ரொனி பீரிஸ் ராஜன் பிரிட்டோ, ராஜன் ஆசீர்வாதம், பத்மா மகாராஜா, உதய நாணயக்கார, சந்தன டி சில்வா, குசுமசிறி பாலபட்டபந்தி ஆகி யோர் அடங்குவர். சந்திரிகா அவர்களுடன் மிகவும் மகிழ்ச்சியுடன் உரையாடும்போது ''நாங்கள் எவரும் இவ்வாறான ஒருநிலைமை (வாய்ப்பு) உருவாகும் என எதிர்பார்க்க வில்லை.தற்போது அனைவருக்கும் மகிழ்ச்சி யான எதிர்காலத்திற்கான கதவு திறக்கப் பட்டுள்ளது'' எனத் தெரிவித்தார்.

சந்திரிகாவின் நிர்வாகத்தில் உட்கட்டுமானத் திட்டங்கள் அன்று மேல்மாடியில் கூடிக் குலா வியவர்களாலேயே தயாரிக்கப்பட்டது. (நாட் டின் தலைவியுடன் காதல்கொண்டிருந்த கார ணத்தால் சனத் குணதிலகவுக்கும் அந்தக் குழு

**தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் தன்னை மக்களின் நெருங்கிய நண்பி போன்று காட்டிக்கொள்வதில் சந்திரிகா முழு மூச்சுடன் செயற்பட்டார். சூரியகந்தவில் போய் நின்று புதைகுழி தோண்டினார். கிராமங்களிற்குள் இறங்கி மக்களைச் சந்தித்தார். அவற்றை அடித்தளமாக வைத்துக்கொண்டு சமாதானச் சாயத்தையும் பூசி ஜனாதிபதியானார்.**

**ஆட்சிப்பீடம் ஏறியதும், எல்லா அரசியல்வாதிகள் போன்று சந்திரிகாவும் நடந்துகொண்டார். மக்களை மறந்தார்; தான் ஓர் அரசி போன்று நடந்துகொண் டார். நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என நாட்டு மக்களுக்கு சத்தியம் செய்த அவர், தனது 11 வருட பதவிக் காலத்தில் அந்தக் கதிரை தந்த சொகுசான கதகதப்பை முழுமையாக அனுபவித்தார். தன் வாக்குறு தியை மறந்துவிட்டுப் போகும்போது மற்றொருவரிடம் கையளித்துவிட்டும் போய்விட்டார்.**

**சந்திரிகா ஆட்சியிலிருந்தபோது அவர் பற்றி கதைகளுக்கு எப்படிக் குறை வில்லையோ அதேபோன்று அவர் பதவி விலகிய பின்னும் செய்திகளுக் குக் குறைவில்லை.**

**அந்த வகையில் ஆட்சியிலிருந்த சந்திரிகா பற்றிய தொடர் இது.**

**சந்திரிகா அரசியலுக்குள் மீள நுழைந்தபோது அவருக்கு ஆதரவாக இருந்து, அவரது வெற்றிக்கு வழிவகுத்தவர் விக்டர் ஐவன். பிரபல அரசியல் ஆய்வாளரும், 'ராவய' வார இதழின் ஆசிரியருமான அவர் ஒரு காலத்தில் சந்திரிகாவுக்கு உற்ற நண்பர்.**

**கருத்து முரண்பாடுகளால் பின்னர் சந்திரிகாவிடமிருந்து விலகினார் விக் டர் ஐவன். அவரே இந்தத் தொடரை வரைந்துள்ளார். சந்திரிகாவின் வீரதீரங் கள், துணிவு, பொய், புரளி, பித்தலாட்டம் என்பன பற்றிய பல சுவையான அம்சங்களை அவர் இதில் திரட்டித் தந்துள்ளார்.**

**கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்தத் தொடர் எழுதப்பட்டிருந் தது. அதனை அப்படியே மொழியாக்கம் செய்து இங்கு பிரசுரிக்கின்றோம்.**

1994 தேர்தல் காலத்தின் ஆரம்பத்தில் ஒருநாள் மாலைநேரம் சந்திரிகா என்னைத் தனது இல்லத்திற்கு வருமாறு அழைத்தார். அவரைப் பற்றித் தயாரிக்கப்பட்ட ஒரு விவரணச் சித்தி ரத்தை எனக்குப் போட்டுக்காட்டுவதற்காகவே என்னை அழைத்திருந்தார். அந்த விவரணச் சித்திரத்திற்கு 'வெண்தாமரை' எனப் பெயர் இடப்பட்டது. சனத் குணதிலக அதைத் தயாரித் திருந்தார். அதன் பின்னணி இசையையும் அவ ரே வழங்கியிருந்தார்.

அந்த விவரணப் படத்தைப் போட்டுக்காட்டிய போது சனத் குணதிலக, சத்தி விஜேபுர மற்றும் நவின் குணரத்ன ஆகியோரும் அங்கிருந்தனர். அந்தவிவரணச் சித்திரமானது சந்திரிகாவை முருங்கை மரத்தில் ஏற்றிய விதத்தில் தயாரிக்க ப்பட்டிருந்தது. அதில் சந்திரிகாவை வெண் தாமரைக்கு ஒப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் சித்திரத்திற்கு வெண்தாமரை என ஏன் பெயரிடப்பட்டுள்ளது என நான் சந்திரிகாவி டம் விசாரித்தேன். எனது கேள்விக்குத் திடீரெ னப் பதிலளித்த சந்திரிகா தான் வெண்தாமரை யைப் போல் பரிசுத்தமானவர் என்ற கருத்துப்ப டவே அப்பெயர் சூட்டப்பட்டிருந்ததாகத் தெரி வித்தார்.

மக்களின் தலைவர்/தலைவியின் பரிசுத்தத்தை உறுதிப்படுத்துவது மக்களே தவிர தலைவரோ அன்றித் தலைவியோ அல்ல என நான் குறிப்பிட்டபோது ''ஒருவர் தூய்மையானவராக இருந்தால் அதுபற்றித் தெரிவிக்கும் உரிமை




வுடன் இணைந்திருக்கமுடிந்தாலும் ஜனாதிபதித் தேர்தலை (1994) அடுத்து சந்திரிகா ஹரி ஜயவர்த்தனவை அந்தக் குழுவில் இணைத்துக்கொண்டார்).

வெளித்தோற்றத்தில் பார்க்கும்போது சந்திரிகாவின் நிர்வா கத்தை மேற்கொண்டவர்கள் அலரிமாளிகையின் திறந்தவெளி யில் அந்த விருந்தின்போது குடித்து மகிழ்ந்தவர்களே ஆயி னும், உண்மையில் அவர்கள் நாட்டின் நிர்வாகத்தை மேற் கொள்ளவில்லை. பதிலாக விருந்து நடந்த அன்று அவர்கள் கண்டு கொள்ள முடியாத விதத்தில் அலரிமாளிகைக்குள் வெற்றிப் ப்பானத்தை அருந்தி மகிழ்ந்தவர்களே சந்திரிகாவின் நிர்வா கத்தை மேற்கொண்டனர்.

முற்கூட்டியே பெற்ற அனுமதிகூட இல்லாமல் ஜனாதிபதியின் படுக்கையறைவரை சென்று வரும் உரிமை அவர்களுக்கு இருந் தது. அவர்களில் ஒரு சிலர், சந்திரிகா தனது உயிரைப் பாதுகாப் பதற்காக ஐரோப்பாவுக்குத் தப்பி ஓடியவேளையில் அவருக்கு

சந்திரிகா செப்புக் காசைக் கூடக் கையாடாதவர் எனக் கூறப்படு கிறார். அரச நிதியைக் களவெடுக்காத பரிசுத்தமான தலைவி எனவும் கூறப்படுகிறார்.

பண்டாரநாயக்க குடும்பத்தினர் என்ன தவறை மேற்கொண்டா லும் அவர்கள் ஒருபோதும் களவெடுப்பவர்களல்லர் என்ற கருத்து நாட்டில் நிலவிவருகிறது. இருப்பினும், இவையாவும் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவுக்கு மட்டுமே பொருந் தும். அரசியலில் தொடர்புடைய ஏனையவர்களின் (அக்குடும் பத்தைச் சேர்ந்த) கைகள் கூடியோ குறைந்தோ பரிசுத்தமானவை அல்ல.





பண்டாரநாயக்க குடும்பத்தினர், தேர்தல் நிதியில் செலவுபோக எஞ்சுவதை சாலிமார் என்ற முதலாளியிடம் வட்டிக்குக் கொடுப் பது வழக்கம்.

தேர்தல் நிதியில் செலவுபோக எஞ்சும்தொகை பண்டாரநாயக்க குடும்பத்திற்கு உரியதாகும். சாலிமார் முதலாளியும் நியா யமான வட்டியை அவர்களுக்கு வழங்கிவந்தார்.

சாலிமார் முதலாளி பண்டாரநாயக்க குடும்பத்துடன் நெருங்கிப் பழகிவந்தார். பண்டாரநாயக்க குடும்பத்தினர் உதவி(கடன்) கேட்கும் வேளைகளில் எல்லாம் சாலிமார் பணமாக வழங்கிவந்தார். சந்திரிகாவின் உண்மையான குணவியல்பு களை வெளிப்படுத்தும் விதத்தில் சாலிமாரின் நண்பர்களி டையே பிரபலமான கதை ஒன்று நிலவி வந்தது.

அந்தக் கதையின்படி. ஒருநாள் சந்திரிகா சாலிமார் முதலாளி யைத் தனது வீட்டுக்கு அழைத்திருந்தார். அரசியல் நடவடிக்கைக ளுக்காகத் தனக்கு சுமார் 3 லட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் அந்தத் தொகையைத் தனக்கு இனாமாக வழங்கும்படியும் சாலி மாரிடம் சந்திரிகா கேட்டுள்ளார். அந்தத் தொகையை சாலிமார் சந்திரிகாவுக்கு இனாமாக வழங்கியிருந்தார். ஒருசில மாதங்க ளின் பின்னர் சந்திரிகா சாலிமார் முதலாளியை மீண்டும் தனது வீட்டுக்கு அழைத்தார்.

தன்னிடம் ஒரு தொகைப் பணம் இருப்பதாகவும், அதைப் பெற் றுக்கொண்டு அதற்கான வட்டியை வழங்கும்படியும் தெரிவித் துள்ளார். சந்திரிகா கொடுத்த பணப் பார்சலை வீட்டுக்கு எடுத் துச்சென்ற சாலிமார் அதிர்ச்சியடைந்தார். சில மாதங்களுக்கு முன் னர் தான் இனாமாக சந்திரிகாவுக்குக் கொடுத்தபணமே அதுவா கும்.(அதே பார்சல் அதே நூல்). இந்த விடயத்தை சாலிமார் தனது நண்பர் ஒருவருக்குத் தெரிவிக்கவே அது பற்றிய விவரம் வெளியானது. இனாமாகக் கிடைத்த பணத்தை மீண்டும் வட்டிக் [illegible] சந்திரிகா எனக் கூறப்பட்டது.



அவருக்குஉள்ளது. ஸ்ரீலங்கா என்ற அரசியல் சேற்றில் மலர்ந்துள்ள ஒரேயொரு செந்தாமரை நானே என்று கூறுவதற்கு எனக்கு உரிமை இல்லையா?'' என என்னிடம் வினா எழுப்பினார்.

**தமிழில்: கஜனி**

அதுகுறித்து வாதவிவாதங்களில் ஈடுபடும்தேவை எனக்கு இல்லாவிடினும், அவரது நேர்மை குறித்து எனக்குள் பலத்த சந்தேகம் உருவாக அந்தப் பேச்சுக் காரணமாக அமைந்தது.

அதன்பின்னர் சந்திரிகா தனது பரிசுத்தம் குறித்துப் பலசந்தர்ப்பங்களில் பகிரங்கமாகத் தெரிவித்துவந்தார்.ஒரு செப்புக் காசைக் கூடக் களவெடுக்கவில்லை என அவர் பகிரங்கமாகக் கூட்டத்தில் தெரிவித்தமை பற்றிச் சிறிது காலத்திற்கு முன்பாக சிறுகுறிப்பொன்றை ( VI பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை என்னும் ஏணிப்படிகளை நோக்கி.....

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பலவித உணர்வுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ஒவ்வொருவரின் மன ஓட்டங்களும் சிந்தனைகளும் வேறுபட்டதாகவே இருக்கின்றன. குறிப்பாகப் பெண்களது உணர்வுகள் மென்மையானவை என்றே பலரும் கூறுவார்கள். அந்த மென்மையான உணர்வுகள் ஏனையோரால் மதிக்கப்படாதபோது அவர்களின் மனங்களில் வேதனை குடிகொண்டுவிடுகின்றது. இதன் விளைவாக வாழ்க்கை எனும்போது அது ஒரு கசபான காவியம் என்ற தப்பபிப்பிராயம் அவர்களிடடையே ஏற்பட்டுவிடுகிறது.

நாம் வாழ்க்கையில் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியிலும் மிக விழிப்பாக இருக்கவேண்டும். வாழ்வில் இன்னல்கள் இடையிடையே வந்து போவதனால் சோதனைகள் ஏற்படலாம். ஆனால், அதுவே நிரந்தரமானதல்ல. எப்போதுமே வேதனைப் பள்ளங்களைப் பார்த்துக்கொண்டு புழுங்குவதைவிட புன்னகையோடு நம்பிக்கைப் படிகளில் ஏற முயற்சி செய்யுங்கள். வாழ்வை நம்பிக்கையோடு தைரியமாக எதிர்நோக்குங்கள். உங்கள் எண்ணங்கள் தளர்வில்லாத உறுதியானவையாய் இருக்கட்டும். தீர்மானங்கள் இரும்பாய் இருக்கட்டும். ஒவ்வொரு செயற்பாடும் சீராயிருக்கட்டும். எதையும் நன்றாக சிந்தித்து முடிவு செய்துவிட்டால் அதை மாற்றாது போராடுங்கள். அப்போதுதான் நீங்கள் சாதிக்கலாம். பெண்ணே நீ நிற்பதற்கு உன் கால்களை மட்டுமே நம்பு. எல்லா விளக்குகளும் அணைந்து போனாலும் நிலவு நிச்சயம் இருக்கும். நிமிர்ந்து பார். எந்நேரமும் உங்களை நம்புங்கள். விரைவில் ஜெயித்துவிடுவீர்கள்.

நிலாரஞ்சன்.

# தளராது முன்னேறும் அமெரிக்காவின் வின்பிரே!



அமெரிக்காவில் ஒப்ரா வின்பிரேவைத் தெரியாதவர்கள் அரிதாகத்தான் இருப்பார்கள். தான் நடத்தும் அதிரடியான 'டாக்ஷோ'க்கள் மூலம் அமெரிக்காவையும் தாண்டி உலகம் எங்கும் புகழ் பெற்றிருக்கும் வின்பிரே மிசிசிபி பகுதியில் மிகவும் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்து இன்று சுமார் ரூ. 6500 கோடிக்குச் சொந்தக்காரராக இருக்கிறார்.

ஊடக உலகில் மிகவும் சக்தி வாய்ந்தவராக விளங்கும் வின்பிரே பரபரப்பான தொழிலதிபராக இருக்கும் அதேவேளையில், தான் நடத்தும் 'டாக்ஷோ'வில் நாளுக்கு நாள் சுவாரஸ்யத்தை கூட்டி உலகெங்கும் தனக்கென்று தனி ரசிகர் கூட்டத்தை வைத்திருக்கிறார்.

இவர் நடத்தும் 'டாக்ஷோ'வில் பங்கேற்க உலக பிரபலங்கள் போட்டி போடுகின்றர்கள். பிரபல ஹாலிவுட் நடிகர் பில்கோஸ்பி, நடிகை ஜூலியா ராபர்ட்ஸ் என்று இவருக்கு நெருக்கமான பிரமுகர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

இவரின் இனிமையான குரலும், ஆங்கில உச்சரிப்பும் ரசிகர்களிடையே மிகவும் பிரபலம்.

''பணமோ அல்லது புகழோ இல்லாதவரை யாரும் திரும்பிக்கூடப் பார்க்காத ஒரு சமுதாயத்தில் வாழ்கிறோம். எனவே இந்த உலகில் நம்மை திரும்பி பார்க்கச் செய்யும்வகையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்கிற வெறி ஏற்பட்டது. பிரபலங்கள் ஒவ்வொருவரும் தனக்குக் கிடைத்திருக்கிற பணம், புகழை அர்த்தமுள்ள காரியங்கள் செய்வதற்குப் பயன்படுத்த வேண்டும்.

என் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியவர் நடிகர்



பில்காஸ்பிதான். கறுப்பு இனத்திலிருந்து முதல் முதலாக பெரிய அளவில் பணத்தையும், புகழையும் வாரிக்குவித்தவர் அவர்தான். அவர்தான் எனக்கு ரோல்மாடல். அவர் நான் கஷ்டப்பட்ட காலங்களில் நிறைய அறிவுரைகளை, உதவிகளை வழங்கி என் முன்னேற்றத்திற்கு வழிவகுத்திருக்கிறார். இப்போது என்னிடம் பல ஆயிரம் கோடி இருந்தாலும் இப்போது கூட வீட்டின் தொலைபேசி பில் எவ்வளவு? எலக்ட்ரிசிட்டி பில் எவ்வளவு என்று தெரிந்து வைத்துக்கொள்கிறேன்.

பணம் தாராளமாக இருக்கிறது என்பதற்காக எதிலும் கணக்கில்லாமல் தாறுமாறாக செலவழிக்கக்கூடாது. எந்த செயலையும் இதயப் பூர்வமாகச் செய்து வாழ்க்கையில் வெற்றியடைந்த சாதனைப் பெண்களையே என் வழிகாட்டிகளாக நினைத்து ''செயல்பட்டு வருகிறேன்'' என்கிறார் ஒப்ரா வின்பிரே!

## பெண்களைப் பற்றி...

* பெண்ணினத்தைக் காலடியில் வைப்பது மடமை. தலையில் வைப்பது தீமை. சமமாய் மதிப்பது கடமை.
* நாணம் இல்லாத பெண், பால் இல்லாத பசுவுக்குச் சமம்.
* ஒரு பெண் அழகாக இருக்கிறாள் என்பதற்காக மட்டும் அவளைத் திருமணம் செய்து கொள்வது வர்ணம் நன்றாக இருக்கின்றது என்பதற்காக வீட்டை விலைக்கு வாங்குவதற்கு சமம்.
* பெண்ணின் கண்ணீரும். புன் சிரிப்பும் ஆணின் மகத்தான இதயக் கோட்டையை தகர்த்தெறியும் பெரும் குண்டுகள்.
* கவிஞன் பெண்ணை எதற்காக நிலவுடன் ஒப்பிட்டான் தெரியுமா? நிலவில் காணும் உருவத்தை எப்படித்தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியவில்லையோ. அதே போல்தான் பெண்ணின் மனமும் என்பதை தெளிவாக அறிவுறுத்தவே.
* ஒரு குடும்பப் பெண் என்பவள் தன்குடும்பத்திற்கு அடிமையாக வும் தன் கணவனுக்கு அரசியாகவும் இருக்க வேண்டும்.
* பெண்ணிலேயே தொடங்கி பெண்ணாலேயே வளர்வதுதான் பெண்மை.
* ஒரு பெண் எவ்வளவு பட்டம் வேணுமானால் வாங்கலாம். ஆனால் கற்பு என்ற பட்டத்தைப் பெறுவதே பெண்ணினத் திற்குப் பெருமை தரும்.
* இயற்கை பெண்ணுக்கு பல நரகங்களைக் கொடுத்திருந்தாலும் தாய்மை என்னும் தெய்வீகத் தன்மையையும் கொடுத்திருக்கின் றது.
* கன்னியாக இருந்தபோது அரும்பாக இருந்தவள் காதலியான தும் மொட்டாகின்றாள். பின் அவளே மனைவியானதும் மலராகி. தாயாகி மணம் பரப்புகின்றாள்.

ஆமாம்! பெண்ணே என்றும் மாறுபட்ட ஒரு பெண்தான்.

ஜெனோஷா பஞ்சலிங்கம்,
கொற்றாவத்தை,




சுடுநெருப்பும் சூரியப் பிளம்பும்
சுடுமென தாமிருப்பார்..!
விடு மூச்சும் வேதனையொலியும்
வீணரை எரித்தழிக்கும்

கரும்பெனவே கன்னியர் தம்மை..
கசக்கிடத்தான் முனைவர்... - அவர்
இருப்பை கசக்கி கண்ணைப்
பிடுங்கி
இரையாய் நாயுண்ணும்

பாவையர் என்றே
பார்வையற்றோராய்..
பார்த்திடில் பாதகரே..!
பாதையில் பாடை கட்டியும் வருமே
பாதைகள் தாம்... கவனம்!

அச்சம் மடமும் நாணமொடு
பயிர்ப்பும்
அரிவையர் அருங்குணமே... அவர்
அரண்டே எழுந்திடில் ... அரியும்
அரிவாள் தினந்தினமொரு "தலையே"

பெண்களென்றிடில் .. பேயுமிரங்கும்
பெரியோர் முதுமொழியாம்..!
பேய்கள் இனிமேல் பெண்களாகும்
அறிவாய்... அறி... "விடமே"

எங்கள் கைகள் பூக்கள் பறிக்கும்
எமக்குள் நாமிருந்தால்...
எங்கள் கைகள் எமர்களாகும்
எழு.. "தீ" தான் படர்ந்தால்

உணவு சமைப்போம் உணர்வு
சமைப்போம்!
உறவுயிர் நாம் பெண்கள்!
உண்டுபோட கயவர் வந்தால்
எரித்திடும் எம் கண்கள்!

மாண்டுபோனார் மீண்டு வருவார்
மறத்தின் வலி காண்பாய்...!
தீண்டுவாயோ தீயின் பெண்கள்
திறத்தை இனிக் காண்பாய்

- பூங்கோதை

## பெண்களுக்கான வீட்டுக் குறிப்புகள்



* கரட், பீட்ரூட் வாடிப்போனால் அதை வெட்ட முடியாது. அதை உப்பு கலந்த நீரில் அரைமணி நேரம் போட்டு வைத்தால் புத்தம் புதிது போல் ஆகிவிடும். வெட்டக் கூட எளிதாகி விடும்.
* தக்காளி சூப் கெட்டியாக வருவதற்கு தக்காளிப் பழங்களுடன் பூசணிக்காயையும் அரிந்து போட்டு வேகவிட்டால் சுவை அதிகரிக்கும்.
* குளிர்சாதனப்பெட்டிக்குள் இருந்த காய்கறிகளை சுத்தமான நீரில் கழுவி விட்டுத்தான் சமைக்க வேண்டும்.
* வெந்நீரில் சில துளி எலுமிச்சம் சாற்றையும் சில துளி டெட்டோலையும் கலந்து கட்டில், நாற்காலிகளுக்கு ஊற்ற அதிலுள்ள மூட்டைப் பூச்சிகள் ஒழியும்.
* வாரம் ஒரு முறை கராம்பை குழந்தைகளுக்கு அவித்துக் கொடுங்கள். இது அதிகளவு சத்துள்ளது. உற்சாகம் தரும். நமைச்சலை அகற்றும். அஜீரணத்தைச் சீராக்கும்.

ஜீ.ஜீவனா

திசையற்ற கப்பல் போல்
தத்தளித்த என் மனதுக்கு
திசை காட்டியாய் வழிகாட்டியவள் - நீ
மூடிப்போயிருந்த என் அகக்கண்ணை
றோஜாபோல் மலர வைத்தவள் - நீ
நிலாவொளியில் பாற்சோறு ஊட்டி - என்
பாட்டியின் நினைவை மீட்பவள் - நீ
இதயச் சோகங்களை நீக்கி - ஆறுதல் மொழி
பகரும் ஆனந்தப் பூங்கொடி - நீ
என்முகத்தை எனக்குக் காட்டி உன்னில் - என்னை
பார்க்க வைத்த புத்தம் புது நந்தவனப் பூ - நீ
இளவேனில் காலத்தைத் தந்து - என்னை
புனிதனாய் கரைசேர நதியானவள் - நீயல்லவா....

ஜெயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வைக் கழிக்க உகந்தது நூலகம்

கதைப் புத்தகம் படிப்பதென்றால், பெரும்பாலும் எல்லோருக் கும் விருப்பம் அதிலும் சிறுவர்களுக்கு படங்களுடன் கூடிய கதை களைப் படிப்பதென்றால் அலாதிப் பிரியம்.

சிறுவர்களும் பெரியவர்களும் படிப்பதற்கேற்ற நூல்களையும் சஞ்சிகைகளையும் சேகரித்து வைத்திருக்கும் இடம் நூலகம் ஆகும்.



படிக்க விரும்பும் நூல்களை எல்லாம் எவராலும் விலைக்கு வாங்க முடியாது. அத்தகையோருக்கு நூலகம் பெரிதும் உதவி செய்கிறது. இவர்கள் நூலகத்துக்குச்சென்று நூல்களைப் படிக்கலாம். அல்லது நூலகத்தில் உறுப்பினராகி நூல்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்கலாம். நூலகங்களில் உறுப்பினராவதற்கு சிறு கட்டணம் செலுத்தவேண்டும்.

பாடசாலைகளில் உள்ள நூலகங்களில் அங்கு கற்கும் மாண வர்கள் மட்டுமே நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

சில நகரங்களில் சிறுவர்களுக்குத் தனியான நூலகங்கள் உள்ளன. சிறுவர்களுக்கென்றே பல துறைகளில் எழுதப்பட்ட நூல்கள் இங்கு சேமிக்கப்பட்டு இருக்கும். சில வணிகநிலை யங்கள், பத்திரிகை நிறுவனங்கள், என்பவற்றிலும் தனியான நூலகங்கள் உண்டு.

உலகிலுள்ள பெரிய நூலகங்களில், அச்சிட்ட நூல்களை மட்டுமன்றி பழைய கையெழுத்து ஏட்டுச் சுவடிகளையும் சேகரித்துப் பயன்படுத்தி வருகிறார்கள். இவை வரலாற்றாசிரி யர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் மிகவும் பயன்படுகின்றன.

கிறிஸ்துக்கு முன் 2ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்பே நூலகங் கள் இருந்ததற்குச் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பாபிலோனியாவில் 20ஆயிரம் களிமண் பலகைகள் [Clay Tablets] ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்டன. இவை கி.மு 2ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவை. இந்தக் களி மண் பலகைகளில் பொறிக்கப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு நூலகத்தில் சேமித்துவைத்து பயன்படுத்தி இருக்க லாம் எனக்கருதப்படுகிறது. இதுவே முதன் முதல் பயன்படுத் தப்பட்ட நூலகம் என்பது ஆய்வாளர்களின் கருத்து.

பண்டைய எகிப்தியர்கள் 'பைரஸ்' என்னும் நாணல் புல் தாளில் நூல்களை எழுதி சுருள்களாக சுற்றிவைத்திருந்தனர். இத்தகைய நூல் சுருள்களில் ஏழு லட்சம் பிரதிகள் கொண்ட மிகப் பெரிய நூலகம் ஒன்று கிறிஸ்துக்கு முன் 300ஆம் ஆண் டளவில் அலெக்சாந்திரியாவில் இருந்தது.

இந்தியாவை முன்பு ஆட்சிசெய்த அரசர்கள் நூலகங்களில் தங்கள் நூல்களைச் சேர்த்து வைத்திருந்தனர்.

ஈழத்தில் தமிழ் அரசர்கள் ஆட்சி செய்தபோது, இங்கும் பல துறைசார்ந்த நூல்களைக்கொண்ட நூலகம் இருந்ததாகக் கூறப் படுகின்றது. பின்னர் காலமாற்றத்தாலும், இடம்பெயர்வு, அந்நியர் வருகை என்பவற்றாலும் நூல்கள் அழிவடைந்தன.

பின்னர் தோன்றிய அறிஞர்களாலும், ஆய்வாளர்களாலும் இலக்கிய கர்த்தாக்களாலும் பெருமளவு நூல்கள் எழுதப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கு பெருமை சேர்க்கும் வகையில் பொது நூலகம் ஒன்று 80 களுக்கு முன்னர் இருந்தது. இங்கு பெரு மளவு துறைசார்ந்த நூல்கள் சேமிக்கப்பட்டிருந்தன. யாழ்ப் பாணக் கல்விப்பாரம்பரியத்துக்கு இந்நூல் பெரிதும் வழிகாட்டி யது எனலாம். பின்னர் 1981இல் ஏற்பட்ட இனக்கலைவரம் காரணமாக நூலகம் முற்றாக எரிக்கப்பட்டது. அறிவு நூல்களும் எரிந்து நாசமாகின. தற்போது இந்நூலகம் புனரமைக்கப்பட்டு




நகரின் மத்தியில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

கிராமங்கள் நகரங்களிலும் நூலகங்களின் அவசியம் உணரப் பட்டன. அதனையடுத்து நூலகங்கள் உருவாக்கப்பட்டன.

நூலகங்கள் ஓர் அறிவுக் களஞ்சியம் ஓய்வுநேரத்தில் நூல கத்துக்கு சென்று பல்வேறு நூல்களை படித்து அறிவை வளர்த்துக் கொள்வோம்.

*– கவிதா*

## சிந்தனைக்குச் சில

- இன்சொல் பேசுபவன் மறந்தும் வன்சொல் பேசுவது தவறு.
- கெட்ட செயலுக்காக ஆயிரக்கணக்கில் நாள்களை வீண டிப்பதிலும்பார்க்க நல்ல செயலுக்காக ஒரு நிமிடத்தையா யினும் செலவழிப்பது மேன்மை.
- மற்றவரை நீ அவமானப்படுத்தினால் நீயும் தலைகுனிய வேண்டிவரும்.
- நானே பெரியவன்; நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- சிக்கனமாக இரு. ஆனால் கருமியாக இருக்காதே.
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- அர்த்தமில்லாமலும், தேவை இல்லாமலும் பின்விளைவு களை அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை நிறுத்துங்கள்.

**து.விதுஷன், தரம் - 7B**
புனித பத்திரிசியர் கல்லூரி.

## பழமொழிகள்

★ அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமும்.
(உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல்)

★ அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
(உத்தம நட்பு)

★ ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை
(அற்பனுக்கு மதிப்பு)

★ ஆட மாட்டாதவள் அரங்கு பிழை யென்றாளாம்
(விடயப் புலமையின்றி வேறொன்றைக் குறை கூறாதே)

★ இட்டுக் கெட்டார் எங்கு மில்லை.
(தருமம் செய்)

★ ஈட்டி எட்டின மட்டும் பாயும். பணம் பாதளம் மட்டும் பாயும்
(பணத்தின் வலிமை)

★ உயர உயரப் பறந்தாலும். ஊர்குருவி பருந்தாகுமா?
(தகுதிக்கு மேல் எண்ணாதே)

★ ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
(ஒற்றுமையின்மை)

★ ஊசி போகுமிடம் பார்பார் உலக்கை போகுமிடம் பரார்.
(சிறு விடயங்களில் கவனமும் பெரிய விடயங்களில் கவனயீனமும்)

பு. கஜரூபன், தரம் - 10ஏ,
கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

## தவறு செய்தால்.......

காந்தனும் சீலனும் ஒரு தெருவில் வசிப்பவர்கள். ஒன்றாக ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பில் கற்பவர்கள்.

சீலன் குறும்புக்காரன். எந்நேரமும் எதையாவது செய்து கொண்டு இருப்பான். அடுத்தவருக்கு ஏற்படும் தீமைகள் பற்றிச் சிறிதும் சிந் திப்பதில்லை.

காந்தன் ஒழுக்கமுள்ளவன். எதைச் செய்தாலும் சிரத்தையுடனும் கவனத்துடனும் செய்து அனைவரினதும் பாராட்டைப் பெற்றுவிடு வான்.

இதனால் சீலனுக்கு காந்தன் மேல் கோபம். எப்படியாவது காந்த னுக்கு கெட்ட பெயர் வேண்டிக் கொடுக்க வேண்டும் என்பதில் குறி யாய் இருந்தான்.

வழமை போன்று ஆண்டிறுதிப் பரீட்சை வந்தது. காந்தன் பரீட்சை தொடங்குவதற்கு ஒருமணி நேரம் முன்னதாக பாடசாலை சென்றான். பரீட்சை எழுதுவதற்கு தேவையான பேனை, பென்சில் என்பவற்றை தனக்குரிய மேசையில் வைத்துவிட்டு, பக்கத்து வகுப்பறைக்குச் சென்றான். பரீட்சைக்கு தேவையான பாடக்குறிப்புகளை மீண்டும் நினைவுபடுத்தினான்.

காந்தன் பாடசாலைக்கு வந்ததைக் கண்டு, சீலனும் அவசர அவசரமாகப் பாடசாலைக்கு வந்தான்.

'இண்டைக்கு பரீட்சை மண்டத்தில் என்ன செய்தாவது காந்த னுக்கு ஆசிரியரிடம் ஏச்சு வாங்கிக் கொடுக்கவேண்டும்' என்று எண் ணியவாறு பரீட்சை மண்டபத்தை எட்டிப்பார்த்தான்.

காந்தனைக் காணவில்லை. மேசையில் பரீட்சை எழுதுவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த 'இங்' பேனையைக் கண்டான். ''பேனை யில் உள்ள மையைக் கொட்டிவிட்டால்... எப்படிப் பரீட்சை எழுத முடியும். ஆசிரியர் எப்படியாவது காந்தனை ஏசுவார்''. என்று சிந்தித்த சீலன் அதனைச் செயலிலும் செய்தான்.

பரீட்சை நேரம் வந்து பரீட்சை வினாத்தாளும் கொடுக்கப்பட் டது. மாணவர்கள் எழுத ஆயத்தமானார்கள்.

சீலன், காந்தனுக்கு எப்படியாவது ஏச்சு வேண்டிக் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையில் பரீட்சை எழுதும் பேனாவை விட்டு விட்டு வந்துவிட்டான்.

சீலன் மட்டும் முழித்துக்கொண்டு இருப்பதைக் கண்ட ஆசிரியர் 'என்ன சீலா இன்னும் எழுத ஆரம்பிக்கவில்லையா? ' எனக் கேட் டார்.

'இல்ல பேனையை விட்டிட்டு வந்திட் டன் ' என்ற சீலனை 'கொஞ்சம் கூட பொறுப்பு இல்லையா? ' எனத் திட்டினார் ஆசிரியர்.

இதனைக்கேட்ட காந்தன் ' என்னிடம் இன்னுமொரு பேனை இருக்குது. இதைக் கொடுங்கள்.' என்று மேசையிலிருந்த தன் பேனையைக் கொடுத்தான்.

பேனையை வேண்டிய சீலனுக்கு சுள்ளென் றது. எழுதக்கூடாது என்று மை கொட்டிய அந்தப் பேனையே அவனிடம் வந்திருந்தது.

தான் செய்த வேலையே தனக்கு எதிராகி விட்டதை உணர்ந்த சீலன், அன்றிலிருந்து எவருக்கும் தீங்கு செய்வதில்லை என முடி வெடுத்தான்.



**– அப்பம்மா**

## உங்களின் கைவண்ணங்கள்



ந.அபிராமி
தரம் 3பி,
யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை



சி.ஆதிமாறன்,
தரம் 10,
யா/சென். ஜோன்ஸ் கல்லூரி.



சி.கிசோதி
தரம் 7எப்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.



தாமோதரக் குருக்கள் மகோதரன்,
தரம் 9டி,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## சீறிய அலை


ஒன்றாக உட்கார்ந்து
ஊர்வம்பு பேசி
சிரித்து மகிழ்ந்த
என் வீட்டுத்திண்ணை
இரண்டொரு நாள் எரிந்து
பூனையின் படுக்கையாகிப்போன
சமையல் கட்டு
அண்ணார்ந்தால்
இரவில் நட்சத்திரங்கள்
ஒவ்வொன்றாய் விளங்கும்
கறையான் வாழும் சுவரை
வறண்ட நிலம் போல தரை

இப்படி இருந்த
என் வீடு எனக்கு
சுவர்க்கமாய் இருந்தது
டிசெம்பர் 26இல்
சினம் கொண்ட
கடலலை சீறி வந்தது
கடைத் தெருவில் போன
என்னைத் தவிர
எல்லோருமே – ஏன்
என் அந்த வீடும் சேர்ந்து
காணாமல் போனது
கடல் வயிற்றில்
எல்லாம் இழந்து
ஆண்டொன்றும்
மறைந்து விட்டது.

**ஸ்ரீ.தர்ஸ்சிகா**
தரம் - 8 B
யா /தெல்லிப்பழை யூனியன்,
கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி வாழ்ந்து காட்டிய 'சுயராச்சியம்'....!



**மகாத்மா காந்தியடிகளின் 58 ஆவது நினைவு தினம் நாளை 30 ஆம் திகதியாகும். அதனை யொட்டி இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.**

அஹிம்சை என்ற ஒப்பற்ற ஆயுதத்தின் மூலம் தேசத்திற்கு விடுதலை பெற்றுத் தந்த சுதந்திரப் போராட்ட வீரர் மகாத்மா காந்தி, எனது வாழ்க்கையே எனது செய்தி என்பது அவரது கோட்பாடாகும். தனது போதனைகளுக்கு தனது வாழ்க்கை முறைமூலம் செயல்வடிவம் கொடுத்தவர் அவர். வசதி வாய்ப்புகள் இருந்தும் எளிய வாழ்வை மகாத்மா மேற்கொண்டு வந்தமை என்பது அவரின் 'சர்வோதயம்' (அனைவரின் மேம்பாடு) என்ற கொள்கை சார்ந்ததாகும்.

குஜராத் மாநிலம் போர்பந்தர் என்ற ஊரில் 1869 ஆம் ஆண்டு உலகிற்கு பேரொளியாக மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அவதரித்தார். நிறவெறி எதிர்ப்போடும், தீண்டாமை அகற்றலோடும் ஆரம்பித்த அவரது போராட்டம் பின்னர் சுதந்திர இந்தியாவுக்கான போராட்டமாக விரிவடைந்தது. சர்வ வல்லமை பெற்ற ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மாபெரும் போராட்டங்களை நடத்துவதற்கு அவர் கையிலெடுத்த ஆயுதங்கள் - அஹிம்சை, சத்தியாக்கிரகம் என்ற இரண்டுமேயாகும்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் 1951 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'காந்தீய நோக்கு' என்ற நூலின் ஆசிரியர் புலவர் நா.சிவபாதசுந்தரன் ஓரிடத்தில் அடிகளார் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''காந்தியடிகள், உலக விஞ்ஞானிகளில் தலைசிறந்தவர், வேறுபட்டவர். தனக்கெனத் தனியிடம் தானே தேடி அமைத்தவர். மற்ற விஞ்ஞானிகள் உலகில்உள்ள பொருள்களில் ஒரு பொருளை எடுத்து, அதில் ஒரு பகுதியின் அசைவை - தன்மையை ஆராய்ந்தார்கள். ஆனால், நம் அடிகளார் உலகம் என்னும் பெரும்பொருளை எடுத்து ஆராய்ந்தவர். என்னே! அவரின் திறன், செயற்கரிய செய்கை இதனாலன்றோ 'மகாத்மா' என்ற பெயரைப் பெற்றார். இத்தகு பெயரையோ இதுபோன்ற பெயர்களையோ ஒரு விஞ்ஞானியும் பெறவில்லை. இன்னும் காந்தியடிகள் தாம் நோக்கும் நோக்கை முதல் தம்மீது செலுத்தியபின்பே பிறரிடம் - செலுத்தாமல், திணிக்காமல் - அந்நோக்கை - ஆராயக் கொடுக்கிறார். சிந்தனைக்கு விருந்தளிக்கின்றார். இதுவே அவருக்கு தனியிடமும் தனிப்பெயரும் அளித்தது''.

காந்தியடிகள் சமயம், சமூகம், அரசியல், பொருளியல் என்பன பற்றித் தெளிவான விளக்கங்களைக் கொண்டிருந்தமை அவரின் உரைகள் வாயிலாகத் தெளிவாகின்றது.

இன்று இயங்கும் பொருளியல், தனியுடைமையைத் தகர்த்துப் பொதுவுடைமையைப் புகுத்துவதாகவும் பொதுவுடைமையைப் புதைத்துத் தனியுடைமையைத் தழுவுவதாகவும் இருக்கின்றது.

காந்தியப் பொருளியல் இரண்டையுங் கலவாது இரண்டிற்கும் பொதுப்பட்டதாய், தனியுடைமையையும் பொதுவுடைமையையும் தழுவிச் செல்கின்றது. அதாவது, பொருளியற் பயனையும் அறநெறி சமூக நெறிப் பயனையும் வேறு பிரித்துப் பார்க்காது ஒன்றுபடுத்திப் பார்க்கின்றது.

காந்தியடிகளின் இராச்சியத்தை 'சுயராச்சியம்' என்பார்கள். ''மக்கள் தங்களைத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள்வார்களாக. ஆட்சி முறையின் (தீயதில்) தலைமையில் அவர்கள் கலந்துகொள்ளாதிருப்பார்களாக; அங்ஙனச் செய்யின் (தீய) ஆட்சி தானே மறையும்'', ''எது மருந்து? (அரசியல்) சீர்திருத்தமா? தன்னைத் தூய்மைப்படுத்துதலா? ஒருவன் தன்னைத் தூய்மைப்படுத்த (தீய) ஆட்சி முறையினின்றுந் தன்னை விடுவித்துக் கொள்வது ஒத்துழையாமையும் பெருங்கொள்கை.' என்கின்ற அவரின் உரைகள் கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்துதல், அவ்வாட்சியில் கலந்துகொள்ளாது விடுதல் என்பவற்றை வலியுறுத்துகின்றன.

''சத்தியத்தைக் காண்பது முடியாமலிருக்கிறது என்று குறைகூறுவதேன்? காதலி, காதலனிருக்கும் இடத்திலிருந்து ஆயிரக் கணக்கான மைல் தூரத்திலிருக்கலாம். ஆனால், பிரம்மமோ உள்ளத்திலேயே வதிகிறது. நகத்திற்கும் விரலுக்கும் எவ்வளவு இடைவெளியுள்ளதோ அவ்வளவு கூடப் பிரம்மத்திற்கும் நமக்குமில்லை. ஆனால், இடையன் தோளில் ஆடு இருப்பதை அறியாமல் ஊரெல்லாந் தேடித் திரியுங்கதையைப் போலிருந்தால் என்ன செய்வது?'' என்று கேட்கிறார் அடிகள். அவர் கணித்த சமூகம்' 'பரமாத்திக சமூகம்' எனப் பெயர்பெறும். அதன் அர்த்தம், கடவுள் வழியை நோக்கிக் காதல்கொண்டு செல்லும் சமூகம் என்பதாகும்.

''நாம் அனைவரும் ஒரே பரமபிதாவின் பிள்ளைகள். அப்பிதாவை இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் முதலியோர் வெவ்வேறு பெயரால் போற்றுகிறார்கள்''.

''கடவுள் என்பது சத்தியம். அதை எனக்குக் காட்டும் ஒளி அஹிம்சை. அச்சத்தியத்தில் ஒரு பகுதி, யான் குறிக்கும் சுயராச்சியம்'' என்பதே அவரின் சமயக் கொள்கையாகும்.

இவ்வாறு உலக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த மிகப்பெரிய மகானான காந்தி 1948 ஜனவரி 30 இல் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தாலும், அவரின் கருத்துகள் இன்னும் பல கோடி வருடங்களுக்கு நின்று நிலைக்கக் கூடியன.

**தொகுப்பு:எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி.**

# சந்திரிகாவின் பாதுகாப்புப்....

( III பக்கத் தொடர்ச்சி)

நான் எழுதநேர்ந்தது. அந்தக் குறிப்பில் ஜனாதிபதிகள் ஒருபோதும் செப்புக் காசைக் களவெடுப்பதில்லை எனவும் அவர்கள் பொதுவாக கோடிக்கணக்கில் களவெடுப்பர் எனவும் குறிப்பிட்டிருந்தேன்.

எனக்குத் தெரியும் விதத்தில் மக்கள் சொத்தை மோசடிசெய்த சம்பவங்களிலும் சந்திரிகாவுக்குத் தொடர்புகள் உள்ளன. அவரது நிர்வாகம் மிகவும் பரிசுத்தமானது என்ற தோற்றத்தை அளித்தபோதிலும் நாட்டில் இடம்பெற்ற அனைத்துப் பெரிய நடவடிக்கைகளிலும் (கொடுக்கல் வாங்கல்களிலும்) அவருக்குத் தொடர்புகள் இருந்தன. அவர் அதிக அளவில் செல்வத்தைச் சம்பாதித்ததுடன் தனக்கு மிக நெருங்கியவர்களும் உச்ச அளவில் செல்வத்தைச் சம்பாதிக்க இடமளித்தார்.

அவர் ''சவுத்யோர்க்''(South York) என்ற இடத்தில் (இங்கிலாந்தில்) அமைந்துள்ள அன்று இளவரசரின் மாளிகையை ஒரு கோடி பவுண்களுக்கு கொள்வனவு செய்துள்ளார் என வெளிவந்துள்ள கதை புதுமையான ஒன்றல்ல.

அனுருத்த ரத்வத்த மற்றும் சந்திரிகா ஆகியோரின் வங்கிப் பாதுகாப்புப் பெட்டகங்களில் (Safe) இருந்த சொத்துகளின் பெறுமதியைக் கண்டறியக் கிடைத்த அரியவாய்ப்பு ரணில் விக்கிரமசிங்கவின் கருணையினால் மக்களுக்குக் கிட்டாது போயிற்று. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த வேளையில் வங்கிகளிலுள்ள பாதுகாப்புப் பெட்டகங்களில் பெருமளவிலான பணத்தை வைத்துள்ள முக்கிய அரசியல் புள்ளிகளின் விவரங்கள் அவருக்குக் கிடைத்தன.

அந்தத் தகவல்களை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கிய அந்த நபரை நான் சந்திக்கவில்லை. ஆனாலும், அந்த நபர் என்ன காரணத்தாலோ என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார். ஏற்கனவே அவர் யார் என்பதை நான் அறிந்திருந்தேன்.

தகவல்களைத் தான் வழங்கினார் என்பதால் தனக்குப் பிரச்சினை உருவாகநேரிடக்கூடும் என்ற அச்சம் அவருக்கு இருந்தது. எனவே என்னைச் சாட்சியாகக் கொள்வது பொருத்தமானது என அவர் நினைத்ததாலோ என்னவோ என்னுடன் தொலைபேசியில் கதைத்தார்.

பாதுகாப்புப் பெட்டகங்களில் பெருமளவு பணத்தை வைத்துள்ள அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த 12 நபர்கள் பற்றிய விவரங்கள் தனக்குத் தெரியும் என அவர் எனக்குத் தெரிவித்தார். அந்தப் பாதுகாப்புப் பெட்டகங்களில் வைக்கப் பட்டுள்ள பணம் சம்பந்தப்பட்டவர்களின் முழுச்சொத்தாக இருக்காது எனவும் தாங்கள் ஸ்ரீலங்காவில் மேற்கொள்ளும் செலவுகளுக்காக வைத்துள்ள 'பொக்கட் மணி'யாகவே அது இருக்கும் எனவும் அந்தப் பணமே இவ்வளவு பெருந் தொகையாக இருக்கும்போது அவர்கள் தவறான வழியில் சேர்த்த சொத்துகளின் பெறுமதியை ஊகித்து அறியலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

தான் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு நபரின் பாதுகாப்புப் பெட்டகம் குறித்த விவரங்களைப் பிரதமர் (முன்னாள்) விக்கிரமசிங்கவிடம் வழங்கியுள்ளார் எனவும் அந்த 12 நபர்கள் தொடர்பான விவரங்களைத் தான் எதுவித எதிர்பார்ப்புடன் வழங்கவில்லை எனவும் நாட்டின் நன்மையை மட்டும் கருதியே இந்தத் தகவல்களைத் தான் வழங்கினார் என்வும் அவர் தெரிவித்தார். இந்தத் தகவல்களை யார் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கினார் என்ற விவரத்தையும் என்னிடம் தெரிவித்தார். மேலும் தான் வழங்கியுள்ள தகவல்களின்படி பாதுகாப்புப் பெட்டகங்களிலுள்ள பணத்தொகைகள் பற்றிய விவரத்தையும் எனக்கு அவர் தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்புத்துறை அதிகாரி தொடர்பான விவரங்களை அவர் முதலில் தெரிவித்தார். குற்றவிசாரணைத் திணைக்கள அதிகாரிகளின் திடீர்சோதனைகளின்போது கண்டறியப்பட்ட தகவல்களைப் பார்க்கும்போது அந்த நபர் எனக்கு வழங்கிய விவரங்கள் முற்றிலும் சரியானவையாகவே காணப்பட்டன.

இரண்டாவதாக வழங்கிய தகவல்கள் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தொடர்பானதாகும். மூன்றாவதாக ஜனாதிபதி சந்திரிகா தொடர்பான தகவல்களை வழங்கினார். சந்திரிகாவின் பாதுகாப்புப் பெட்டகம் ஹற்றன் நஷனல் வங்கியின் சுதுவல்ல (மருதானையிலுள்ளது) கிளையில் உள்ளது. அது சந்திரிகாவின் பெயரில் இருக்கவில்லை. பதிலாக வேறு ஒரு பெண்ணின் பெயரில் இருந்தது. அந்தப் பெட்ட கத்தை உடைத்துத் திறந்து பார்த்தால் அதிலிருக்கும் பெருந் தொகையான பணத்தின் உரிமையாளர் யார் என்பது தொடர்பான விவரத்தை அந்தப் பெண் வெளியிட நேரிடும் என எனக்குத் தகவல் தந்தவர் தெரிவித்தார்.

அந்தப் பாதுகாப்புப் பெட்டகத்தில் எவ்வளவு பணம் உள்ளது என்பதையும் அவர் அறிந்திருந்தார். பெருந்தொகையான பணம் இருந்தது என அவர் கூறியபோதிலும், எவ்வளவு பணம் இருந்தது என்பது எனக்குத் தற்போது ஞாபகத்திலில்லை.

**ரணிலின் வேறுவிதமான அணுகுமுறை**

அந்தத் தகவல்கள் ரணில் விக்கிரமசிங்கவின் கைகளுக்குக் கிடைத்த பின்னரே தகவல் தந்தவர் என்னுடன் தொலைபேசியில் உரையாடினார். முன்னர் தரப்பட்ட இரண்டு தகவல்கள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான அணுகுமுறைகளை மேற்கொண்டபோதிலும் மூன்றாவது தகவலில் குறித்த பாதுகாப்புப் பெட்டகத்தில் உண்மையான உரிமையாளர் சந்திரிகா என்பதால் ரணில் வேறுவிதமான அணுகுமுறையை மேற்கொள்ளுவாரா? என அவர் என்னிடம் கேட்டார்.

என்னால் அதற்கு நேரடியான பதிலை வழங்கமுடியவில்லை. அரசியல்வாதியான அனுருத்தவின் பாதுகாப்புப் பெட்டகத்தை உடைத்துப் பார்க்கும் அணுகுமுறை பொருத்தமானது எனில், சந்திரிகா விடயத்தில் மட்டும் பிறிதான அணுகுமுறையை எவ்வாறு கடைப்பிடிப்பது என நான் வினவியபோது ''இது எனது உயிருடன் தொடர்பான பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் நீங்கள் அனுசரணை வழங்கவேண்டும்'' என அவர் என்னிடம் கோரினார்.

நான் இந்த விடயத்தில், ஒருபுறம் ஒதுங்கி நடப்பவற்றைக் கவனிப்பவர் என்பதால் தேவையற்ற விதத்தில் அதில் கைபோட விரும்பவில்லை என்று நான் கூறினேன். என்றாலும், தான் இவற்றையெல்லாம் நாட்டின் நன்மைகருதிச் செய்தார் எனவும் தன்னைப் போன்றவர்களைப் பாதுகாப்பது என்னைப் போன்றவர்களின் கடமை எனவும் நான் இது குறித்து ரணிலுடன் உரையாட வேண்டுமெனவும் அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார்.

அந்த நபர் ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பெட்டகம் தொடர்பான தகவல்களை வழங்கியிருந்தார் என்றபோதிலும் ஏனையவர்கள் தொடர்பாக மேற்கொண்ட கடுமையான அணுகுமுறையைப் போன்று சந்திரிகாவின் பாதுகாப்புப் பெட்டகம் தொடர்பாகக் கடும் அணுகுமுறையை ரணில் விக்கிரமசிங்க அனுசரிக்காதமை அவருக்கு அச்சத்தையும் சந்தேகத்தையும் உருவாக்கிய காரணத்தாலேயே அவர் என்னுடன் தொடர்புகொண்டார் என்பதே எனது கணிப்பாக இருந்தது.

எனக்குத் தகவல் வழங்கிய நபர் குறித்து நான் கவலையடைந்தேன். அவர் இந்தத் தகவல்களை வழங்கியதன் மூலம் முறையற்ற விதத்தில் சொத்துகளைச் சேர்த்த அரசியல்வாதிகளை சட்டத்தின்முன் நிறுத்த முயற்சிக்கிறார் என நினைத்தேன். அவ்வாறான ஒருவரைப் பரிதவிக்க விடக்கூடாது என நான் நினைத்தேன்.

அப்போது இரவு 10 மணியைக் கடந்திருந்தது. எனவே, இந்த விடயம் குறித்து அவருக்காக மறுநாள் ரணில் விக்கிரமசிங்க வுடன் தொடர்புகொள்கிறேன் என அவருக்கு வாக்களித்தேன். இந்த விடயம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவுடன் என்னைக் கதைக்க வைக்கவேண்டிய தேவை அவருக்கு இருந்தது என என்னால் ஊகிக்க முடிகிறது.

அதாவது, சந்திரிகாவின் பாதுகாப்புப் பெட்டகம் தொடர்பாகக் கடும் அணுகுமுறையை மேற்கொள்ளாவிடின் அவர் விடயத்தில் ரணில் மென்மையான அணுகுமுறையைக் கையாள்கிறார் என்ற விடயம் எனக்கும் தெரிந்திருக்கவேண்டும் என அந்த நபர் விரும்பினார்.

மறுநாள் காலை 7.30 மணிக்கு ரணிலைத் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். மறுமுனையில் கதைத்தவர் எனது பெயர் மற்றும் தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுக்கொண்டு, பின்னர் பிரதமர் தொடர்புகொள்வார் எனத் தெரிவித்தார்.

சுமார் அரைமணி நேரத்தில் தொலைபேசியில் என்னுடன் தொடர்புகொண்டார். அனுருத்த ரத்வத்தையின் பாதுகாப்புப் பெட்டகம் தொடர்பான தகவல்களை வழங்கியவர் தானா ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பெட்டகம் தொடர்பான தகவல்களையும் வழங்கியுள்ளார் என ரணிலிடம் நான் வினவினேன்.

மேலும் அனுருத்த ரத்வத்தையின் பாதுகாப்புப் பெட்டகம் தொடர்பாக அனுசரித்த அதே அணுகுமுறையை ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பெட்டக விடயத்திலும் அனுசரிக் கப்படுமா? என நான் ரணிலிடம் விசாரித்தேன். எனது கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாகத் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க அன்று அனுருத்த ரத்வத்தையின் பாதுகாப்புப் பெட்டக விடயத்தில் அனுசரித்த கடும்போக்கை சந்திரிகாவின் பாதுகாப்புப் பெட்டக விடயத்திலும் அனுசரித்திருந்தால் ஒருவேளை சந்திரிகா பதவியை இழக்க நேர்ந்திருக்கும்.

இன்று பதவியில் இருந்து விலகுவதற்குப் பதிலாக அன்றே பதவியில் இருந்து விலக்கப்படநேர்ந்திருக்கும். ரணிலின் அந்த முடிவு காரணமாக நாட்டின் இரத்தத்தை உறிஞ்சிய மக்களின் தலைவி மேலும் சில ஆண்டுகள் அரியாசனத்தில் வீற்றிருக்க வாய்ப்பு ஏற்பட்டது.

தவறான விதத்தில் சொத்துகளைச் சேர்த்த மேலும் முக்கியமான 9 பேர் பற்றிய தகவல்களையும் நாடு அறிய வாய்ப்பில்லாமல் போயிற்று.

*(எதிர்பார்த்திருங்கள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மண்வளத்தைப் பாதுகாக்க சீரான முகாமைத்துவம் உடனடித் தேவை

உலகின் சனத்தொகை அதிகரித்துவருகிறது. இதன் விளைவாக நிலம் மற்றும் உணவுத் தேவையும் அதிகரித்துள்ளது.

புவிமேற்பரப்பின் பெரும் பகுதி நீர்ப்பரப்பாகவும் சிறியபகுதியே நிலப்பரப்பாகவும் காணப்படுகிறது. அதேவேளை, நிலப்பரப்பில் பெருமளவு மனித பயன்பாட்டுக்கு ஏற்றதாக இல்லாமல் பாலை நிலங்களாகவும், பனிபடர் பிரதேசங்களாகவும், மலை மற்றும் சதுப்பு நிலங்களாகவும் காணப்படுகின்றன. பயன்பாட்டில் உள்ள தரையிலிருந்து பெறப்படுகின்ற உணவே உலக மக்களின் தேவையைப் பூர்த்திசெய்கின்றது. இதன் அடிப்படையிலேயே மண்வளப் பாதுகாப்பின் அவசியம் தற்போது முக்கியத்துவம் பெற்றுவருகிறது.

**நிலப் பயன்பாடு**

குடியிருப்புகளை அமைக்க விவசாய நிலங்கள் பயன்படுத்தப் படுவதனால் அவை அளவில் குறைவடைகின்றன. நில இழப்பு தொடர்பான பிரச்சினை அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்குரிய பொதுவான பிரச்சினையாகும்.

உலக உணவு விவசாய நிறுவன அறிக்கையின்படி நகரமயமாக்கலால் 1980 - 2000 ஆண்டு காலப் பகுதியில் ஆயிரத்து 400 மில்லியன் ஹெக்ரேயர் விவசாய நிலம் இழக்கப்பட்டுள்ளது. இயற்கையாகவே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுகின்ற நிலத்தைப் பயன்படுத்தித் துரிதமாக அதிகரித்து வருகின்ற சனத்தொகையின் உணவுத்தேவையை அதிகரிக்க வேண்டிய நிலையுள்ளது. ஆனால், விவசாய நிலங்களின் பரப்பளவு குறைவடைந்துவருகின்றமை சிக்கலானதொரு நிலையைத் தோற்றுவித்துள்ளது. இந்நிலையில் விவசாய நிலங்களின் பரப்பளவை அதிகரித்தல் அல்லது புதிய நிலங்களை பயிர்செய்கையின் கீழ்க்கொண்டுவருதல் மற்றும் செறிவான பயிர்ச்செய்கை முறைகளைக் கடைப்பிடித்தல் ஆகிய இரண்டு வழிமுறைகளைக் கையாள்வதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்கப்படுகின்றது.

சனத்தொகைப் பெருக்கமும் உணவுக்கான கேள்வி அதிகரிப்பும் இணைந்து நிலப்பயன்பாட்டின் மீது பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுகின்ற விளை நிலங்களை உச்சப் பயனைப் பெறும்வகையில் பயன்படுத்தி உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்ய முற்படும் போது, புதிய நிலங்களைப் பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவர முற்படுகின்ற போதும் தவிர்க்க முடியாத வகையில் பல சூழலியல் எதிர்விளைவுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. குறிப்பாக மண்தரமிழத்தல், தரை கீழ் நீர் மாசடைதல் போன்றவை பிரதான எதிர் விளைவுகளாகக் காணப்படுகின்றன.

**மண் வளம்**

வளம் என்ற வகையில் மண் புதுப்பிக்கக்கூடியதொரு வளமாகக் கருதப்பட முடியுமாயினும் மண்ணுருவாக்கச் செயன்முறை மிகக் குறைந்த வேகத்தில் இடம்பெறும் ஒன்றாக இருக்கின்றது. அதேவேளை, மண்ணைத் தரமிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

குறிப்பிட்ட அளவு நிலத்தைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துகின்றமை, நவீன முறைகளின் பிரயோகம் போன்றன மண் தரமிழத்தலுக்குக்

## சனத்தொகைப் பெருக்கத்தால் மண்வளம் சீரழிவு அதிகரிப்பு

காரணமாகின்றன.

மண் தரமிழப்பினை மறைமுக எதிர் விளைவாகப் பெற்றுக்கொண்டு நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் அடையப்பட்ட விவசாய உற்பத்தி விருத்தி மண் தரமிழப்பின் தாக்கத்தினை மறைத்திருந்தது.

உலகளாவிய ரீதியில் 1945 - 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 12.2 மில்லியன் சதுரகிலோமீற்றர் விவசாய நிலங்கள் தீவிரமாக உற்பத்தித் திறன் வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டன. இதில் ஐரோப்பா முன்னணியிலிருந்தது. ஆபிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா போன்றவை அடுத்தடுத்த நிலைகளில் காணப்பட்டன. ஆபிரிக்காவில் இடம் பெற்றுவரும் முறையற்ற விவசாய நடவடிக்கைகளால் அது இன்று தீவிர மண்ணரிப்புப் பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளது. இலத்தீன் அமெரிக்காவில் மண் ஊட்டச்சத்து வீழ்ச்சி மற்றும் அமிலமடைதல் என்பன அதிகளவில் இடம்பெறுகின்றன. தென்னாசியாவின் பெரும் பகுதி மண்ணரிப்பால் பாதிக்கப் பட்டுள்ளது.

மண் தரமிழத்தல் என்பது "நிகழ்கால மற்றும் எதிர்காலத்தில் மண்ணுற்பத்தித் திறன் இயல்பு" என வரையறுக்கப்படுகின்றது. இத்தரமிழப்பு பண்பு ரீதியாகவோ அளவுரீதியாகவோ இடம்பெறலாம். உதாரணமாக மண்ணரிப்பு, கரைதல், திணிவசைவு போன்றவற்றால் ஏற்படும் இழப்பு அளவு ரீதியானவையாகவும் மண்வளம், தாவர ஊட்டசத்து வீழ்ச்சி, அமைப்பு ரீதியான மாற்றம், மண் தாவர விலங்கு நுண்ணுயிர் மாற்றம் போன்றவை பண்புரீதியான மாற்றங்களாகவும் குறிப்பிடப்படுகின்றன.

**மண்ணரிப்பு**

விவசாய நிலங்கள் தொடர்ச்சியாகவும் செறிவான முறையிலும் பயன்படுத்தப்படுகின்றபோது மண்ணின் தரம் இழக்கப்படுகின்றது. நவீன முறைகளைப் பயன்படுத்தித் தொடர்ச்சியாக உழுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு விவசாய நிலங்கள் உட்படுத்தப்படுகின்றபோது மண்ணமைப்பு சேதமடைந்து அரிப்புக்குள்ளாகும் தன்மை அதிகரிக்கின்றது. பொருத்தமற்ற முறையில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மண்ணரிப்பைத் தூண்டுகின்றன. குறிப்பாக வறள் அயனப் பிரதேசத்தில் இது அதிகமாக இடம்பெறுகின்றது. இப்பகுதியில் வருடாந்த மண்ணரிப்பு 75 ஆயிரம் மில்லியன் தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பகுதியில் மண்ணரிப்பு ஏற்படும்போது அரிப்பு ஏற்படும் பகுதி மண்ணின் உற்பத்தித் திறன் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. படியவிடப்படும் பகுதியின் உற்பத்தித் திறனும் பாதிக்கப்படலாம். பெயர்ச்சிப் பயிர்ச் செய்கை நடவடிக்கைக்காகவும் அளவுக்கதிகமான மந்தை மேய்ச்சல் காரணமாகவும் தாவரப் போர்வை அகற்றப்படுவதனாலும் மண்ணரிப்புத் தூண்டப் படுகின்றது.



**போசனை வீழ்ச்சி**

தொடர்ச்சியாக விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படுகின்றபோது மண் போசனை மட்டத்தில் வீழ்ச்சி ஏற்படுகின்றது. இதனால், இவ்வீழ்ச்சியினை மீள் நிரப்பு செய்து விளைச்சலை அதிகரிக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது. இதற்காக ஆரம்ப காலங்களில் இயற்கையான பசளை வகைகள் பயன்படுத்தப் பட்டு வந்தன. ஆனால், இன்றைய காலத்தில் இரசாயன வளமாக்கிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இவ்வளமாக்கிகள் உடனடி விளைவைப் பெற்றுக்கொடுப்பதால் இவற்றைப் பயன்படுத்துவதில் விவசாயிகள் ஆர்வங்காட்டுகின்றனர். விவசாயிகளுக்கு மண், பயிர்களின் இரசாயனத்தேவை, வளமாக்கிகளின் பாவனை முறை போன்றவை தொடர்பான போதிய அறிவு இல்லாத நிலையில் அவற்றை மிதமிஞ்சிய அளவில், பயன் படுத்தும் நிலையும் காணப் படுகின்றது. பூச்சி நாசினிகள், பீடை கொல்லிகள் போன்ற இரசாயனங்களின் தொடர்ச்சி யானதும் அளவுக்கு அதிகமானதுமான பாவனையால் மண்ணமைப், இரசாயன சேர்க்கை, மண்ணுயிர்கள் என்பவற்றில் தாக்கம் ஏற்படுகிறது. இவற்றின் விளைவாக உற்பத்தித் திறனில் வீழ்ச்சி ஏற்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றபோது பயிர்நிலங்கள் கைவிடப்பட வேண்டிய நிலை உருவாகலாம்.

**உவரடைதல்**

மண் உவரடைதல் நீர்ப்பாசனத்துடன் தொடர்புபட்ட பிரதான சூழல் சீரழிவாக கருதப்படுகின்றது. உலகில் ஏறத்தாழ 12 சதவீதமான நிலப்பரப்பில் நீர்ப்பாசன விவசாயம் இடம்பெறுகின்றது. இதில் அரைப் பங்குக்கும் மேற்பட்ட பகுதிகளில் மண் உவரடைதல் பிரச்சினை எதிர்நோக்கப்படுகின்றது பிரதானமாக வறள் மற்றும் அரைவறள் வலயங்களில் இப்பிரச்சினை தீவிரமானதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக தரைக்கீழ் நீரைப் பிரதான நீர்ப்பாசன மூலமாகப் பயன்படுத்தும் பகுதிகளில் மண் உவரடைதல் பிரச்சினை மிகவும் தீவிரமானதாகக் காணப்படுகின்றது. உவரடைதல் பிரச்சினையானது அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் பொதுவான் ஒன்றாகக் காணப்படுகின்றது. மண் உவரடைதல் தீவிரமடையும் போது பயிர்நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமற்றதாகி கைவிடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

**யாழ்.குடாநாட்டில்....**

இலங்கையின் யாழ்.குடாநாடு விவசாய நடவடிக்கையை பிரதானமாகக் கொண்ட பிரதேசமாகும். குறிப்பாக இங்கு தரைக்கீழ்நீரைப் பயன்படுத்தியே பயிர்ச்செய்கை இடம்பெறுகின்றது. யாழ்.குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளப் பயன்பாட்டில் 80 சதவீதம் நீர்ப்பாசனத்துக்காகக் காணப்படுகின்றது. தொடர்ச்சியான இரசாயனப் பாவனையும் இடம்பெற்று வருகின்றது. இதனால், குடாநாட்டு மண்வளம் பேணுகை தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. தரைக்கீழ் மேற்படை நீர் அதிகளவில் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தப்படுவதனால் தரைக்கீழ் நீர்ப்படையுள் உவர்நீர் கலக்கும் அபாயமும் காணப்படுகின்றது. எனவே யாழ். குடாநாட்டு மண் வளத்தைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையில் விசேட கவனம் செலுத்தி பொருத்தமான உபாயங்களை வகுத்து செயற்படவேண்டியது சம்பந்தப்பட்ட அனைவரதும் கடமையாகும்.

**தீ.யேசுதாஸ்**

### கானல்

நதியில் அவன் பெயர் எழுதி
மின்னலிடம் தூதனுப்பி
மேகத்தால் திரையமைத்து
வானத்தில் கட்டிலிட்டு
இரவோடு முத்தமிட்டு
காற்றோடு குடும்பம் நடத்தும்
கானலாக நான்...

### இதயக் கவிதை

நான் தினமும் எழுதிப் பார்க்கும்
இனிய ஒரு வரிக் கவிதை
உன் பெயர் தான்
என் இதயத்தில் நான் வரைந்த
கன்னிக் கவிதையும் நீதான்
அன்பே இன்று மட்டுமல்ல
என்றும் என் இதயத்தில்
உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும்
கவிதை நீ மட்டும் தான்

### எத்தனையோ!

உன்னைப் பார்க்கும் முன்
நான் அறியாதவை தான்
எத்தனையோ!
உன்னைப் பார்த்த பின்
நான் அறிந்தவை தான்
எத்தனையோ



-என் பிரியா

### உடைவு



உருகியுருகி
மாய்ந்து போவதில்
பயனென்ன...?


நல்ல
நிலம் எனில்தான்
நல்ல விளைச்சலையும்
எதிர்பார்க்க முடியும்

ஒப்புக்குச் சப்பாணியாக
ஆடுபவர்களை
என்ன செய்ய முடியும்?

நிலம்
வானம் பார்ப்பது
மழைக்காகவன்றி
அழிவுக் காகவல்ல

இதயம் எதிர்பார்ப்பது
அன்பையே யன்றி
வன் செயலையல்ல

ஓடுகின்ற ஆறு
கடலையே சேருகின்றது
இடையில்
தூர்ந்து போகாது விடின்....



தூர்வை அகற்றாது போனால்
ஆறென்ன
உள்ளமும்
உதவாமல்தான் போகும்

- சூரியவேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனின் தலைவணங்காத இயல்பு கொண்டது பனை
# ஏழ்பனை நாட்டின் எஞ்சிய ஒரு பகுதியே எமது ஈழம்

"அழகான அந்தப் பனைமரம்
அடிக்கடி நினைவில் வரும்"

பாவரசர் காசி ஆனந்தனாரின் அந்தப் பாடலைத் தேனிசை செல்லப்பாவின் குரலில் அடிக்கடி கேட்க நேர்வதுண்டு. பாட்டின் பொருளும் அதன் இசையும் பாலோடு தேன்கலந்து பருகுவது போன்றதோர் இன்பத்தைத் தரும். 'சக்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிவது போல்' என்கின்றனரே. அதுதான் அது! அந்தப் பாட்டின் இன்பத்தில் திளைப்பேன்; சிலகணங்கள் என்னை மறப்பேன். தமிழீழ மண் விடுதலை என்னும் உரிமையுணர்வு உள்ளத்தில் பொங்க, மெய்மயிர் சிலிர்க்கும்.

## தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியங்கள் பெருமையாகப் பேசும் சிறப்புடையது தாலம்

பனைமரம், ஈழமண்ணின் தோற்றத்தோடு ஒன்றித் தோன்றிய ஆதிமரம். பாவரசரும் அந்தப் பாடலிலே பனைமரத்தை ஈழமண்ணின் குறியீடாகக் கொண்டே பாடியுள்ளார்.

மாந்தர் தோன்றிய நிலமாகிய குமரிக் கண்டத்தைக் கடல்கொண்டழித்தபோது எஞ்சிய நிலங்களில் ஒன்றான மலைமுகடே ஈழம் அல்லது இலங்கை என விளங்குவதாக நிலவியல் ஆய்வாளர் கூறியுள்ளனர்.

குமரிக் கண்டத்தில் நாற்பத்தொண்பது நாடுகள் இருந்தன என்றும், அவை ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குணகாரைநாடு, ஏழ்குறும்நாடு என்பனவாகும் என்றும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையின் குறிப்பிடுகின்றார். ஏழ்பனை நாட்டின் எஞ்சிய ஒருபகுதியே ஈழம் என்பர் ஆய்வாளர்.

இலங்கைத்தீவின் நெடுமையைக் குறிக்கும் போது, அதன் வடமுனையாகப் பனைமுனையையும் (பருத்தித்துறைக் கடலோரமாயுள்ள முனை என்னுமிடம்) தென்னெல்லையாக மாத்தறை (மா+தறை) இல் தெய்வேந்திர முனையையும் (Dondra Head) கொள்ளுவர்.

இனி, தொல்காப்பியத்தில் 'பனாட்டு' என்னும் சொல்லுக்கு விதி கூறப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் நாட்டில் பனாட்டை யாரும் அறியார். அது, ஈழத்தில் குறிப்பாக வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் பனங்கனியைக் கறந்து பாயில் ஊற்றிப் பரவி வெயிலிற் காயவைத்துப் பதப்படுத்தி எடுக்கும் ஓர் உணவுப் பண்டமாகும். பனாட்டு முன்னாளில் ஏழைமக்களின் முக்கிய உணவாகப் பயன்பட்டது. (தொல்காப்பியர் இற்றைத் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் அல்லர் என்றும், அவர் ஈழத்தைச் சார்ந்தவராதல் வேண்டுமென்றும் தமிழத் தாத்தா கந்தமுருகேசனார் கருதினார். இன்னும் தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரஞ் செய்தவர் பெயரும், பனம்பாரனார் என்பதும் கருத்தாகும்).

ஈழத்திற்கும் பனைக்கும் உள்ள நெருங்கிய உறவுபற்றிச் சொன்னோம். இலங்கையில் தோராயமாக நூற்றுப்பன்னிரண்டு இலக்கம் பனைமரங்கள் உள்ளனவாக ஒரு கணக்கெடுப்புக் கூறுகிறது. தமிழீழத்தில் மட்டும் நூற்றுப்பதினொரு இலக்கத்து ஐம்பத்தெண்ணாயிரம் (111,58000) பனைகள் உள்ளன என்றும் அக்கணிப்பீடு கூறுகின்றது. (பனைச்செல்வம் – வடக்கு, கிழக்கு தாலமூல வள அபிவிருத்தி நிறுவனம்)



### வாழ்க்கைத் தேவைக்கு ஆதாரமானது

பனைமரம், அதன் வேர் முதலாக வெண் குருத்து வரையாகப் பல்பயனுதவி ஈழத் தமிழரின் அடிப்படைத் தேவையாகிய உணவு, உறையுள், மருந்து முதலியவற்றிக்கும் பிறவாழக்கைத் தேவைகளுக்கும் ஆதாரமாக அமைந்து வந்துள்ளதையும், வருவதையும் யாவரும் அறிவர்.

பனைமரத்தை பற்றிய நாட்டார் பாடல் ஒன்று எனது சிறுவயதில் படித்ததுண்டு:

"பனைமரமே பனைமரமே
ஏன்வளர்ந்தாய் பனைமரமே
நான்வளர்ந்த சேதியினை
நாடறியச் சொல்லிடுவேன்
படிக்க நல்ல தம்பியர்க்குப்
பட்டோலை நானாவேன்
புடைக்க நல்ல தங்கையர்க்கு
புடைசுளகு நானாவேன்.
படுத்திருக்கப் பாயாவேன்
இட்டித்திருக்கத் தடுக்காவேன்
தூரத்து வன்னிமைக்குத்
தூதோலை நானாவேன்
..............................
.............................. "

பனை மரம், தொல்காப்பியம், திருக்குறள் உள்ளிட்ட சங்க இலக்கியங்கள் எல்லாவற்றிலுமே பேசப் பட்டுள்ளமையைக் காண்கின்றோம். அது தரும் பதநீரும், கள்ளுமே பல இலக்கியங்களிலும் புகழப்பட்டுள்ளன. பனை ஓலை ஏட்டிலேயே நூல் எழுதினார்கள் என்ற வரலாற்றுச் சிறப்பான செய்தியையும் காண்கிறோம். நான் கூட அகரமுதலெழுத்தை ஏட்டிலே படித்தவன்றான். அந்நாளில், பிறப்பியக்கணியம் எழுதுவோரும் ஏட்டிலே தான் எழுதுவார்கள். ஏறத்தாழ பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான பேரிலக்கியம், சிற்றிலக்கியங்களெல்லாம் ஏட்டிலேதான் எழுதப் பட்டன.

பனை உதவிய ஏட்டில் எழுதப்பட்ட புத்தகத்தை அழகுறச் சொல்லும் பழைய பாடல் ஒன்று இது:

*எழுதுவரிக் கோலத்தார் ஈவார்க் குரியார்*
*தொழுதிமைக் கண்ணனைந்த தோட்டார் - முழுதகலா*
*நானிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்*
*பேணற் கமைந்தார் பெரிது*
*(தொல். சொல். 449 சேனா. உரை)*

புத்தகத்தைப் பெண்ணாக வர்ணித்த நயம் மிகவின்பம் பயப்பதாகும்.

தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர், 'நட்டாயிரம் பட்டாயிரம்' என்னும் பழ

## ஈழத்தமிழர் வாழ்வுக்கு ஆதாரமானதும் அதுவே

மொழிக்கிலக்காக விளங்கும் பனையின் பயனும் சிறப்பும் விளங்கத் "தாலவிலாசம் அல்லது பனைக்காவியம்" என்னும் இனிய இலக்கியம் ஒன்றை நம் தமிழ் மக்களுக்காகத் தந்துள்ளார். பனையின் எண்ணூற்றொரு பயனை எடுத்தியிம்புகிறார்.

"அண்டர்கள் நுங்கினை உண்டறிந்தால் முன்னம்
அமுதங் கடைந்திடார் ஞானப் பெண்ணே"

தேவர், நுங்கின் சுவையறிந்திருந்தால் திருபாற்கடலில் அமுதம் கடையமுற்பட்டிரா ராம்! அமுதத்தை விட நுங்கு இனிமையானதாம். அதையும் விடத் தங்கத்தாத்தாவின் கற்பனையன்றோ மிகவும் இனிக்கிறது!

ஓடியற் கூழை கல்லடிவேலன் மட்டுமோ கொண்டாடுவார்? அதை உண்டாற் கொண்டாடாதவர் யாருளர்?

### தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்தது

பனைமரம் யாருடைய பேணுகையும் இல்லாமல் வளர்வது; எந்தக் கொடிய கோடையையும் தாங்கி உயர்ந்து வளர்வது; தனித்து நின்றாலும் தளர்வறியாது; வயிரம் செறிந்தது; உறுதியானது; வீரமுள்ளது. அதனாற்றான் சேரமன்னர் பனந்தோட்டு மாலையை அணிந்து கொண்டனர். மாபாரதத்தில் மாவீரராகக் காட்சி தரும் பலராமரும் வீடுமரும் தம் வெற்றிக்கொடியில் பனையைச் சின்னமாகக் கொண்டனர் "பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது" என்று வீரம்பேசுவோர்க்கும் பனையின் உறுதிதானே உள்ளத்து உறுதியை வெளிப்படுத்த உதவுகின்றது. உலகத்தில் பனைக்கு நிகராகச் சொல்லத்தக்க மரமுமே இல்லை என்ற உண்மையை யாருணரா விட்டாலும் ஈழவிடுதலைப் போரில் நிற்கும் வீரர் நன்குணர்வர்!



"தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து அவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டி வரும் தேசியத் சொத்தாகப் பனைமரம் காணப்படுகிறது" (பனைச் செல்வம் பக்கம்: 207 – 28 ஓகஸ்ட் 2004) "வடக்கு –கிழக்கு மாகாணத்தின் தனியுரிமை மரமான ஓளடதம்"

"தமிழ் மக்களின் அடையாளத்தை அவர்களின் அகவாழ்வு நிலையிலும் புறவாழ்வு நிலையிலும் நெருக்கமான பிணைப்பினைக் கொண்டமைந்த தன்மையினையும் பண்பாட்டுக் கோலங்களையும் வெளிப்படுத்தும் போந்தை (பனை)"

"தாலமும் (பனை தமிழனும் தலைவணங்காத் தன்மையில் ஒத்தவர்கள் என ஒப்பிட்டுக் கூறப்பட்ட புற்பதி (பனை)'

(பனைச் செல்வம்: பக்கம் : 218 – பேராசிரியர் சு.மோகனதாஸ், திரு.வி.சி.தங்கவேல்)

### வீரமண்ணின் காப்பரண்

பனைமரதின் பயன்பற்றியும் சிறப்புப்பற்றியும் அறுபத்துக்குமேற்பட்ட கட்டுரைகளும் நூல்களுமாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன என அறிகின்றோம். ஒரு மரத்தைப்

பண்டிதர் வீ.பரந்தாமன்

பற்றி இவ்வாறு உரைக்கபட்டுள்ளமை, அதன் மதிப்பையும் சிறப்பையும் உணர்த்துவதோடு வியப்பளிப்பதாகவும் உள்ளது. பனைமரத் தாயே எமக்கு வாழ்வளித்தாயே: உன்னை வாயார வாழ்த்தி வணங்குவோமாக.

பொன்னி மழை வாழி பூமி நலன்வாழி
மன்னுயிர்கள் வாழி யறம்வாழி – எந்நாளும்
கற்பகம்போ லீயும் கடவுட் பனைவாழி
நற்றமிழும் வாழி நயந்து.
– நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

விடுதலைப் போர் நடக்கும் இந்த வீர மண்ணில் பனை ஒரு காப்பரணாகவும் விளங்குவதாகும். ஈழமண்ணின் ஏழை மக்களுக்குக்கெல்லாம் ஒரு செவிலித்தாய் (வளர்ப்புத்தாய்) போல் ஓங்கி நிற்கும் பனைமரத்தை மறப்போமா?

"அழகான அந்தப் பனைமரம்
அடிக்கடி நினைவில் வரும்"

---

# பயணங்கள்...

கறுக்கதை



பிஞ்சு வயதிலே ஆகாஷின் உள்ளத்தில் அந்த ஆசை குடிகொண்டிருந்தது. வெளிநாடு சென்று விரும்புகின்ற நல்வாழ்வு வாழந்து அளவில்லாத பணம் சம்பாதித்து ஆடம்பரமாக வாழ வேண்டும். என் அம்மா, சகோதரர்களை வசதிவாய்ப்புடன் வாழ வைக்க வேண்டும் இப்படி பல எண்ணங்கள் அவன் உள்ளத்திற்குள் அதிகரித்துக் கொண்டிருந்தன.

இளமையில் கல் என்பார்கள். ஆனால், வளமான வாழ்விற்கு வருந்திக் கற்பதுதான் வழியா...? வெளிநாடு சென்றால் விரும்பிய படி நானும் வாழலாம் மற்றவர்களையும் வாழவைக்கலாம் என எண்ணிக் கொண்ட ஆகாஷ் தன் [illegible] பரீட்சையுடன் ஒரு வழியாக [illegible] ஒப்பேற்றிக் கொண்டான். [illegible]நாடு செல்லும் நோக்குடன் வட்டி[illegible] களையும் விற்[illegible] கொழும்பு சென்[illegible] முகவர் ஒருவரின் துணையை நாடினான். பணமோ கணக்கில்லாமல் கரைய கடைசியில் சட்டவிரோதமாக பரீஸ் நகருக்குள் பிரவேசித்தான். அதுவரை அவன் அனுபவித்த சோதனைகளும் வேதனைகளும் சொல்லிமாளாது. ஆனாலும் புதிய தேசத்தின் வனப்பு அவற்றையெல்லாம் மறக்க வைத்தது.

வானளவாக எழுந்த கட்டடங்களும் விரிந்து கிடந்த வீதிகளும் ஆகாஷை வியப்பில் ஆழ்த்தின. அந்நகரின் இயந்திரத் தனமான அழகு அவனைப் பெரிதும் கவர்ந்தது. செயற்கை மெருகூட்டப்பட்ட இயற்கை பூஞ்சோலைகள் அவன் நெஞ்சத்தை கொள்ளையிட்டன. இப்போ யாழ்ப்பாணம் வரண்ட மண்ணாய் அவன் மனக் கண்ணில் எழுந்து நின்றது. "சீ இருண்ட நிறத்துப் பனைகளும் இடிந்த கட்டடங்களும் தவிர வேறென்ன அங்கு உண்டு" என தன் மனதிற்குள் சலித்துக் கொண்டவன் மீண்டும் பரீஸின் அழகை இரசிக்கத் தொடங்கினான்.

அந்த ரசிப்புடனே நாள்கள் நகர்ந்தன. காலத்தேரின் சக்கரங்கள் விரைவாக உருள கைப் பணம் கரைந்தது. வேலைதேடி அலைந்தான். வயிற்றுப் பசியின் முன் [illegible] கௌரவங்கள் அழிந்து போயின. தெரிந்த ஒருசில உறவுகள் விலகிப் போயின.

இந் நிலைமையில் எப்படிப்பட்ட கீழ்தரமான வேலை எனினும் செய்வதற்கு தயாராக இருந்தான் ஆகாஷ். அவன் மட்டுமல்ல அவனைப் போல் [illegible] யில் இருந்ததால் வேலை கிடைக்கவில்லை ஒளி சூழ்ந்த நகரம் அவனுக்கு இருளாய் போனது. ப[illegible]றந்த அந்த மக்களிடையே அன்பு மனம் இருக்க வில்லை. இளவயது நங்கையர், வாலிபரது நடத்தைகள் அவனது வாழ்வையே வெறுப் பூட்டின. அப்போதுதான் தாய் மண்ணின் அருமையையும் பெருமையையும் அவன் உணர்கிறான்.

"எம் கலாசாரமும் பண்பாடும் கனிவான விருந்தோம்பலும் எத்தனை இனிமையானவை"

[illegible] கதிர்மதி ஒளியி[illegible] கூழ் குடித் தல் கூட எத்[illegible]ானது. சொந்த நாட்டில் படிச்சு, உழைச்சு, [illegible] பச்ச மிளகாயும் பாலில்லாத் [illegible] குடிச்சு வாழுற அந்த வாழ்க்கை [illegible] எவ்வளவு நிம்மதியானது இருக்கிறதை விட்டு பறக்கிறதிற்கு ஆசைப் பட்ட[illegible] இதுதான் நிலைமை என்று எண்ணிய ஆகாஷின் கண்கள் நீர் சொரிந்தன.

இருக்க இருப்பிடமற்று வாழும் வழி [illegible]. பேசும் மொழி புரியவில்லை. மீளும் வழி தெரியவில்லை அவனிற்கு. பெற்றதாயுடன் பிறந்த பொன் நாட்டில் சுற்றங்கள் சேர்ந்து வாழ்ந்திடும் சுக நாளை அவன் மனம் நினைத்தாலும் பணம் இருக்க வேண்டுமே. உள்ள சொத்துகளும் அழிந்த நிலையில் என் அம்மா, சகோதரர்கள் என்ன பாடுபடுவார்கள். மீண்டும் நாடு திரும்பினால் சுற்றங்கள் மதிக்காதே என்று எண்ணியவனின் கால்கள் மீண்டும் முட்களின் மீது நடக்க.

இதயம் வலிக்க அவனது வாழ்க்கை பயணம் தொடர்கிறது. என் மகனும் வெளிநாட்டில் எம் சகோதரனும் வெளிநாட்டில் எனும் பெருமையும் இவர்களிடம் வளர்கிறது.

-தமிழின் தோழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org